விலை ரூபா: 20.00

Registered as a Newspaper in Srilanka

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
RAMCO
SLS 107 தரம் கொண்டதும்
100 வீத சாதாரண போட்லான்
சீமெந்து (O.P.C.) ராம்கோ சீமெந்து

# வலம்புரி

பக்கங்கள் : இருபது

Valampurii

சங்கு 13 வள்ளுவர் ஆண்டு 2043 கார்த்திகை 26 செவ்வாய்க்கிழமை (11.12.2012) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 358

# விடுவிக்கப்படாத 4 மாணவர்களும் வெலிகந்த முகாமிற்கு மாற்றம்!

## புனர்வாழ்வளிப்பதற்காக?

(யாழ்ப்பாணம்)

வவுனியா பயங்கரவாத குற்றத்தடுப்புப் பிரிவில் தடுத்து வைக்கப்பட்டிருந்து விடுவிக்கப்படாத யாழ்.பல்கலைக்கழக மாணவர்கள் 4 பேரும் வெலிகந்த தடுப்பு முகாமுக்கு மாற்றப்பட்டுள்ளனர். விடுவிக்கப்பட்ட 7 மாணவர்களையும் அழைத்துவர வவுனியாவுக்குச் சென்ற போதே அவர்கள் வெலிகந்தவுக்கு மாற்றப்பட்டமை தெரிய வந்துள்ளது. அம்மாணவர்களுக்கு புனர்வாழ்வளிப்பதற்காகவே அங்கு மாற்றப்பட்டுள்ள தாக கூறப்பட்டுள்ளது.

(20ஆம் பக்கம் பார்க்க)

## பாதுகாப்பு செயலருடன் பேசுவதற்கு துணைவேந்தர் முயற்சி

(யாழ்ப்பாணம்)

பயங்கரவாத குற்றத்தடுப்புப் பிரிவின ரால் கைது செய்யப்பட்டு வெலிகந்த தடுப்பு முகாமுக்கு மாற்றப்பட்டுள்ள யாழ்.பல் கலைக்கழக மாணவர்கள் நால்வரினதும் விடுதலை தொடர்பாக யாழ்.பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் வசந்தி அரசரட் ணம், பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷவுடன் பேச்சுவார்த்தை நடத்த வுள்ளார்.

(20ஆம் பக்கம் பார்க்க)

## க.பொ.த.சா/த பரீட்சை இன்று ஆரம்பம்

(கொழும்பு)

கல்விப் பொதுத்தராதரப் பத்திர சாதா ரண தரப் பரீட்சை இன்று 11ஆம் திகதி செவ் வாய்க்கிழமை ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக இலங்கைபரீட்சைகள் ஆணையாளர் டபிள்யூ. எம்.புஷ்பகுமார தெரிவித்துள்ளார்.

இம் முறை கல்விப்பொதுத்தாரதரப்பத்திர சாதாரணதரப் பரீட்சைக்கு நாடளாவிய ரீதி யில் 5 இலட்சத்து 42 ஆயிரத்து 260 பரீட்சார்த்தி கள் தோற்றவுள்ளதுடன் அவர்களில் 3 இலட்சத்து 87 ஆயிரத்து 593 பேர் பாடசாலை ரீதியாகவும்

(20ஆம் பக்கம் பார்க்க)

## மாநகர சபையின் முன்னாள் உறுப்பினர் நிசாந்தனின் வீட்டில் கைக்குண்டு வீச்சு

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாநகர சபையின் முன்னாள் உறுப் பினர் எஸ்.நிசாந்தனின் வீட்டை இலக்கு வைத்து நேற்றிரவு 9.20 மணியளவில் இனந் தெரியாத நபர்கள் கைக்குண்டு வீசியுள்ள னர்.

யாழ்.ஸ்வமன் வீதியிலுள்ள இவரின் வீட்டை இலக்கு வைத்து மோட்டார் சைக்கிளில் சென்ற நபர்களினால் கைக்குண்டு வீசப்பட் டுள்ளது.

எனினும் இந்தக் கைக்குண்டு மரத்தில் பட்டு வெடித்தமையால் முன்னாள் மாநகர சபை உறுப்பினருக்கோ அவரின் வீட்டுக்கோ எந்தவித சேதமும் ஏற்படவில்லை.

இது தொடர்பில் யாழ்.பொலிஸ் நிலையத் தில் முறைப்பாடு செய்துள்ளார். சம்பவம் தொடர்பில் பொலிஸார் நேரில் சென்றும் விசாரித்தனர்.

இதேவேளை மாநகர உறுப்பினராக இருந்த சமயத்

(20ஆம் பக்கம் பார்க்க)

## விடுதலையான மாணவர்கள் பெற்றோரிடம் ஒப்படைப்பு

(யாழ்ப்பாணம்)

பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு நேற்று முன்தினம் நள்ளிரவு விடுவிக்கப்பட்ட 7 மாணவர்களும் நேற்றைய தினம் யாழ்ப்பாணத்தில் வைத்து பெற்றோர் களிடம் ஒப்படைக்கப்பட்டனர்.

பயங்கரவாத குற்றத்தடுப்பு பிரிவினால் நேற்று முன்தினம் நள்ளிரவு விடுவிக்கப்பட்ட மாணவர்களினை யாழிற்கு கூட்டிவருவதற் காக யாழ்.பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் வசந்தி அரசரட்ணம் தலைமை யிலான 7 பேர் கொண்ட குழுவினர் வவுனியாவுக் குச் சென்றிருந்தனர்.

யாழ்.பல்கலைக்கழக குழுவில் விஞ்ஞான பீடாதிபதி பேராசிரியர் கே.கந்தசாமி, மருத்துவ பீடாதிபதி கலாநிதி எஸ்.பாலகுமார், முகாமைத் துவ பீடாதிபதி பேராசிரியர் வேல்நம்பி, கலை பீடத்தைச் சேர்ந்த பேராசிரியர் அருட்திரு. பிலேந்திரன், சிரேஷ்ட மாணவ ஆலோசகர் பேராசிரியர்

(20ஆம் பக்கம் பார்க்க)



## நீதிபதி ஷிராணிக்கு ஆதரவாக கொழும்பில் நேற்றும் ஆர்ப்பாட்டம்

(கொழும்பு)

உயர்நீதிமன்ற நீதியரசர் ஷிராணி பண்டாரநாயக்கவுக்கு எதிராக அரசாங்கம் கொண்டு வந்துள்ள பதவி நீக்க கண்டன நடைமுறை வாபஸ் பெறப்பட வேண்டும் என்று வலியுறுத்தி அரசியல் கட்சிகள் மற்றும் சிவில் சமூகத்தினர் ஆர்ப்பாட்டம் ஒன்றை நடத்தியுள்ளனர்.

கொழும்பில் நூற்றுக்கணக்கானவர்கள் கூடி பதாகைகளை ஏந்திய படியும் கோஷமிட்டபடியும் ஆர்ப்பாட்டம் செய்துள்ளனர். அரசியல் சாசனத் தில் தெரிவிக்கப்பட்டுள்ள விதிகளை மீறி அரசாங்கம் தலைமை நீதி பதியை பதவியிறக்க முயல்கிறது என இந்த ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்ட ஐக்கிய தேசியக் கட்சியின் துணைத் தலைவர் சஜித் பிரேமதாஸ குற்றம் சாட்டினார்.

(20ஆம் பக்கம் பார்க்க)

வாழ்த்துகிறோம்

க.பொ.த.சாதாரண தரம் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்கள் அனைவரும் திறமையான பெறுபேறுகளை பெறவேண்டும் என வாழ்த்துகிறோம்.




## பிரதம நீதியரசருக்கு ஆதரவாக வடமாகாண சட்டத்தரணிகள் 4 நாட்கள் பணி பகிஷ்கரிப்பு

(யாழ்ப்பாணம்)

இலங்கையின் பிரதம நீதியரசர் ஷிராணி பண்டாரநாயக்கவுக்கு எதிராக பாராளுமன்ற தெரிவுக்குழுவினால் எடுக்கப்பட்ட முடிவு தொடர் பிலும், அக்கூட்டத் தொடரில் இடம்பெற்ற சம்ப வங்களிற்கு எதிர்ப்புத் தெரிவித்தும் வட மாகாண சட்டத்தரணிகள் இன்றிலிருந்து எதிர்வரும் 4 தினங்கள் பணிப்புறக்கணிப்புப் போராட்டத் தில் ஈடுபடப்போவதாக அறிவித்துள்ளனர்.

பிரதம நீதியரசர் ஷிராணி பண்டாரநாயக்க விற்கு எதிராக நாடாளுமன்ற தெரிவுக்குழு வினால் சுமத்தப்பட்டகுற்றச்சாட்டுகளிற்கு அண்மையில் கண்டனத் தீர்மானம் ஒன்றினை நிறைவேற்றிய யாழ்.சட்டத்தரணிகள் சங்கம் தற்போது இவ் 4 நாள் பணிப்புறக்கணிப்பு போராட்டத்

(20ஆம் பக்கம் பார்க்க)

## யாழில் 45 பேர்வரை கைது? 20 முறைப்பாடுகளே பதிவு!

(யாழ்ப்பாணம்)

பயங்கரவாத நடவடிக்கைகளுடன் தொடர்பு டையவர்கள் என்ற சந்தேகத்தின் பேரில் கொழும்பிலிருந்து வருகை தந்த பயங்கர வாத குற்றத்தடுப்புப் பிரிவினரால் யாழ்.மாவட் டத்திலிருந்து கைது செய்யப்பட்டவர்கள் தொடர்பாக நேற்றுத் திங்கட்கிழமை மாலை வரை 20 முறைப்பாடுகள் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவிற்கு கிடைக்கப் பெற்றுள்ளதாக இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ்.பிராந்திய காரியாலயத் தின் இணைப்பாளர் ரி.கனகராஜ் தெரிவித் தார்.

கடந்த சில நாட்களாக யாழ்.மாவட்டத்தி லிருந்து பலர் கைது செய்யப்பட்டு வருகின்ற னர். இந்தக் கைதுகளுடன் தொடர்புடைய பயங் கரவாத குற்றத்தடுப்புப் பிரிவுத் திணைக்களத் தினால் இதுவரை கைது செய்யப்பட்டவர்களின் எண்ணிக்கை உத்தியோகபூர்வமாக வெளி யிடப்படவில்லை.

(20ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காணாமல் போனோரை கண்டறிய மன்னாரில் மாபெரும் பேரணி




(மன்னார்)

காணாமற்போன மற்றும் கடத்தப்பட்ட உறவுகள் கண்டறியப்பட வேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்து மன்னார் பிரஜைகள் குழு மற்றும் தேசிய மீனவ ஒத்துழைப்பு பேரவை ஆகியவற்றின் அனுசரணையுடன் காணாமல்போன உறவுகளைத் தேடும் குடும்பங்களின் சமாசம் ஏற்பாடு செய்திருந்த மாபெரும் ஆர்ப்பாட்டம் நேற்று இடம் பெற்றது.

இவ்வார்ப்பாட்டப் பேரணி நேற்று காலை 10 மணியளவில் மன்னார் செபஸ்ரியார் பேராலய மண்டபத்தில் விசேட கூட்டத்துடன் ஆரம்பமாகி மன்னார் பொலிஸ் நிலைய வீதியூடாக மன்னார் பஸார் பகுதியைச் சென்றடைந்தது.

பின்னர் மன்னார் மாவட்டச் செயலகத்தை சென்றடைந்தது மாவட்ட மேலதிக அரசாங்க அதிபரிடம் ஜனாதிபதிக்கு கையளிக்கும் முகமாக மகஜரொன்றும் கையளிக்கப்பட்டது.

இதேவேளை காணாமற்போன மற்றும் கடத்தப்பட்டவர்களின் உறவினர்கள் தமது உறவுகளை விடுதலை செய்யும்படி கோசங்களை எழுப்பியதோடு பலவித வாசகங்கள் எழுதப்பட்ட பதாகைகளை ஏந்திய வாறு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

கடந்த பல ஆண்டுகளாக கைது செய்யப்பட்ட இனந் தெரியாதோர் என்ற போர்வையில் கடத்தப்பட்ட தமது உறவுகளின் இருப்பிடம் இதுவரை அறியப்பட முடியாமல் உள்ளதுடன் அவர்கள் உயிருடன்உள்ளனரா? இல்லையா? என்பது கூட இன்று வரை மர்மமாகவே உள்ளது.

எனினும் இதுவரை இவர்கள் மீள விடுவிக்கப்படவோ சட்டத்தின் முன் நிறுத்தப்படவோ இல்லை. இவர்களை விடுவித்து உறவினர்களிடம் ஒப்படைக்கும்படியும் அவர்களில் குற்றம் இருந்தால் சட்டத்தின் முன் நிறுத்தும்படியும் கோரி உலக மனித உரிமைகள் தினமான நேற்று குறித்த ஆர்ப்பாட்டப் பேரணி நடத்தப்பட்டது.

இவ்வார்ப்பாட்டம் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்களான எஸ். வினோநோதராதலிங்கம், சிவசக்திஆனந்தன்மற்றும்காணாமல் போனவர்களின் உறவினர்கள், மன்னார் பிரஜைகள் குழுவின் உறுப்பினர்கள், தேசிய மீனவ ஒத்துழைப்பு பேரவையின் மன்னார் மாவட்ட இணைப்பாளர், தேசிய மீனவ ஒத்துழைப்பு பேரவையின் அமைப்பாளர், பௌத்த குருமார்கள், அருட்தந்தையர்கள், மன்னார் நகரசபை தலைவர், உறுப்பினர்கள் என ஆயிரக்கணக்கானவர்கள் இதில் கலந்து கொண்டனர். (எ-11)

# இந்திய மீனவர்கள் 37 பேரும் விடுதலை

(திருகோணமலை)

புல்மோட்டை கடற் பரப்பில் மீன்பிடித்த குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட 37 இந்திய மீனவர்களும் நேற்று திங்கட்கிழமை விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

இந்திய மீனவர்கள் 40 பேரும் திருகோணமலை நீதவான் ஏ.எச்.எம். அஷ்கர் முன்னிலையில் ஆஜர் செய்யப்பட்டனர். இதன் போதே இவர்கள் விடுதலை செய்யப் பட்டதுடன் ஐந்து ரோலர் படகுகளை விடுவிக்குமாறு துறைமுக பொலிஸாருக்கு நீதவான் உத்தர விட்டார்.

விடுவிக்கப்பட்ட 40 இந்திய மீனவர்களையும் கொழும்பிலுள்ள இந்திய உயர் ஸ்தானிகராலய விஸா அதிகாரி ரமேஷ் ஐயர் துறைமுக பொலிஸாரிடமிருந்து பொறுப்பேற்றுக் கொண்டார்.

இந்த மீனவர்கள் திருகோணமலை கிறிஸ்வ வாலிபர் சங்க மண்டபத்தில் தங்கவைக்கப்பட்டுள்ளனர். இவர்களது படகுகளை இன்று கடற்படையினரிடம் இருந்து பொறுப்பேற்றவுடன் அவர்களை திருப்பி அனுப்புதற்கான நடவடிக்கைகளை துறைமுக பொலிஸார் மேற்கொண்டுள்ளனர். (எ-11)

# அனைத்து மாணவர்களுமே வெலிகந்தைக்கு ஏற்றப்பட்டனர்

(வவுனியா)

வவுனியா குற்றத்தடுப்புப் பிரிவில் தடுத்து வைக்கப்பட்டிருந்த 11 மாணவர்களும் நேற்று முன்தினம் இரவு வெலிகந்தைக்கு கொண்டு செல்லத் தயாராக வைக்கப்பட்டிருந்ததாக தகவலறிந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

11 மாணவர்களும் வெலிகந்தைக்கு ஏற்றத் தயாரான நிலையில் இருந்த போது இதுகுறித்து துணைவேந்தருக்கு உடனடியாக தெரிவிக்கப்பட்டது.

இந்நிலையில் துணைவேந்தர் உரிய தரப்பினர்களுடன் தொடர்பு கொண்டு உரையாடியதைத் தொடர்ந்தே 7 பேர் உடனடியாக விடுவிக்கப்பட்டதாக தெரிவிக்கப் பட்டது.

எனினும் அப்போது ஏனைய 4 மாணவர்களும் வெலிகந்தவுக்கு கொண்டு செல்லப்படவில்லைஎனவும் வவுனியாவுக்குச் சென்ற பின்னரே அவர்கள் அங்கு ஏற்றப்பட்டமை தெரிய வந்ததாகவும் கூறப்பட்டது. (எ)

# இந்திய வாகனங்களுக்கு இலங்கையில் கடும்வரி

(கொழும்பு)

இந்தியாவில் இருந்து இறக்குமதி செய்யப்படும் கார்கள் உள்ளிட்ட வாகனங்களுக்கான சுங்க வரியை இலங்கை பலமடங்கு உயர்த்தியிருப்பது இந்திய ஆட்டோமொபைல் தொழில் துறையினருக்கு பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

இது தொடர்பாக இலங்கை அரசுடன் பேசித் தீர்வு காண முயற்சி மேற்கொள்ளப்படும் என இந்திய அரசு அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இந்திய ஆட்டோமொபைல் துறைக்கு இலங்கை மிக முக்கியமான வாடிக்கையாளர் நாடு ஆகும்.

கடந்த ஆண்டு மட்டும் 100 மில்லியன் டாலர் அளவுக்கு இந்திய கார் மற்றும் பிற வாகனங்கள் இலங்கைக்கு ஏற்றுமதியாகியுள்ளன. அந்த நிலையில், இலங்கையின் திடீர் முடிபு இந்திய ஆட்டோமொபைல் உற்பத்தியாளர்களுக்கு பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

இந்தியாவில் இருந்து இறக்குமதி செய்யப்படும் பயணிகள் கார் மீதான சுங்க வரியை 73 சதமும், மூன்று சக்கர வாகனங்கள் மீதான வரியை 45 சதமும் உயர்த்தியது.

வர்த்தகப் பயன்பாட்டு வாகனங்கள் மற்றும் இரு சக்கர வாகனங்கள் மீதான வரியும் பல மடங்கு உயர்த்தப்பட்டுள்ளது.

இது எந்த அளவுக்கு தாக்கத்தை ஏற்படுத்தியிருக்கிறது என்று கருத்துத் தெரிவித்த இந்திய ஆட்டோமொபைல் உற்பத்தியாளர் சங்கத்தின் பிரதிநிதி சுகோதோ சென், கடந்த ஏப்ரல் மாதம் பயணிகள் கார் மீதான இறக்குமதி சுங்க வரியை இலங்கை அரசு திடீரென உயர்த்தியது. கடந்த நவம்பர் மாதம் வர்த்தக வாகனங்கள் உள்ளிட்ட பிற வாகனங்கள் மீதான வரியையும் உயர்த்திவிட்டது.

இது இந்திய ஏற்றுமதியில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது. அடுத்த ஜனவரியில் இலங்கையில் நடத்தத் திட்டமிட்டிருந்த ஆட்டோமொபைல் கண்காட்சியையும் ஒத்திவைத்திருக்கின்றோம். காரணம் இலங்கையில் ஆட்டோமொபைல் முகவர்கள், இந்திய வாகனங்களை விற்க முடியாததால் அவற்றை ஏற்க மறுப்பதாக தயாரிப்பாளர்கள் கூறுகிறார்கள் என்றார்.

இலங்கை அரசு, அன்னியச் செலாவணியை அதிகரிக்கும் முயற்சியில் இந்த நடவடிக்கையை எடுத்திருப்பதாகவும் தெரிவித்தார். அதேநேரத்தில், ஜப்பான் உட்பட மற்ற ஆசிய நாடுகளில் இருந்து இறக்குமதி செய்யப்படும் வாகனங்களுக்கான வரியை இலங்கைஅரசு குறைத்திருப்பது எப்படி என்று கருத்துத் தெரிவித்த சுகோதோ சென், எஃப்.டி.ஏ எனப்படும் தடையற்ற வர்த்தக உடன்பாட்டின்படி, இந்தியாவுடனான ஒப்பந்தத்தில், வாகனங்கள் சேர்க்கப்படவில்லை.

ஆனால், ஜப்பான், சீனா போன்ற நாடுகளுடனான ஒப்பந்தங்களில் வாகனங்களையும் இலங்கை சேர்த்துள்ளது. இதுதொடர்பாக இந்திய அரசின் வர்த்தகத்துறை அதிகாரிகளை சந்தித்துப் பேசியிருக்கிறோம் என்றார்.

அதேபோல், சீன நிறுவனங்கள் இரண்டு கார் தயாரிப்பு ஆலைகளை அமைக்க இலங்கை அரசு அனுமதியளித்திருப்பதாக வந்திருக்கும் செய்திகள் தொடர்பாகவும் கவனிக்குமாறு இந்திய அதிகாரி களைக் கோரியிருப்பதாக சுகோதோ சென் தெரிவித்தார்.

இலங்கைக்கு ஏற்கெனவே ஏற்றுமதியான இந்திய வாகனங்களை அந்நாட்டு முகவர்கள் இந்தியாவுக்குத் திருப்பியனுப்பவோ அல்லது வேறு நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யவோ நடவடிக்கை எடுத்து வருவதாகவும் சுகோதோ சென் தெரிவித்தார். (எ-11)

# விடுதலையை வலியுறுத்தி நேற்று ஆர்ப்பாட்டம்

(யாழ்ப்பாணம்)

மனித உரிமைகள் செயற்பாட்டாளர்களான லலித் மற்றும் குகன் ஆகியோர் கடத்தப்பட்டு நேற்றுடன் ஒரு வருடம் பூர்த்தியாகியுள்ள நிலையில் அவர்களை விடுதலை செய்யக்கோரி நேற்று ஆர்ப்பாட்ட ஊர்வலம் ஒன்று மேற்கொள்ளப் பட்டது.

முன்னிலை சோசலிசக் கட்சியினால் ஏற்பாடு செய்யப்பட்ட இந்த ஆர்ப்பாட்டத்தில் பல நூற்றுக்கணக்கானோர் கலந்து கொண்டதுடன் லலித், குகன் ஆகியோரின் விடுதலையை வலியுறுத்தி கோஷமிட்டதுடன் அரசியல் கைதிகளின் விடுதலையினையும் வலியுறுத்தினர். (எ-11)

# விபத்தில் காயம்

(யாழ்ப்பாணம்)

சிறியரக வாகனமும் சைக்கிளும் விபத்துக்குள்ளானதில் இளைஞர் ஒருவர் படுகாயமடைந்துள்ளார்.

இச் சம்பவம் நேற்று மாலை யாழ்ப்பாணம் ஐந்து சந்திப் பகுதியில் இடம்பெற்றுள்ளது.

இதில் சுழிபுரத்தை சேர்ந்த ஆர். செந்தில்குமார் (வயது 20) என்பவரே படுகாயமடைந்த நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக நேற்று மாலை 6.20 மணியளவில்அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இது தொடர்பாக யாழ்ப்பாண பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (எ-11)

# தேவாலயம் மீது தாக்குதல்

(ஹம்பாந்தோட்டை)

ஹம்பாந்தோட்டை, வீரகட்டிய பிரதேசத்தில் கிறிஸ்தவ தேவாலயம் ஒன்றின் மீது பௌத்த பிக்குகள் தலைமையில் குழுவினர் தாக்குதல் நடத்தியுள்ளனர்.

நேற்றுமுன்தினம் காலை தேவாலயத்தில் பூசை நடந்து கொண்டிருந்த நேரத்தில் பௌத்த பிக்குகள் சுமார் 80 பேர் தலைமையில் வந்த ஆயிரம் பேர் அடங்கிய கும்பல் ஒன்று தேவாலயத்துக்குள் வலுக்கட்டாயமாக நுழைந்து அங்கிருந்த வாகனங்களுக்குத் தீ வைத்தும் தேவாலயத்துக்குள் இருந்த கண்ணாடிகளையும் பிற பொருட்களையும் உடைத்து சேதப்படுத்தப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

தாக்குதலின் போது தேவாலயத்தில் பிரார்த்தனைசெய்து கொண்டிருந்தவர்கள் சிலர் காயமடைந்துள்ளதாகவும், பலர் உளரீதியாகப் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

இத்தாக்குதலின் போது ஆறு இலட்சம் ரூபாயிற்கு மேற்பட்ட பொருட் சேதங்கள் ஏற்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் கூறினார். (எ-11)

# எச் என் பிக்கு இன்று 40 வயது

(யாழ்ப்பாணம்)

ஹற்றன் நஷனல் வங்கியின் 40-ம் ஆண்டு நிறைவு விழா இன்று நாடளாவிய ரீதியில் கொண்டாடப் படுகிறது.

1972-ம் ஆண்டு ஆரம்பிக்கப் பட்ட இவ் வங்கி தொடர்ந்து திறம்பட செயற்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (எ-11)

பிள்ளையார் இன்
இன்றுமுதல் அதி விசேட 50 % விலைக்கழிவுடன் தரமான சைவ உணவுகள் எமது உணவகத்தில் நிறைவான சேவையுடன் காலை, மாலையில் வழங்கப்படும்.
50% கழிவு
இன்றைய விசேட உணவு :-
பூரி உருளைக்கிழங்கு கறியுடன் ரூ 70/-
சப்பாத்தி உருளைக்கிழங்கு கறியுடன் ரூ 70/-
(C-1660) தொடர்புகளுக்கு : இல. 31. மானிப்பாய் வீதி. யாழ்ப்பாணம். 021 222 2829

பெயர் மாற்றம்
புத்தூர் மேற்கு கலைமதியைச் சேர்ந்த திருமதி செல்லத்துரை பவளம் ஆகிய நான் இன்று முதல் எனது பெயரை திருமதி செல்லத்துரை இராசாத்தி என்றவாறு மாற்றியுள்ளேன் என்பதை அறியத் தருகின்றேன்.
செல்லத்துரை இராசாத்தி
கலைமதி,
புத்தூர் மேற்கு.
(1118)

செல்லா சினிமா யாழ்ப்பாணம்


10.30, 2.30, 6.30, 9.30

பதவி வெற்றிடம்
இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்
- Account's Clark (Travels Service இல் வேலை பார்ப்பதற்கு கணினி அறிவுடையோர்)
- Office Manager (நிர்வாகத்தை நடத்தக் கூடியவர்)
- பலசரக்கு கடையில் (Grosary) (அனுபவமுள்ளவர்கள்)
- இரவுக் காவலாளி.

சுயவிபரக் கோவையுடன் நாளை 12.12.2012 (புதன்கிழமை) காலை 10.00 மணிக்கு சமுகம் தரவும்.

RainBow Travels
இல. 30/2. 3ஆம் ஒழுங்கை, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.
(ராசி கலைக்சனுக்கு அருகாமையில் உள்ள ஒழுங்கை)
T.P. 077 8710732, 021 221 9596
(C-1750)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்று ஒரு தகவல்

## அரசன் கற்றுத்தந்த பாடம்

ஒரு காட்டில் குருவானவர் இருந்தார். அவர் ஒரு சந்நியாசி. அவரிடம் சந்நியாசிகள் நிறையப் பேர் சீடர்களாக இருந்தார்கள்.

ஒருநாள் இரவு அந்தக்குரு தமது சீடர்களில் ஒரு சந்நியாசியை அழைத்து, "நீ இப்போது உடனே அரண்மனைக்குப் புறப்பட்டுப் போ... அங்கு அரசனின் அவையில் இருந்து ஞானம் பெற்று வா" என்று கூறினார்.

"குருவே! இந்த ஆசிரமத்தில் நான் கற்றுக்கொள்ள முடியாததை அரண்மனையில் எப்படிப் போய் கற்றுக்கொள்ள முடியும்" என்று சீடர் வின்வினார்.

"பேசாமல் நான் சொல்வதைக் கேள்... மற்றவையெல்லாம் அங்கே போய் அரசனைக் கேட்டுக்கொள்" என்று குரு கூறினார்.

வேறுவழி தெரியாமல், அந்த சந்நியாசி அரண்மனைக்குச் சென்றார்.

அங்கே போய் பார்த்தால், எல்லோரும் மது மயக்கத்தில் நடனமாடிக் கொண்டிருந்தார்கள். இதைப்பார்த்ததும் அவருக்கு அதிர்ச்சி.

அவர்களின் நிலையைப் பார்த்ததும் இவருக்கு மிகவும் சங்கடம். "நம்முடைய குருநாதர் இப்படி அவமானப்படும்படி செய்து விட்டாரே..." என்று அவர் நினைத்தார்.

இருந்தாலும் அங்கிருந்த அரசன் சந்நியாசியை வரவேற்று உபசரித்தார். அத்துடன் "நீங்கள் கட்டாயமாக இன்றிரவை இங்கேயே செலவிட வேண்டும்" என்றும் கேட்டுக் கொண்டார்.

"இன்றிரவு நான் இங்கு தங்குவதா; இது என்ன அர்த்தமற்ற செயல்" என்று சந்நியாசி வினவினார்.

இருந்தாலும் சந்நியாசியை அரசன் விடுவதாக இல்லை...

"நாளை காலை குளித்து விட்டு காலை உணவு அருந்திய பின் போகலாம்" என்றார்.

அரை மனதுடன் சந்நியாசி "சரி" என்று பதில் கூறினான்.

அன்றிரவு பூராகவும் சந்நியாசிக்கு நித்திரை வரவில்லை. "இந்த இடத்தில் நான் எப்படி ஞானம் பெற முடியும்?" என்று ஆச்சரியத்துடன் யோசித்துப் பார்த்தார்.

காலையில் எழுந்து இருவரும் அரண்மனைக்குப் பின்னால் இருக்கும் நதியில் குளித்து விட்டு வருவதற்காகச் சென்றனர்.

அந் நதியில் நீராடிக் கொண்டிருக்கும் வேளையில் திடீரென ஒரு பயங்கரக் கூச்சல் சத்தம் ஒலித்தது.

என்னவென்று பார்த்தால், அரண்மனை தீப்பற்றி எரிந்து கொண்டிருந்தது.

அப்போது அரசன் சந்நியாசியிடம் "அதோ... பார்த்தீர்களா?" என்று காட்டினார்.

சந்நியாசி நிமிர்ந்து பார்த்தான்... வானளாவிய தீப்பிழம்புகள் காட்சியளித்தன.

உடனே சந்நியாசி அரண்மனையை நோக்கி ஓட ஆரம்பித்தான்.

"எதற்காக அங்கே ஓடுகிறீர்கள்?" என்று மன்னன் வினவினார்.

"அரண்மனையில் என்னுடைய ஒரு துணி உள்ளது. அது எரிந்து விடுமே என்ற அவசரத்தில் ஓடுகிறேன்" என்று சொல்லிக் கொண்டே துறவி ஓடினார்.

அப்படி ஓடிக்கொண்டிருக்கும் போது அவரது மனதில் ஒரு கீறல் விழுந்தது.

அதாவது, "அரசனின் அரண்மனையே தீப்பிடித்து எரிகிறது. நானோ ஒரு சிறிய துணி எரிந்து விடும் என்பதற்காக ஓடிக் கொண்டிருக்கிறேனே..." என்று நினைத்தான்.

உடனே அவன் அரசன் இருந்த இடத்திற்கு திரும்பி மறுபடியும் சென்றார்.

அங்கே தண்ணீரின் மீது அரசன் நின்று கொண்டு சிரித்தார்.

அவரிடம் " அங்கே உங்களுடைய அரண்மனையே தீப்பிடித்து எரிகிறது. நீங்கள் அப்படி ஒன்றுமே நடக்காத மாதிரி சிரித்துக் கொண்டிருக்கிறீர்களே... இதை என்னால் புரிந்து கொள்ள முடியவில்லை" என்று துறவி கூறினார்.

இப்போது அரசன், "நான் அந்த அரண்மனையை என்னுடையதாகக் கருதியிருந்தால், இந்நேரம் இங்கே நின்றிருக்கமாட்டேன். அரண்மனை என்பது, நான் பிறப்பதற்கு முன்பும் அரண்மனையாகத்தான் இருந்தது. நான் இல்லாமல் போன பின்னர் அரண்மனை இருக்கும். அப்படியிருக்கும் போது அது எப்படி என்னுடையதாக இருக்க முடியும்? நீங்கள் துணியை உங்களுடையதாகவும், அரண்மனையை என்னுடையதாகவும் நினைத்தீர்கள். அதனால் தான் அதன் பின்னால் ஓடுகிறீர்கள்" என்றார்.

அதைக் கேட்டதும் சந்நியாசிக்கு, "மனிதன் தன்னுடைய நோக்கதினாலேயே அடிமையாகிறான். அந்த நோக்கத்தை மாற்ற வேண்டும். தகர்க்க வேண்டும். அப்படி செய்தால் உலக பந்தங்களில் இருந்து விடுதலை பெற முடியும்" என்ற தெளிவு ஏற்பட்டது.

*தென்கச்சி கோ.சுவாமிநாதன்*

# சர்வதேச ம.உ.தினத்தை முன்னிட்டு சிவில் சமூக பிரதிநிதிகளுடன் சந்திப்பு

(யாழ்ப்பாணம்)

சர்வதேச மனித உரிமைகள் தினத்தை முன்னிட்டு இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ்ப்பாணப் பிராந்திய காரியாலயமானது நாளை மறுதினம் வியாழக்கிழமை காலை 9 மணிக்கு இலக்கம் 286, பிரதான வீதியில் அமைந்துள்ள கலைத்தூது மண்டபத்தில் அரச மற்றும் சிவில் சமூக பிரதிநிதிகளுடனான குழு கலந்துரையாடல் ஒன்றை ஏற்பாடு செய்துள்ளது.

இந்த கலந்துரையாடலில் சிவில் மற்றும் அரசியல் உரிமைகள் சமூக கலாசார மற்றும் பொருளாதார உரிமைகள், பெண்கள் உரிமைகள், கருத்து வெளிப்பாட்டு சுதந்திரம், (மொழிவுரிமைகள்) என்பன தொடர்பில் கருத்துரைகள் இடம்பெறவுள்ளன. இந்த கலந்துரையாடல் நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். மேல் நீதிமன்றம் முன்னாள் நீதிபதி இ.த. விக்னராஜா கலந்து சிறப்பிக்கவுள்ளார். அத்துடன் சிவில் மற்றும் அரசியல் உரிமைகள் என்னும் தலைப்பில் கைதும் தடுத்து வைத்தலும் மற்றும் சித்திரவதைகள் என்னும் விடயம் தொடர்பில் யாழ்ப்பாணம் பல்கலைக்கழக சட்டபீட விரிவுரையாளர் சே.குருபரன், சமூக பொருளாதார உரிமைகள் என்னும் தலைப்பில் கல்வி மற்றும் சுகாதார உண்மைகள் என்னும் விடயம் தொடர்பில் யாழ்ப்பாணம் பல்கலைக்கழக பேராசிரியர் சிவநேசன், பெண்கள் உரிமைகள் தொடர்பில் வைத்தியர்திருமகள், கருத்து வெளிப்பாட்டு சுதந்திரம் (மொழிவுரிமை கள் தொடர்பில்யாழ்ப்பாண பல்கலைக்கழக சட்டபீட விரிவுரையாளர்ஜோசலைமதன் ஆகியோர் கருத்துரை வழங்கி குழு கலந்துரையாடலை ஆரம்பித்து வைப்பார்கள். அத்துடன் பங்குபற்றுநர்களும் தங்களது கருத்துக்களை வழங்கும் முகமாக நிகழ்வு ஒழுங்கமைக்கப்பட்டுள்ளது என மனிதவுரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். பிராந்திய இணைப்பாளர் பி.கனகராஜ் அறிவித்துள்ளார். (அ-4-6)

# நாடு தழுவிய ரீதியில் நாளை போராட்டம்

## சட்டத்தரணிகள் தீர்மானம்

(கொழும்பு)

சட்டத்தரணிகள் நாடு தழுவிய ரீதியில் போராட்டமொன்றை நடத்தத் தீர்மானித்துள்ளனர். இலங்கை சட்டத்தரணிகள் சங்கத்தினால் இந்தப் போராட்டம் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. நாளை புதன்கிழமை காலை 9 மணி முதல் 10 மணி வரையில் குறித்த போராட்டம் நடத்தப்படவுள்ளது.

பிரதம நீதியரசர் ஷிராணி பண்டாரநாயக்கவிற்கு எதிரான நம்பிக்கையில்லாத் தீர்மானத்திற்கு கண்டனம் வெளியிடும் நோக்கிலேயே நடத்தப்படவுள்ளது. பிரதம நீதியரசருக்கு எதிராக பாராளுமன்றத் தெரிவுக்குழு நடந்து கொண்ட விதம் கடும் அதிருப்தி அளிப்பதாக சட்டத்தரணிகள் சங்கத் தலைவர் விஜயதாச ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் 15 ஆம் திகதி சட்டத்தரணிகள் பேரவையின் பொதுச் சபைக் கூட்டம் நடைபெறவுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார். பிரதம நீதியரசருக்கு எதிரான நம்பிக்கையில்லாத் தீர்மானம் தொடர்பில் இந்தக் கூட்டத்தில் மிக முக்கியமான தீர்மானம் எடுக்கப்படும் என அவர் தெரிவித்துள்ளார். (அ-2)

# சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | கிளிநொச்சி |
|---|---|---|
| | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 60 | 50 |
| உருளைக்கிழங்கு | 120-180 | 100 |
| பச்சைமிளகாய் | 200 | 220 |
| தக்காளி | 100 | 120 |
| மரவள்ளிக்கிழங்கு | 30 | 40 |
| கோவா | 60 | 80 |
| கரட் | 80 | 160 |
| பூசணி | 40 | 60 |
| புடோல் | 60 | 80 |
| வாழைக்காய் | 70 | 80 |
| சின்ன வெங்காயம் | 170 | 160 |
| பெரிய வெங்காயம் | 90 | 100 |
| பாகற்காய் | 90 | 120 |
| வெண்டிக்காய் | 80 | 80 |
| கருணைக் கிழங்கு | 60 | 70 |
| பயற்றங்காய் | 160 | 100 |
| லீக்ஸ் | 90 | 120 |
| பீற்றூட் | 120 | 140 |
| கறிமிளகாய் | 160 | 200 |
| முருங்கைக்காய் | 400 | -- |
| போஞ்சி | 120 | 70 |
| கத்தரிதம்புள்ள | 40 | -- |
| கீரை - 1 பிடி | 15-30 | 30 |
| தேசிக்காய் | 120 | 140 |
| தேங்காய் (ஒன்று) | 30 | 30-35 |

# இராசி பலன்

11.12.2012
(கார்த்திகை 26, செவ்வாய்க்கிழமை)
சூரிய உதயம் காலை 6.19 மணிக்கு
திரயோதசி முன்னிரவு 7.35 மணிவரை
விசாகம் முன்னிரவு 10.17 மணிவரை
இராகுகாலம் 3.20-4.50 மணிவரை
சுபநேரம் 10.50-12.20 மணிவரை
பிரதோச விரதம்.

**மேடம்** பொன்னான நாள், வெளியூர்த் தொடர்புகள் அதிகரிக்கும், உடல் நலம் சீராகும், வாழ்க்கைத் துணை வழியே மகிழ்ச்சிக்குரிய செய்தியொன்று வந்து சேரும்.

**இடபம்** தன்னம்பிக்கையும் தைரியமும் அதிகரிக்கும், அதிகம் செலவாகும் என நினைத்த காரியமொன்று குறைந்த செலவில் முடியலாம், நோயிலிருந்து நிவாரணம் பெறுவீர்கள்.

**மிதுனம்** விருந்துக்ளில் கலந்து மகிழும் வாய்ப்புண்டு, மனதில் இனம்புரியாத சந்தோசம் குடி கொள்ளும், அதிகாரிகள் அனுகூலமாக நடந்து கொள்வர், பிள்ளைகளால் பெருமைகள் வந்து சேரும்.

**கடகம்** வாகன சுகத்தால் வளர்ச்சி காணும் நாள், நினைத்த காரியம் நிறைவேறும், தொழில் விருத்தியுண்டு, மனதில் நீண்ட நாட்களாக இருந்த பாசம் குறையும்.

**சிங்கம்** நண்பர்கள் சொல்லும் ஆலோசனை உங்களுக்கு நல்லதாகத் தெரியும், பணத் தேவைகள் பூர்த்தியாகும், சகோதர ஒற்றுமை பலப்படும், குடும்பத்தில் சுப காரியங்கள் நடைபெறுவதற்கான வாய்ப்புண்டு.

**கன்னி** வாக்கு வாதங்களைத் தவிர்ப்பதன் மூலம் வளர்ச்சி காணும் நாள், வியாபாரத்தை விரிவுபடுத்த நினைப்பீர்கள், வெளியூர்த் தொடர்புகள் அதிகரிக்கும்.

**துலாம்** காரிய வெற்றிக்கு முழுமுதற் கடவுளை வழிபட வேண்டிய நாள், பக்கபலமாக நண்பர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும், ஆன்மீக சிந்தனை மேலோங்கும்.

**விருச்சிகம்** சேமிக்க நினைப்பீர்கள், தெய்வீக சிந்தனை மேலோங்கும், தொழில் வளர்ச்சி கூடும், புதிய முயற்சிக்கு கேட்ட இடத்தில் உதவிகள் கிடைக்கலாம், மனச்சஞ்சலங்கள் அதிகரிக்கும்.

**தனுசு** பிரச்சினைகளிலிருந்து விடுபடுவீர்கள், குடும்ப மகிழ்ச்சி மேலோங்கும், தூர தேசத்திலிருந்து அனுகூலமான செய்திகள் வந்து சேரலாம், கொள்கைப் பிடிப்போடு செயற்படுவீர்கள், பிரபலமானவர்களின் சந்திப்பு இடம்பெறலாம்.

**மகரம்** தேகாரோக்கியத்திற்காக ஒரு தொகையை செலவு செய்யும் சூழ்நிலை உருவாகும், சொல்லை செயலாக்கி காட்டுவீர்கள், மற்றவர்களிடம் ஒப்படைத்த பொறுப்புக்கள் உங்களிடமே வந்து சேரும்.

**கும்பம்** ஆரோக்கியத்தில் அதிக கவனம் செலுத்துவீர்கள், தொழில் ரீதியாக எடுத்த முயற்சியில் தாமதம் ஏற்படலாம், நண்பர்கள் ஒத்துழைப்பு வழங்க முன்வருவர், வீண்பழிகள் அகலும்.

**மீனம்** அருகில் இருப்பவர்களை அனுசரித்துச் செல்வது நல்லது, கொடுக்கல்- வாங்கல்களில் சில மனஸ்தாபங்கள் ஏற்படலாம், உடல் நலனில் கவனம் தேவை, ஆதாயமில்லாத அலைச்சல்கள் ஏற்படலாம்.

வளவன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யாழ்.மாநகர சபையின் பாதீடு நிறைவேறியது

ஆளும்- எதிர்க்கட்சி உறுப்பினர்களுக் கிடையிலான கடும் வாக்குவாதத்துடன் யாழ். மாநகர சபையின் 2013 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத்திட்டம் 4 வாக்குகள் வித்தி யாசத்தில் நிறைவேறியது. யாழ்.மாநகர சபை முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குண ராசா தலைமையில் நேற்று சபையின் மாநா ட்டு மண்டபத்தில் வரவு செலவுத் திட்டம்-2013 ஆம் ஆண்டுக்கான கூட்டம் நடைபெற்றது.

கூட்டத்தை ஆரம்பித்து வைத்து முதல்வர் உரையாற்றுகையில், 2013 ஆம் ஆண்டுக் கா்ன வரவு செலவுத்திட்டத்தை அங்கீகரிப்ப தற்காக கூடியிருக்கின்றோம். எதிர்க்கட்சிகள் எதிர்க்க வேண்டும் என்பதற்காக இவ்வரவு செலவுத் திட்டத்தை எதிர்க்காமல் அதில் தெரி விக்கப்பட்டுள்ள ஆக்க பூர்வமான திட்டங்க ளுக்கு ஆதரவு அளிக்க வேண்டும் என்றார். அவரது உரையையடுத்து யாழ். மாநகர சபையின் 2013 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத்திட்ட பாதீடு சபையில் சமர்ப்பிக் கப்பட்டது.சபையில் சமர்ப்பிக்கப்பட்ட வரவு செலவுத் திட்டப் பாதீடானது வாதப் பிரதி வாதங்களுக்கு மத்தியில் வாக்கெடுப்பிற்கு விடப்பட்டு 12 வாக்குகள் ஆதரவாகவும் 8 வாக்குகள் எதிராகவும் பெற்று சபையில் நிறைவேற்றப்பட்டது. மேலதிக 4 வாக்கு களால் 2013 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்ட பாதீடு நிறைவேற்றப்பட்டது. இவ்வரவு செலவுத் திட்டப் பாதீட்டை எதிர்க் கட்சி உறுப்பினர் மு.றெமிடியஸ் ஆதரித்து வாக்களித்தமை குறிப்பிடத்தக்கது.

2009 ஆம் ஆண்டு 302.8 மில்லியனாக இருந்த சபையின் வருடாந்த வருவாய் 2010 ஆம் ஆண்டு307.1மில்லியனாகவும் 2011 ஆம் ஆண்டு 527.2 மில்லியனாகவும் அதிகரித்து 2013ஆம் ஆண்டில் 752.7 மில்லியன் ரூபாவை எட்டும் என எதிர்பார்க்கப்படுகிறது என வரவு செல வுத் திட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. (அ-6)



நன்றி:- மிரர்.

# மீனவரின் பிரச்சினைகளை தீர்க்கக்கோரி சாகும் வரை உண்ணாவிரத போராட்டம்

### போரினால் பாதிக்கப்பட்ட மக்கள் அமைப்பினர் குதித்தனர்



(யாழ்ப்பாணம்)

இந்திய மீனவர்களின் அத்துமீறலை தடு க்கக் கோரியும் வெளிப்பிரதேச மீனவர்களின் கடல் வளத்தினை அழிக்கும் செயற்பாட்டிற்கு முற்றுப்புள்ளி வைக்கக்கோரியும் போரினால் பாதிக்கப்பட்ட மக்கள் அமைப்பினர் சாகும் வரையான உண்ணாவிரதப் போராட்டத்தில் குதித்துள்ளனர்.

இலங்கை கடற் பிரதேசத்திற்குள் பிரவேசி த்து எமது மீனவர்களின் வாழ்வாதாரத்திற்கு சவால் விடும் வகையில் மீன்பிடியில் ஈடுபடும் இந்திய மீனவர்களை கட்டுப் படுத்த வேண்டும்.

போரினால் பாதிக்கப்பட்ட பிரதேச மீன வர்களின் சங்க நடவடிக்கைகளுக்கு கட்டுப் பாடாமல் தொழிலில் ஈடுபடும் தடை செய் யப்பட்ட மீன்பிடி முறைகளைக் கையாண்டு எமது கடல் வளத்தை அழிக்கும் மீன்பிடி நட வடிக்கைகளை கட்டுப்படுத்துவதுடன் எமது மீனவர்களின் வளங்களை சூறையாடும் வெளி ப்பிரதேச மீனவர்களின் நடவடிக்கையும் கட்டுப்படுத்தல் வேண்டும் என்ற இரு கோரிக் கைகளையும் நிறைவேற்றக்கோரியே சாகும் வரையான உண்ணாவிரத போராட்டத்தில் குதித்துள்ளனர்.

குருநக்ர் சவக்காலை சந்தியில் இடம்பெறு கின்ற இச்சாகும் வரையான போராட்டத்தில் குதித்துள்ள அவ் அமைப்பின் தலைவர் வி.சகா தேவன் தம் அமைப்பினான கோரிக்கைகள் நிறைவேற்றப்படும் வரையில் தம்முடைய போராட்டம் தொடரும் என தெரிவித்தார்.

இப் போராட்டத்தில் வெளியிடப்பட்ட துண் டுப்பிரசுரத்தில் குறிப்பிட்டுள்ளதாவது,

கடந்த 30 வருடகால யுத்தத்தால் பல்வேறு இழப்புக்களையும் துயரங்களையும் சுமந்து பல்வேறு அழிவுகளை சந்தித்துள்ள எமது மீனவ சமூகம் யுத்தம் முடிவுக்கு வந்து 3 வருடங்கள் கடந்த நிலையிலும் இன்னமும் தமது வாழ்க்கைச் சுமைகளை சுமக்க முடியா மல் தள்ளாடிக் கொண்டு இருக்கின்றார்கள்.

அரசாங்க உதவிகள், வாழ்வாதாரத் திட் டங்கள் முழுமையாக இன்னமும் அவர்க ளுக்கு கிடைக்கவில்லை. இன்று நிகழ்ந்து கொண்டிருக்கும் சம்பவங்கள் எமது மீனவ சமூகத்தை முற்றாக அழித்து விடுமோ என்று அஞ்ச வேண்டிய நிலையேற்பட்டுள்ளது.

யுத்த காலப்பகுதியில் தமது சின்னஞ் சிறாரின் பசிப்பிணி நீக்க கடலுக்குள் இறங் கிய எத்தனையோ மீனவர்கள் மீள கரை சேரவில்லை. கடந்த ஒரு தலைமுறையை சூனியத்திற்குள் தொலைத்துவிட்ட எமது மீன வர் சமுதாயம் இன்னும் விடிவு காணாமல் நிற்பது கொடுமையிலும் கொடுமை.

கண்ணிருந்தும் குருடராய் காதிருந்தும் செவிடராய் வாயிருந்தும் ஊமையாய் நடக் கும் அனைவரினையும் தட்டிக்கேட்க வேண் டியது எமது தலையாய கடமையாகும். எமக் கும் எமது மக்களுக்கும் இருக்கும் உரிமையை யாருக்கும் விட்டுக் கொடுக்கவும் நாம் தயாராக இல்லை. எமது மக்களின் வாழ்வாதாரத்தை காப்பாற்றுவதற்காக எமது உயிரை விடவும் நாம் தயாராக இருக்கின்றோம். எமது மீனவ சமூகத்தின் வாழ்வில் ஒளியேற்றுவதற்காக இரண்டு கோரிக்கைகளை முன்வைத்து சாகும் வரையான எமது உண்ணாவிரதப் போராட்டத்தினை இன்று ஆரம்பிக்கிறோம் என அதில் தெரிவிக்கப்பட்டு இருந்தது.

குறித்த போராட்டம் நடைபெற்றுக் கொண்டு இருந்தபோது அங்கு சென்ற ஒருவர் குறித்த போராட்டத்தை குழப்ப முயற்சித்து உள்ளார். எனினும் அம்முயற்சி அப்பிரதேசத்தவர் களின் தலையீட்டால் முறியடிக்கப்பட்டுள் ளது. (அ-4)

# 19 வயதுப் பிரிவு உதைபந்தில் இரு அணிகள் தெரிவாகின



(மல்லாகம்)

யாழ்ப்பாணப் பாடசாலைகள் விளையாட் டுச் சங்கத்தினால் நடத்தப்பட்ட 19 வயதுப் பிரிவு ஆண்களுக்கான உதைபந்தாட்டப் போட்டியின் சம்பியன்களாக மானிப்பாய் இந்துக் கல்லூரியும் சென்பற்றிக்ஸ் கல்லூரி யும் தெரிவாகியுள்ளன.

மானிப்பாய் இந்துக் கல்லூரி மைதானத் தில் நடைபெற்ற மேற்படி போட்டியின் இறுதி யாட்டத்தில் மானிப்பாய் இந்துக் கல்லூரியும் சென்பற்றிக்ஸ் கல்லூரியும் மோதியது. இப் போட்டியானது ஆரம்பம் முதலே விறுவிறுப் பாக நடைபெற்று வந்தது.

போட்டி தொடங்கி சிறிது நேரத்தில் மானிப் பாய் இந்துக் கல்லூரி அணியினர் முதலா வது கோலினை தமது அணி சார்பாக பெற் றுக் கொண்டனர். பதிலுக்கு சென்பற்றிக்ஸ் கல்லூரி அணியினா தமக்கு கிடைத்த பனா ல்டி உதைமூலம் ஒருகோலினைபெற்றுக்கொண் டனர். இதன்மூலம் முதல் பாதி ஆட்டம் வரை போட்டி மிக விறுவிறுப்பாக நடைபெற்ற தினால் போட்டி சமநிலையில் காணப்பட்டது.

இரண்டாம் பாதி ஆட்டத்தில் மானிப்பாய் இந்துக் கல்லூரி அணியினர் தமக்கு கிடைத்த பனால்டி உதை மூலம் ஒரு கோலினை பெற் றுக்கொண்டனர். மீண்டும் சிறப்பான ஆட் டத்தை வெளிப்படுத்திய சென்பற்றிக்ஸ் கல்லூரி அணியினர் மீண்டும் ஒரு கோலை பெற்றுக் கொள்ள ஆட்டம் சமநிலையில் முடிபடைந் தது. ஆட்ட நேர இறுதி வரை இரு அணிகளும் சிறப்பாக ஆட்டத்தை வெளிப்படுத்தியமை யால் 2:2 என்ற கோல் அடிப்படையில் போட்டி சமநிலையில் முடிவடைந்தது.

இதன்மூலம் யாழ்ப்பாணப் பாடசாலைகள் விளையாட்டுச் சங்கத்தினால் நடத்தப்பட்ட இவ் ஆண்டிற்கான உதைபந்தாட்ட போட்டித் தொட ரின் இணைச் சம்பியன்களாக மானிப்பாய் இந்துக் கல்லூரியும் சென்பற்றிக்ஸ் கல்லூரி யும் தெரிவாகின.மூன்றாமிடத்துக்கான போட்டி யில் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியும் வட் டுக்கோட்டை யாழ்ப்பாணக்கல்லூரியும் மோதின. இப்போட்டியில் தனது சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்திய வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி 1:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று மூன்றாமிடத்தினை பெற்றுக் கொண்டது. (அ-9-21)




## பறிமுதலான பொருட்கள் ஏல விற்பனைக்கு

(யாழ்ப்பாணம்)

சாவகச்சேரி நீதிவான் நீதிமன்றில் எதிர்வரும் 15 ஆம் திகதி (சனிக்கிழமை) காலை 10 மணிக்கு பறிமுதல் செய்யப் பட்டதும் உரிமை கோரப்படாததுமான பொருட்கள் ஏல விற்பனை மூலம் விற் பனை செய்யப்படவுள்ளது. அன்றைய தினம் ஏல விற்பனை நடைபெறவிருக்கும் நேரத்திற்கு அரை மணித்தியாலத்திற்கு முன்னர் இப் பொருட்களைப் பார்வையிட முடியும் என பதிவாளர் அறிவித்துள் ளார். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொற்றா நோயாளர்களின் எண்ணிக்கை அதிகரிப்பு

## வைத்திய கலாநிதி ஆ.கேதீஸ்வரன் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

மதுபானம், புகைப்பிடித்தல், உணவுப் பழக்கவழக்கங்களினால் தொற்றாத நோய்களினால் பாதிக்கப்படுவோரின் எண்ணிக்கை அதிகரித்து வருகிறது என யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஆ.கேதீஸ்வரன் தெரிவித்துள்ளார்.

சுகாதார அமைச்சின் பணிப்புரைக்கமைய வடக்கு மாகாண சுகாதார அமைச்சின் கீழ் இயங்கும் சுகாதாரப் பணிமனை மற்றும் யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனை என்பன இணைந்து தேசிய சுகாதார வாரத்தை முன்னிட்டு நேற்று யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் நிகழ்வொன்றினை நடத்தியிருந்தன. இதில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில், மஹிந்த சிந்தனைக்கு அமைய சுகாதார அமைச்சினால் இந்த தேசிய சுகாதார வாரம் இன்று (நேற்று) தொடக்கம் 17 ஆம் திகதி வரை அனுஷ்டிக்கப்படுகிறது. இதற்கு முன்னரும் டெங்கு கட்டுப்பாட்டு வாரம், நுளம்புக் கட்டுப்பாட்டு வாரம் என்பனவும் அனுஷ்டிக்கப்பட்டுள்ளன.

அதிகரித்து வரும் நோய்ப்பரம்பலைக்கட்டுப்படுத்தும் நோக்கிலும் மக்களுக்கு அந்நோய் தொடர்பில் விழிப்புணர்வை ஏற்படுத்தவும் இவ்வாறான வாரங்கள் அனுஷ்டிக்கப்பட்டு வருகின்றன.

எமது நாடு சுதந்திரம் அடைந்ததற்கு பின்னர் மலேரியா போன்ற உயிர்க்கொல்லி நோய்களின் தொற்று அதிகரித்துக் காணப்பட்டதோடு இலட்சக்கணக்கான மக்களும் உயிரிழந்திருந்தனர்.

காலப்போக்கில் மலேரியா கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வரப்பட்டது. இதனை விட தடுப்பூசி மூலம் தடுக்கக் கூடிய போலியோ போன்றநோய்களும்கட்டுப்பாட்டிற்குள்கொண்டு வரப்பட்டுள்ளன. இதுதவிர தாய், சேய் மரண வீதம் அதிகமாக இருந்தது. அதுவும் பல திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வரப்பட்டுள்ளது.

சுகாதாரத்துறையில் தெற்காசியாவில் மிகச் சிறந்த குறிகாட்டியைக் கொண்ட நாடாக இலங்கை தற்போது விளங்கி வருகின்றது.

தற்போது டெங்கு நோய் பாரிய சவாலாக இருந்து வருகின்றது. இதனைக் கட்டுப்படுத்த டெங்கு கட்டுப்பாட்டு வாரம், நுளம்பு கட்டுப்பாட்டு வாரம் என்பன அனுஷ்டிக்கப்பட்டதோடு தற்போது தேசிய சுகாதார வாரமும் அனுஷ்டிக்கப்படுகிறது. இதனுடைய நோக்கமும் டெங்கு நோயைக் கட்டுப்படுத்துவதே. மேலும் தொற்றாத நோய்களினால் பாதிக்கப்படுவோரின் எண்ணிக்கை அதிகரிப்பதற்கு வாழ்க்கை முறையில் ஏற்பட்ட மாற்றம் பிரதான காரணியாகவுள்ளது.

60 வயதுக்கு மேற்பட்டவர்களின் எண்ணிக்கை மிகவும் குறைவடைந்து வருகிறது. குறிப்பாக கிராமப் புறங்கள் நகரமயமாக்கப்பட்டமை இதற்கு முக்கிய காரணம். மேலும் தொற்றா நோய்களின் பரம்பல் கடந்த 2008 ஆம் ஆண்டு 65 வீதமாக இருந்தது. இதில் இருதய நோயாளர்களின் எண்ணிக்கை முன்னிலை பெற்றிருந்தது. 35 வீதமானவர்கள் இருதய நோயினால் பாதிப்படைந்திருந்தனர். அத்தோடு அபிவிருத்தி அடைந்த நாட்டை விட இலங்கையில் நீரிழிவு நோயினால் பாதிக்கப்படுவோரின் எண்ணிக்கை அதிகம்.

இது தவிர சுவாச நோய்களும் அதிகரித்து வருகின்றன. இவ்வாறு இலங்கையில் தொற்றாத நோய்களினால் பாதிக்கப்படுவோரின் எண்ணிக்கை அதிகரிப்பதற்கு உணவுப் பழக்க வழக்கங்களில் ஏற்பட்ட மாற்றங்கள் மதுபானம், புகைப்பிடித்தல் போன்ற பழக்க வழக்கங்களினாலும் அதிகரித்து வருகின்றது.

எனவே, மக்கள் விழிப்புணர்வுடன் செயற்பட்டு உரிய முறையில் மருத்துவப் பரிசோதனைகள் மேற்கொண்டு நோய்த் தாக்கங்களிலிருந்து தம்மை பாதுகாத்துக் கொள்ள வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார்.

இந்த நிகழ்வில் வடக்கு மாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜி.ஏ.சந்திரசிறி, வடமாகாண சுகாதார அமைச்சின் செயலாளர் எஸ்.ரவீந்திரன், யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சில்வேஸ்திரி அலென்ரின், வடக்கு மாகாண கல்வி, பண்பாட்டு விளையாட்டுத் துறை அமைச்சின் செயலாளர் எஸ்.சத்தியசீலன், யாழ். மாவட்ட அரச அதிபர் சுந்தரம் அருமைநாயகம் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர். (அ-6)

# தனது இருப்பை தக்கவைக்க இனவாதத்தை தூண்டுகிறது அரசு

## முன்னிலை சோசலிசக்கட்சி குற்றச்சாட்டு

(கொழும்பு)

இனவாதத்தை தூண்டி தனது அரசியல் இருப்பை உறுதிப்படுத்த அரசாங்கம் எடுக்கும் முயற்சியானது நாட்டின் எதிர்கால இருப்புக்கு நன்மையை ஏற்படுத்தாது என முன்னிலை சோசலிச கட்சியின் அரசியல் சபை உறுப்பினர் துமிந்த நாகமுவ தெரிவித்துள்ளார்.

பல்கலைக்கழக மாணவர்கள மீது பயங்கரவாதிகள் என்ற முத்திரையை குத்தி பல்கலைக்கழக வளாகங்கள் மீட்கப்படாத பிரதேசங்கள் என உறுதிப்படுத்தியுள்ளதாகவும் அவர் கூறியுள்ளார்.

மாணவர்கள் இணைந்து மாவீரர் தினத்தை அனுஷ்டிப்பதற்காக விளக்கேற்றியதாக அரசாங்கம் குற்றம் சுமத்துகிறது. இதன் காரணமாகவே பொலிஸாரின் தலையிட்டனர் என அரசாங்கம் கூறுகிறது. விளக்கேற்றுவது பயங்கரவாத செயற்பாடா? விளக்கேற்றியவர்களை தாக்குவது மனிதாபிமான செயற்பாடா? கடந்த காலங்கள் முழுவதும் தமக்கு எதிராக செயற்படுபவர்கள் மீது அரசாங்கம் பயங்கரவாதிகள் என்ற முத்திரையை குத்தியது. தாம் செய்யும் அனைத்து நடவடிக்கைகளுக்கு பெரும்பான்மையான சிங்களவர்களின் அனுமதியை பெறவே அரசாங்கம் முயற்சித்து வருகின்றது.

இனவாதத்தை தூண்டுவதன் மூலம் மக்கள் எதிர்நோக்கியுள்ள பிரச்சினைகளை மறக்க செய்ய முடியும் என அரசாங்கத்திற்கு தெரியும் எனவும் துமிந்த நாகமுவ கூறியுள்ளார்.

நாட்டை இனவாதத்திற்குள் தள்ளவே ஆட்சியாளர்கள் முயற்சிக்கின்றனர். நாட்டின் மீது கொண்டுள்ள அன்பால் அவர்கள் இதனை செய்யவில்லை என அவர் கூறியுள்ளார். (அ-2)


இவர்களுக்கு மணமகள் தேவை — கல்யாண மாலை — இவர்களுக்கு மணமகன் தேவை

பிறப்பு: 1976 இந்து வேளாளர்
நட்சத்திரம்: ரேவதி
உயரம்: 5'9''
கி.பா: 36.75, 12 இல் செவ்.
தொழில்/ தகைமை: A/L, Maths Business Administriction- Dip (Officer Income Audit Dubai, UAE
தொ. இல: B -732

பிறப்பு: 1973 இந்து வேளாளர்
நட்சத்திரம்: கார்த்திகை 2
உயரம்: 5' 3''
கி.பா: 17.25, 12இல் செவ்.
தொழில்/ தகைமை: (BED Maharagama) விஞ்ஞான ஆசிரியை
தொ. இல: G -735

பிறப்பு: 1979 இந்து வேளாளர்
நட்சத்திரம்: பூரம் 1
உயரம்: 5'6''
கி.பா: 86
தொழில்/ தகைமை: IT வியாபாரம் UK PR உண்டு
தொ. இல: B -734

பிறப்பு: 1973 இந்து
நட்சத்திரம்: உத்தராடம் 1
உயரம்: 5'6''
கி.பா: 24.25
தொழில்/ தகைமை: B.Sc (Hons) (UK)
தொ. இல: G -739

பிறப்பு: 1977 இந்து வேளாளர்
நட்சத்திரம்: திருவோணம் 1
உயரம்: 5'8''
கி.பா: 61.25, 8 இல் செவ்.
தொழில்/ தகைமை: பஸ் சாரதி
தொ. இல: B -736

பிறப்பு: 1992 இந்து வேளாளர்
நட்சத்திரம்: பூரம் 3
உயரம்: 5'2''
கி.பா: 12.5
தொழில்/ தகைமை: A/Lவர்த்தகம், முகாமைத்துவம் (பின்லாந்து)
தொ. இல: G -741

பிறப்பு: 1982 இந்து வேளாளர்
நட்சத்திரம்: உத்திரட்டாதி 3
உயரம்: 5'8''
தொழில்/ தகைமை: A/L கணனி டிப்ளோமா (Hardware Networking) தொழில்நுட்ப ஆலோசனையாளர் (தனியார்)
தொ. இல: B -737

பிறப்பு: 1981 இந்து வேளாளர்
நட்சத்திரம்: கார்த்திகை 2
உயரம்: 5'1''
கி.பா: 11.5, 8 இல் செவ்.
தொழில்/ தகைமை: முகாமைத்துவ உதவியாளர் அரச திணைக்களம்
தொ. இல: G -742

சகல தொடர்புகளுக்கும்:-
கல்யாண மாலை
(சர்வதேச இலவச திருமண சேவை)
இல. 144, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
குறிப்பு: எமது காரியாலயம் காலை 9.00 - 5.00 மணிவரை திறக்கப்படும்.
( ஒவ்வொரு செவ்வாய்க்கிழமையும் கல்யாணமாலை விடுமுறை தினம் என்பதனையும் அறியத்தருகின்றோம் )
ஊடக அனுசரணை வலம்புரி



மணமகன், மணமகள்
1000 பதிவுகளை நோக்கி..



கல்யாணமாலை
KALYANA MALAI
( சர்வதேச இலவச திருமண சேவை)
இல.144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.
(பழைய எக்ஸ்போ எயார் விமான சேவை அலுவலகம்) எனும் முகவரியில் இயங்குகிறது




சமய, சமூக வேறுபாடின்றி பதிவுகள் நடந்தவண்ணமுள்ளன.
பதிவுக் கட்டணம் ரூபா 1000 மட்டுமே...!
செவ்வாய்க்கிழமைகளில் விடுமுறை
குறிப்பு: பதிவை மேற்கொள்ளும் போது சாதகம், போட்டோ என்பன அவசியம்திருமண தரகர்கள் பதிவு செய்ய முடியாது.
தொடர்பு:-021 720 1005
E-mail: kalyan[illegible]


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்.முகாமையாளரின் கருத்தரங்கு மன்றம்

# 100 ஆவது விழிப்புணர்வு கலந்துரையாடல்



**தோற்றம்:**

சமூகமட்டத்தில் பல துறைகளிலும் அறிவை விருத்தி செய்து சகல தரப்பு மக்களிடையேயும் தெளிவானதும் அறிவுபூர்வமானதுமான புரிந்துணர்வை ஏற்படுத்தும் நோக்கத்தோடு 2004 ஆம் ஆண்டளவில் யூரோவில் நிர்வாகத்தினர் வி.நிரஞ்சன், அக்கால இலங்கை வங்கி வடபிராந்திய உதவிப் பொது முகாமையாளர் கே.பாலசுப்பிரமணியம் மற்றும் யாழ் மாவட்ட வங்கியாளர் சங்கத்தை பிரதிநிதித்துவப்படுத்திய அதன் செயலாளர் என்.சிவரட்ணம், மக்கள் வங்கியின் வடபிராந்திய உதவிப் பொதுமுகாமையாளராக கடமையாற்றிய கே.ஆனந்தராசா, செலான் வங்கி முகாமையாளராக விருந்த எஸ்.அரவிந்தன், தேசிய சேமிப்பு வங்கி முகாமையாளர் வி.அருளானந்தம், கொமர்ஷல் வங்கி முகாமையாளராக இருந்த ச.இரவீந்திரா போன்றோரும் மற்றும் பல பொறியியலாளர்களும் குறிப்பாக எம்.ராமதாஸ், எம்.தில்லைநாதன் ஆகியோர்களும் சீ.வி.கே.சிவஞானம் போன்ற புத்திஜீவிகளும் ஒருங்கிணைந்து மேற்கூறிய எண்ணக்கரு பற்றி முறைசாராக் கலந்துரையாடல் ஒன்றை நடத்தினர்.

இதன் பலனாக காலக்கிரமத்தில் துறைசார்நிபுணர்களையும் தமது அனுபவங்களைப் பகிர்ந்துகொள்ளக்கூடியவர்களையும் அழைத்து கருத்தரங்குகளை ஒழுங்காக நடத்துவதென முடிவெடுக்கப்பட்டது.

அதற்கமைய ஒவ்வொரு போயா விடுமுறை தினத்திலும் யூரோவில் மாநாட்டு நிறுவன மண்டபத்தில் கருத்தரங்கை நடத்துவதெனவும் ஒவ்வொரு நிகழ்வுக்கும் அனுசரணையாளராக ஒவ்வொரு நிறுவனத்தை அணுகுவதெனவும் முடிவானது. இதன்படி முதலில் இலங்கை வங்கி இப்பொறுப்பை ஏற்க முன்வந்தது.

**99 கருத்தரங்குகள்**

இவ்வாறு முதலாவது கருத்தரங்கு 2007 ஆம் ஆண்டு பங்குனி 24 ஆம் திகதி அன்று (நிதியும் முதலீடுகளும்) என்ற தலைப்பில் நடத்தப்பட்டது. இதன் வளவாளராக இலங்கை வங்கியைச் சேர்ந்த என்.சிவரட்ணம் கலந்துகொண்டு சிறப்பித்தார். அன்றிலிருந்து 2012 ஆம் ஆண்டின் நவம்பர் மாதம் வரை 99 கருத்தரங்குகள் நடத்தப்பட்டுள்ளன. 99ஆவது கருத்தரங்கில் (கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் தேசிய நல்லிணக்கமும் உடன்பாடான சிந்தனைகளும்) என்ற தலைப்பில் ஓய்வுபெற்ற வளவாளர் ஏ.சி.ஜோர்ஜ் மற்றும் கண்வைத்திய நிபுணர் பாலா ஆகியோர் நிபுணர்களாக கலந்துகொண்டு கருத்தரங்கைச் சிறப்பித்தனர்.

இதுவரை நடத்தப்பட்ட கருத்தரங்குகளில் சில கீழே குறிப்பிடப்படுகின்றன. முக்கியமாக இவை (விஞ்ஞானம், பொருளாதாரம், கலை) என்ற பெரும் தலைப்புக்களின் கீழ் சுட்டிக்காட்டும் விடயங்களை உள்ளடக்கியதாக அமைந்தன.

விஞ்ஞானம் சார்ந்ததாக மருத்துவம், பொறியியல், விவசாயம், பொதுவிஞ்ஞான பிரயோகம் போன்ற பலவும் பொருளாதாரம் சம்பந்தமாக வங்கிமுறை, நிதியும் முதலீடும் முதலீட்டு பகிர்வு மூலதனம் போன்றவையும் கலைத்திறன் சார்ந்ததாக சட்டம், புவியியல், வரலாறு, முகாமைத்துவம், வர்த்தகம் போன்ற விடயங்கள் கருத்தரங்கில் இடம்பெற்றன.

ஆங்கிலமொழியின் பயன்பாட்டை முன்னிறுத்தி அநேகமான கருத்தரங்குகள் ஆங்கிலத்தை முதன்மையாக கொண்டதுடன் போதிய விளக்கங்கள் தமிழ்மொழியிலும் தரப்பட்டு சகலரும் நன்மை பெறக்கூடியதாகவே அமைந்தன. 100 ஆவது கருத்தரங்கு Science and Development என்ற தலைப்பில் நாளை புதன்கிழமை மேற்கொள்ள ஆயத்தங்கள் நடைபெறுகின்றன.

இதுவரை நடைபெற்ற கருத்தரங்குகளையும் அதன் போக்கையும் விருத்தியையும் நோக்கும் போது இம்முகாமையாளர்களின் கருத்தரங்குகள் பின்வரும் விடயங்களுக்கு தனது பங்களிப்பையும் செயற்பாட்டையும் நல்கி வருவதாகவே அபிப்பிராயப்படக்கூடியதாக உள்ளது.

சர்வ கலாசாலைகள், வர்த்தக சம்மேளனங்கள், கைத்தொழில் சம்மேளனங்கள் மற்றும் பலதரப்பட்ட சமூக பொருளாதார அபிவிருத்திக்காக உழைக்கும் நிறுவனங்கள் தத்தமது துறைகளில் கலந்துரையாடல்களை மேற்கொண்டு சம்பந்தப்பட்ட துறையினருக்கும் அரச, அரசசார்பற்ற நிறுவனங்களுக்கும் சிபார்சுகளை செய்கின்றன.

இத்தகைய செயற்பாடுகளில் முகாமையாளர்கள் சம்மேளனமும் ஈடுபட்டு வருகின்றது. இதன்மூலம் பிரதேச அபிவிருத்திக்கு பெரும் பங்காற்றி வருகின்றது. இக்கருத்தரங்குகளில் ஒரு குறித்த விடயம்பற்றி தெரிவிக்கப்படும் சாதக, பாதக கருத்துக்கள் தேவையான நிறுவனங்களுக்கு போய்ச்சேர்கின்றன. இதனால் அந்நிறுவனங்கள், திணைக்களங்கள் என்பனவற்றிற்கு ஒரு ஆலோசனைச்சபையாக இது செயற்படுகிறது. தவறான முடிவுகள் எடுக்குமுன் ஆக்கபூர்வமான ஆலோசனைகளையும் அதன் பின்விளைவுகளையும் சுட்டிக் காட்டுகிறது. முக்கியமாக (பொறியியல்) துறையில் இந்த அமைப்பு பல ஆலோசனைகளை முன்வைத்து வருகிறது.

எனவே ஆர்வலர்கள் எதிர்காலத்தில் இவ்வமைப்பினால் ஒழுங்கு செய்யப்படும் கருத்தரங்குகளில் பங்குகொண்டு த்ங்கள் பங்களிப்பினை ஆக்கபூர்வமாக பயன்படுத்தி சமூகத்திற்கும் மக்களுக்கும் நன்மைகள் ஏற்படுத்த முன்வருவது சாலச் சிறந்ததாகும். தனது 100 ஆவது கருத்தரங்கை முன்னிட்டு முக்கிய கலந்துரையாடல்களின் தொகுப்புக்களை உள்ளடக்கிய ஒரு நினைவுச் சஞ்சிகையையும் வெளியிட ஏற்பாடு செய்யப்பட்டு வருகின்றது.

*ந.சிவரத்தினம், ஒருங்கிணைப்பாளர்.*

# பிரதம நீதியரசர் ஷிராணி பதவிவிலகப் போவதில்லை

## சட்டத்தரணிகள் தெரிவிப்பு

(கொழும்பு)

இலங்கையின் பிரதம நீதியரசர் ஷிராணி பண்டாரநாயக்க பதவி விலகப் போவதில்லை. எத்தகைய சவால்களையும் சந்திப்பதற்கு அவர் தயாராக உள்ளார் என்று அவரது சட்டத்தரணிகள் கருத்து தெரிவித் துள்ளனர்.

பிரதம நீதியரசருக்கு எதிரான குற்றச்சாட்டுக்களை நாம் முற்றாக மறுக்கின்றோம்.அந்தக் குற்றச்சாட்டுகளையோ அல்லது முடிவினை யோ நாம் ஏற்றுக்கொள்ளவில்லை. இவ்விடயத்தில் அடுத்தகட்ட நடவடிக்கை குறித்து நாம் ஆராய்ந்து வருகின்றோம் என்றும் அவர்கள் தெரிவித்துள்ளனர்.

பிரதம நீதியரசர் ஷிராணி பண்டாரநாயக்கவிற்கு எதிரான குற்றப் பிரேரணை தொடர்பிலான பாராளுமன்ற தெரிவுக்குழுவில் கடந்த வெள்ளிக்கிழமை உயர் நீதிமன்ற நீதியரசர் ஷிராணி திலகவர்த்தன சாட் சியமளித்திருப்பதாக அரசாங்க தகவல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

தெரிவுக்குழு நேற்றுமுன்தினம் கூடியபோது எதிர்க்கட்சிகளைச் சேர்ந்த பாராளுமன்றத் தெரிவுக் குழு உறுப்பினர்களும் பிரதம நீதியரசருக்கு எதிரான விசாரணைகளிலிருந்து விலகியிருந்தனர்.

எனினும் எதிர்க்கட்சிகளின் அங்கத்தவர்கள் இல்லாத நிலையில் தொடர்ந்து தெரிவுக்குழுவின் விசாரணைகளின் முன் நேற்றுமுன்தினம் மாலை சமூகமளித்த உயர் நீதிமன்ற நீதியரசர் ஷிராணி திலகரத்ன பிரதம நீதியரசர் ஷிராணி பண்டாரநாயக்கவுக்கு எதிராக சாட்சியளித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ-2)

# முதற்கட்ட தேடுதலின்போது எச்சங்கள் கிடைக்கவில்லை

லயன் எயார் விமானத்தில் பயணம் செய்த 31 பயணிகளது உடல் எச்சங்கள் பூநகரி கடற்கரையில் தேடும் நடவடிக்கையின்போது கிடைக்கப் பெறவில்லை என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கடந்த 1998 ஆம் ஆண்டு செப்டெம்பர் 29 ஆம் திகதி பலாலியில் இருந்து இரத்மலானை நோக்கி 48 பயணிகள், 6 விமானப் பணியாளர்களுடன் புறப்பட்ட லயன் விமானம் தமிழீழ விடுதலைப் புலிகளால் சுட்டு வீழ்த்தப்பட்டது.

கிளிநொச்சி நீதவான் முன்னிலையில் நேற்றுமுன்தினம் சடலங்களை தேடும் நடவடிக்கை இடம்பெற்றுள்ளது.

எனினும் நேற்று முன்தினம் மாலை வரை சடலங்கள் எவையும் கிடைக்கப் பெறவில்லை என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்நிலையில் பாரிய இயந்திரங்களைக் கொண்டு சடலங்களை தேடும் நடவடிக்கைகள் நேற்றைய தினம் ஆரம்பித்துள்ளதாக பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (அ-2)

# லெபனானுக்கு விஜயம் செய்யும் குழுவில் சவேந்திர சில்வாவும்

லெபனானுக்கு விஜயம்செய்துள்ள ஐக்கிய நாடுகள் அமைப்பின் பிரதிநிதிகள் குழு வில் ஐக்கிய நாடுகள் அமைப்பிற்கான இலங்கை பிரதி நிரந்தரப் பிரதிநிதி மேஜர் ஜெனரல் சவேந்திர சில்வாவும் உள்ளடக்கப்பட்டுள்ளார். அமைதி காக்கும் பணிகளில் ஈடுபட்டுள்ள படையினருக்கு ஆலோசனைகளை வழங்கும் நோக்கில் குறித்த பிரதிநிதிகள் குழு லெபனானுக்கு விஜயம் செய்துள்ளது.

கடந்த வாரம் இந்தக் குழு லெபனானுக்கு விஜயம் செய்திருந்ததாகத் தெரிவிக்கப்படுகின்றது.

ஐக்கிய நாடுகள் அமைதி காக்கும் படையினருக்கான இராணுவ காவல்துறை ஆலோசனைக் குழுவில் சவேந்திர சில்வா அங்கம் வகிப்பதாகக் குறிப்பிடப்படுகிறது. (அ-2)

# சபையின் சிற்றுண்டிச்சாலையில் பன்றி இறைச்சிக் கறி கிடைக்கும்

## காத்திருக்கிறார் ஜோன் அமரதுங்க

(கொழும்பு)

நாடாளுமன்ற சிற்றுண்டிச்சாலையில் பன்றி இறைச்சிக்கறி பரிமாறப்பட வேண்டும் என ஐக்கிய தேசிய கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஜோன் அமரதுங்க கோரியுள்ளார்.

அண்மையில் இடம்பெற்ற நாடாளுமன்ற குழுக் கூட்டத்திலேயே எதிர்க்கட்சிகளின் பிரதம கொறடா ஜோன் அமரதுங்க இந்த கோரிக்கையினை சபாநாயகரிடம் விடுத்துள்ளார்.

இந்த கோரிக்கையை நிறைவேற்றுவதற்கு சபாநாயகர் இணக்கம் தெரிவித்துள்ளார். எனினும் நாடாளுமன்ற உறுப்பினர் ஏ.எச். எம். அஸ்வர் உள்ளிட்ட முஸ்லிம் நாடாளுமன்ற உறுப்பினர்களின் ஆட்சேபனையை அடுத்து சபாநாயகர் இந்த தீர்மானத்தினை கைவிட்டுள்ளார்.

எவ்வாறாயினும் எனக்கு பன்றி இறைச்சிக் கறி வேண்டும். இதனை சபாநாயகர் நிறைவேற்றுவார் என நான் நம்புகின்றேன் என ஜோன் அமரதுங்க குறிப்பிட்டார்.

நாடாளுமன்ற உறுப்பினர் ரோஸி சேன நாயக்கவின் கோரிக்கையினை அடுத்து தேன் மற்றும் விசேட வகையான தானிய உணவுகளை நாடாளுமன்ற சிற்றுண்டிச்சாலையில் பரிமாற்ற சபாநாயகர் சமல் ராஜபக்ஷ இணக்கம் தெரிவித்துள்ளதாக அவர் கூறினார்.

இதேவேளை, நாடாளுமன்ற உறுப்பினர்களின் சிற்றுண்டிச்சாலையில் பரிமாற்றப்படும் உணவு வகைகளின் தரத்தினை கண்காணிக்கும் பொறுப்பு ஐக்கிய தேசிய கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ரோஸி சேன நாயக்கவிடம் கையளித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ-2)

# அறையை உடைத்து சூதாட்டம்; 9 பேர் கைது

(கொழும்பு)

சிலாபம் பேருந்து தரிப்பிடத்தில் பூட்டியி ருந்த அறையை உடைத்து சூதாட்டத்தில் ஈடுபட்ட ஒன்பது சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

குறித்த சந்தேகநபர்கள் நேற்று முன்தினம் பிற்பகல் கைது செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இவர்களால் ஒருவரிடமிருந்து போலி யான ஆயிரம் ரூபாய் நாண யத்தாள் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளது.

சந்தேகநபர்கள் மஹர நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (அ-2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழர் தாயக பகுதிகளில் ஐ.நா.படையை நிறுத்துங்கள்!

## வாழ்வுரிமை கட்சி தலைவர் வேல்முருகன்

(கொழும்பு)

**தமிழர் பிரச்சினைக்கு தீர்வுகாணும் வரை ஐக்கிய நாடுகள் படையை தமிழர் தாயகப் பிரதேசங்களில் நிறுத்துவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்று தமிழக வாழ்வுரிமை கட்சி தலைவர் தி.வேல்முருகன் அறிக்கையில் கூறியுள்ளார்.**

இது தொடர்பாக அறிக்கையில் கூறப்பட்டுள்ளவை வருமாறு,யாழ்ப்பாணம் பல்கலைக்கழக மாணவர் கள் மீதான இலங்கை அரசின் கொடுந்தாக்குதல்களும் சட்டவி ரோத கைது நடவடிக்கைகளும் தொடர் கதை யாக வருகின்றன.

கடந்த நவம்பர் 27 ஆம் திகதி மாவீரர் நாளை கடைப்பிடித்தார்கள் என்ற ஒரே குற்றச்சாட்டுக்காக மாணவர்களை கைது செய்து வருகிறது இலங்கை அரசு மாணவர்களை மட்டுமல்ல யாழ்ப்பாணத்தில் அப்பாவித் தமிழர்களை பயங்கரவாதத் தடுப்பு சட்டத்தின் கீழ் திடீரென கைது செய்துள்ளனர். கைது செய்யப்படுகிறவர்களின் கதி என்ன? அவர்கள் எந்த நீதிமன்றங்களில் ஆஜர்படுத்தப்பட்டனர்? எந்தசிறைகளில் அடைக்கப்படுகின்றனர் என்ற விபரத்தைக்கூட அரச படைகள் தெரிவிக்க மறுத்து வருகின்றன.

தமிழர்கள் மீது கட்டவிழ்த்து விடப்பட்டிருக்கும் கொடுமையை கேட்டறிந்து வந்த ஐ.நா. பிரதிநிதிகள் குழுவினரிடம் தமிழர் பிரச்சினைக்குத் தீர்வு காணும்வரை தமிழர் பிரதேசத்தில் ஐ.நா.படையை நிறுத்த வேண்டும் என்று தமிழர்கள் வலியுறுத்தி இருக்கின்றனர்.யாழ்ப்பாணத்தில் உள்ள இந்திய தூதரோ இதுவரை வாய்மூடி மௌனியாக இருந்து வருகிறார்.

இலங்கையில் மாணவர்கள் மீதும் அப்பாவித் தமிழர்கள் மீதும் இலங்கை அரசு தொடரும் கோரக்கொடுமையை மத்திய அரசு தட்டிக் கேட்க வேண்டும்.

ஈழத்தமிழர்கள் கோருவதுபோல் தமிழர் பிரச்சினைக்கு தீர்வுகாணும் வரை ஐக்கிய நாடுகள் படையை தமிழர் தாயகப் பிரதேசங்களில் நிறுத்துவதற்கான நடவடிக்கைளை மேற்கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறோம்.ஈழத் தமிழர்களின் இந்த நியாயமான கோரிக்கையை நிறைவேற்றுவதற்காக சாதி, மத, கட்சி எல்லைகளைக் கடந்து தமிழர் சக்திகள் ஓரணியில் ஒன்று திரள வேண்டும் என அவர் அவ்வறிக்கையில் குறிப்பிட்டுள்ளார். (அ-2)

## சுனாமி எச்சரிக்கை ஒத்திகை நிகழ்வு

சுனாமி முன்னெச்சரிக்கை ஒத்திகை நடவடிக்கை ஒன்றினை மேற்கொள்வதற்கு அனர்த்த முகாமைத்துவ நிலையம் தீர்மானித்துள்ளது.

இச்சுனாமி முன்னெச்சரிக்கையானது எதிர்வரும் 18 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை முன்னெடுக்கப்படவுள்ளதாக குறிப்பிடப்படுகிறது.நாட்டின் 14 கரையோர பிரதேசங்களைத் தெரிவு செய்து இவ் ஒத்திகை நடவடிக்கை இடம்பெறவுள்ளதாக அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் பிரதி பணிப்பாளர் பிரதீப் கொடிப்பிலி தெரிவித்துள்ளார்.

சுனாமி அனர்த்தம் ஒன்று ஏற்படுமாயின் அதன்போது செயற்படும் விதம் குறித்து இதன்போது விளக்கமளிக்கபடவுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார். (அ-2)

## அம்பாறையில் நேற்று நில அதிர்வு

அம்பாறை மாவட்டத்தின் சில பிரதேசங்களில் பாரிய சத்தத்துடன் நில அதிர்வு ஏற்பட்டதாக பிரதேச மக்கள் தெரிவித்துள்ளனர்.

நில அதிர்வு நேற்றுக்காலை உணரப்பட்டதாக அவர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

அம்பாறை தேவாலஹிந்த, வடினாகல மற்றும் கிவுலேகம பிரதேசங்களில் அதிர்வு உணரப்பட்டுள்ளது.

இச்சம்பவம் குறித்து ஆராய்வதாக புவிச்சரிதவியல் அளவை சுரங்கப் பணியகத்தின் தலைவர் என்.பீ.விஜயானந்த தெரிவித்துள்ளார். (அ-2)

# தென்பகுதி வியாபாரிகளுக்கு வர்த்தக நிலையம் அமைப்பு

(மன்னார்)

நத்தார் மற்றும் புதுவருட பண்டிகையினை முன்னிட்டு வர்த்தக நடவடிக்கைகளுக்காக வரும் தென்பகுதி வியாபாரிகளுக்கு மன்னார் பொது விளையாட்டரங்கில் எதிர்வரும் 15ஆம் திகதி தொடக்கம் வர்த்தக நிலையங்கள் அமைப்பதற்கான இடங்கள் ஒதுக்கப்படவுள்ளதாக மன்னார் நகரசபையின் உறுப்பினர் எஸ்.இரட்ணசிங்கம் குமரேஸ் தெரிவித்துள்ளார்.

கடந்த வருடம் பண்டிகைக்கால வியாபார நடவடிக்கைகள் மன்னார் நகரசபை பிரதான வீதியில் மேற்கொள்ளப்பட்டது.

எனினும் இவ்வருட விற்பனை நடவடிக்கை எவையும் குறித்த வீதியில் நடத்துவதற்கு எக்காரணம் கொண்டும் மன்னார் நகரசபையினால் அனுமதிக்கப்படமாட்டாதென அவர் கூறியுள்ளார்.

மேலும் குறித்த கடைகளுக்கான அனுமதிப்பத்திரம் மன்னார் நகர சபையில் விநியோகிக்கப்படுவதாகவும் விண்ணப்பிக்கும் வியாபாரிகள் 15× 15 சதுர அடி கடைக்கு 12 ஆயிரம் ரூபாவினை கட்டணமாக செலுத்த வேண்டும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

இவ்வருட பண்டிகைக்காலத்தை முன்னிட்டு தென்பகுதி வியாபாரிகள் அதிகளவில் மன்னாருக்கு வருகை தருவார்கள் என எதிர்பார்க்கப்பட்டு சகலவித நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக அவர் கூறியுள்ளார். (அ-2)

# தெரிவுக்குழுவின் விசாரணைகள் முடிவுக்கு கொண்டுவரப்பட்டன

## மேலிடத்து உத்தரவே காரணம் என்கிறார் விஜிதஹேரத்

(கொழும்பு)

நாடாளுமன்ற தெரிவுக்குழுவின் செயற்பாடுகள் முடிவுக்கு கொண்டுவரப்பட்டன என பிரதம நீதியரசருக்கு எதிரான தெரிவுக் குழுவின் உறுப்பினரான விஜித ஹேரத் தெரிவித்தார்.

மேலிடத்தில் இருந்து திடீரென கிடைக்கப்பெற்ற உத்தரவிற்கமையவே மேற்படி செயற்பாடுகள் முடிவுக்குக் கொண்டு வரப்பட்டதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

கொழும்பில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அவர் மேலும் தெரிவிக்கையில், நாடாளுமன்ற தெரிவுக்குழுவின் நடவடிக்கைகளை அடுத்த ஜனவரி வரை கொண்டு செல்ல இணக்கம் காணப்பட்டது. எனினும் எதிர்க்கட்சி உறுப்பினர்கள் இராஜினாமா செய்த அடுத்த நாளே தெரிவுக் குழுவின் இறுதி தீர்மானம் வெளியிடப்பட்டது என அவர் குறிப்பிட்டார்.

பிரதம நீதியரசருக்கு எதிரான நாடாளுமன்ற தெரிவுக்குழுவின் அறிக்கையை யாராலும் ஏற்றுக்கொள்ள முடியாது.இது ஒரு அநியாயமான தீர்மானமாகும் என நாடாளுமன்ற உறுப்பினர் விஜித ஹேரத் மேலும் தெரிவித்தார். (அ-2)

# பதவியை விட்டு விலகுவதே பிரதம நீதியரசருக்கு நல்லது

## தே.ப.தேசிய இயக்கம் கூறுகிறது

(கொழும்பு)

நாட்டிற்கு துரோகியாகாமல் பதவியை விட்டு விலகிச்செல்வதே பிரதம நீதியரசர் ஷிராணி பண்டாரநாயக்கவிற்கு நல்லது. ஏனெனில் சர்வதேச சக்திகள் நாட்டிற்கு எதிரான சதியினை மீண்டும் புதுக்கடையிலிருந்து ஆரம்பித்துள்ளன. இவ்வாறு தேசப்பற்றுள்ள தேசிய இயக்கம் தெரிவித்துள்ளது.

தேசப்பற்றுள்ள தேசிய இயக்கத்தின் விசேட செய்தியாளர் மாநாடு நேற்று முன்தினம் சௌசிறிபாயவில் நடைபெற்றது. அதன்போதே அமரசேகரவினால் மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டது. அவர் மேலும் தெரிவிக்கையில்,

குற்றவியல் பிரேரணையும் தெரிவுக்குழு விடயமும் அரசியலமைப்பிற்கு உட்பட்டவாறு சட்ட ரீதியாகவே இடம்பெற்றுள்ளது. இருப்பினும் தெரிவுக்குழுவில் நடைபெற்ற விசாரணை எந்தளவிற்கு நியாயமானதென தெரியாது. இதற்கான பதில் பாராளுமன்றத்தில் முன்னெடுக்கப்படவுள்ள விவாதத்தின் போது தெரிய வந்துவிடும் என்றும் அவ்வியக்கம் குறிப்பிட்டுள்ளது. (அ-2)

# தெரிவுக்குழுவில் கூட்டமைப்பை இணைக்க 9 கட்சிகள் இணைகின்றன

(கொழும்பு)

அரசியல் தீர்வுக்காக முன்மொழியப்பட்டுள்ள நாடாளுமன்ற தெரிவுக்குழுவில் தமிழ்த் தேசிய கூட்டமைப்பை இணைப்பதற்கான பேச்சுவார்த்தையில் ஈடுபடுவதற்கு ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பில் அங்கம் வகிக்கும் ஒன்பது கட்சிகள் தீர்மானித்துள்ளன.

அரசியலமைப்பிலுள்ள 13 ஆவது திருத்தச் சட்டத்தை பாதுகாப்பதற்காக இந்த ஒன்பது கட்சிகளும் ஒரு முன்னணியாக செயற்படவுள்ளன.

சிரேஷ்டஅமைச்சர் டியூகுணசேகர தலைமையிலான கம்யூனிஸ்ட் கட்சி, அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தலைமையிலான ஈ.பி.டி.பி, அமைச்சர் ஆறுமுகன் தொண்டமான் தலைமையிலான இலங் கை தொழிலாளர் காங்கிரஸ், அமைச்சர் ஹக்கீம் தலைமையிலான ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ், அமைச்சர் அதாவுல்லா தலைமையிலான தேசிய காங்கிரஸ், அமைச்சர் றிசாட் தலைமையிலான அகில இலங்கை முஸ்லிம் காங்கிரஸ், மலையக மக்கள் முன்னணி சிரேஷ்ட அமைச்சர் திஸ்ஸ விதாரண தலைமையிலான லங்கா சமசமாஜ கட்சி மற்றும் அமைச்சர் வாசுதேவ நாணயக்கார தலைமையிலான ஜனநாயக இடதுசாரி முன்னணி ஆகிய கட்சிகள் இந்த குழுவில் உள்ளடங்குகின்றன.

அமைச்சர் கே.என்.டக்ளஸ் தேவானந்தாவின் ஏற்பாட்டில் இந்த குழுவின் கூட்டம் நாடாளுமன்ற கட்டட தொகுதியில் கடந்த வாரத்தின் இரண்டு நாட்கள் இடம்பெற்றன.

13 ஆவது திருத்தச்சட்டத்தை நீக்குவதற்கு எதிரான போராடுவதற்கு குறைந்தது 30 நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஆதரவை பெறுவதற்கு இந்த கட்சிகள் தீர்மானித்துள்ளன என இந்த கூட்டத்தில் கலந்து கொண்ட சிரேஷ்ட அமைச்சர் டியூ குணசேகர தெரிவித்தார்.இந்த கட்சிகள் அனைத்தும் இணைத்து ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவிற்கு கடிதம் அனுப்பவுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

இந்த கட்சிகளின் உறுப்பினர்களுக்கு மேலதிகமாக ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியின் உறுப்பினர்களான அமைச்சர் டிலான் பெரேரா, ரெஜினோல் குரே மற்றும் அதாவுட செனவிரத்ன ஆகியோரும் ஆதரவு தெரிவித்துள்ளதாக அமைச்சர் டியூ குணசேகர மேலும் தெரிவித்தார். (அ-2)



திருநெல்வேலி சிமாட்கிட்ஸ் முன்பள்ளி சிறார்களின் நவராத்திரி விழா அண்மையில் யா/ கொக்குவில் இந்துக் கல்லூரியின் பஞ்சலிங்கம் கலை அரங்கில் நடைபெற்றது.இதில் சிறுவர்களின் நாடக நிகழ்வினைப் படத்தில் காணலாம். (படம் :-புன்னாலைக்கட்டுவன் செய்தியாளர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சிறுவர் அரங்கம்

307

## புதியவர் கூறிய பழம்

### அம்புலிமாமா கதைகள்



வாரணாசியிலிருந்து சற்றுத் தூரத்திலுள்ள சாரநாத்தில் ஒரு பெரிய விஹாரம் தோன்றியது.

அந்த விஹாரத்தைத் தோற்றுவித்தவர் கபிலவஸ்துவின் மன்னரின் மகனான கௌதமர் என அறிந்ததும் அப்பகுதி மக்கள் மிகவும் ஆச்சரியப்பட்டார்கள். அவரை அவரது சீடர்கள் புத்தர் என்றே அழைத்து வந்தார்கள்.


புத்தரும் அவரது சீடர்களும் துறவிகள் போலத்தான் வாழ்ந்து வந்தார்கள். காலையில் தியானம் செய்தபின் அவர்களில் சிலர் அங்கிருந்து பிரிந்து நான்கு திசைகளிலும் செல்வார்கள்.

ஒருவர் மேற்குப் பக்கத்துக் கிராமத்திற்குச் சென்றால் மற்றவர் வடக்கில் உள்ள கிராமத்திற்குச் செல் வார். இவர்கள் பிக்குகள் என அழைக்கப்பட்டனர். ஒரு பிக்கு ஒரு வீட்டின் முன் அந்த வீட்டுக்காரர் தம்மைப் பார்க்கும்வரை கையில் திருவோட்டுடன் நிற்பார். அவர் அவ் வீட்டுக்காரரிடமிருந்து உணவுப்பொருளை எதிர்பார்க்கிறார் என்பது அதன் பொருள். அநேகமாக எல்லோருமே அத் திருவோட்டில் அரிசியையோ அல்லது ஏதாவது உணவுப் பொருளையோ போடுவார்கள்.

ஆனால் எந்த வீட்டுக்காரனாவது இல்லை என்று தலையை ஆட்டினால் பிக்கு மௌனமாக அடுத்த வீட்டிற்குச் சென்று விடுவார்.

சில சமயங்களில் வாரணாசி மக்கள் சாரநாத் விஹாரத்தைக் காணவருவார்கள். அவர்கள் புத்தரைக் கண்டு வணங்கி நிற்பார்கள். புத்தரும் தம் கோட்பாடுகளை அவர்களுக்கு விபரித்துக் கூறுவார்.

மேலும் அவர்கள் கேட்கும் வினாக்களுக்கு பொறுமையுடன் விடையளித்து அவர்களது சந்தேகங்களைப் போக்குவார். மக்களும் அவர் கூறுவதை மிக



வும் பக்தி சிரத்தையுடன் கேட்பார்கள்.

சாரநாத்திற்குப் பக்கத்தில் ஒரு வட்டிக்காரன் இருந்தான். அவன் ஒருநாளும் பௌத்த விஹாரத்திற்குச் சென்றதும் இல்லை. புத்தரைத் தரிசித்ததும் இல்லை. ஆயினும் அவரை வெறுத்து வந்தான்.

புத்தரின் உபதேசங்களை மக்கள் கேட்டு அதன்படியே நடந்து கொண்டால் அவர்களுக்கு உலக வாழ்க்கை மீது வெறுப்பு ஏற்படும். அப்போது அவர்கள் பணம் சம்பாதிக்க முயலமாட்டார்கள்.


மக்களுக்குப் பணமே தேவைப் படாவிட்டால் அவனது வட்டிக் கடை எப்படி நடக்கும்? இதை நினைக்க நினைக்க அவனுக்குப் புத்தர் மீது கோபம் கோபமாக வந்தது.

ஒருநாள் காலையில் அந்த வட்டிக்கடைக்காரன் ஆற்றில் குளிக்கச் சென்று கொண்டிருந்தான். அப்போது தன் வீட்டு வாசலில் ஓர் இளம் வயதுத் துறவி நிற்பதைக் கண்டான். உடனே அவன் கோபம் கொண்டான்.

அவன் கொடுப்பதற்கு ஒன்றும் இல்லை எனக்கூறுவது போலத் தலையை அசைந்திருந்தால் அந்த இளம் துறவி அங்கிருந்து போயிருப்பார். ஆனால் அத்துறவிக்குப் பாடம் கற்பிக்கவேண்டும் என நினைத்தான்.

அதனால் அவரைப் பார்த்து ஏய்! நீ உண்மையில் யார் என்று உனக்கு விளங்கவைக்கிறேன். நீ ஓர் ஊர் சுற்றி. உதவாக்கரை. ஒரு பைசாவிற்குக் கூட உபயோகப்படாதவன். தெரிந்ததா? என்று உரக்கக் கத்தினான்.

ஆனால் அந்தத்துறவியோ அந்த ஏசலைக்கேட்டு எதுவும் பேசாமலேயே இருந்தார். இதனால் வட்டிக்கடைக்காரனின் கோபம் மேலும் அதிகரித்தது. அதனால் அவரை அடித்து



விடுபவன் போலக்கையை ஓங்கி அந்தத்துறவியை நோக்கி வசவுகளைப் பொழிந்து கொண்டிருந்தான். அதனால் அங்கு ஒரு கூட்டமே கூடிவேடிக்கை பார்க்கலாயிற்று.

வட்டிக்கடைக்காரன் இப்படியே ஒரு மணிநேரம் கத்திக் கொண்டிருந்தான்.

அப்போதும் அந்தத்துறவி எதுவுமே பேசாமல் நிற்கவே வட்டிக் கடைக்காரன் அவர் பக்கம் போய் உற்றுப்பார்த்தான்.

அவரது அமைதியான தோற்றம் அவனை வசீகரித்தது. தான் எப்படிக் கத்தியும் அவர் பேசாமல் நின்றது கண்டு அவன் ஆச்சரியப்பட்டான்.

பின்பு அவன் ஏன் பேசாமல் நிற்கிறாய்? வாய் திறந்து எதையாவது சொல் என்றான்.

இளம் துறவி புன்னகை புரிந்து தன் தொங்கு பையிலிருந்து ஒரு பழத்தை எடுத்து நண்பரே! நான் இதனை உமக்குக் கொடுத்து நீங்கள் அதை ஏற்க மறுத்துவிட்டால் இது எங்கே போகும் என்று கேட்டார்.

அதற்கு வட்டிக் கடைக்காரன் இது என்ன கேள்வி? அது வேறு எங்கும்போகாது. உன்னிடமேதான் இருக்கும் என்றான்.

இளம் துறவியும் மிகவும் சரியே. நீர் சொன்னதை எல்லாம் நான் ஏற்கவில்லை. எனவே அவை யாவும் உமக்கேதான் என்றார்.

அதைக் கேட்டு அந்த வட்டிக்காரன் திகைத்துப் போனான். தான் திட்டியதெல்லாம் தனக்கே தான் என அறிந்ததும் அவன் வெட்கிப்போனான்.

அப்போது கூட்டத்தில் நின்ற சிலர் இளம் துறவியை அடையாளம் கண்டு ஆ! புத்தபிரானா! என்று கூறி வணங்கினார்கள். வட்டிக் கடைக்காரனும் அவரை வணங்கி நின்றான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

THE MAYA CALENDAR

மாயா நாட்காட்டி ஒரு ஆய்வு

# உலகம் அழியுமா? அழியாதா? புலப்படும் பிரம்மிப்புகள்!

-ராஜ்சிவா- 10

**பூமியை மோதுமா புதியகோள்? (கல் என்று நாம் பேசிக்கொள்வது)**

ஆராய்ச்சியாளர்கள் தற்போதைய ஆய்வு களின்படி பூமிக்கு வரக்கூடிய அழிவுகள் என்று கூறக்கூடியவையும் அது சாத்தியமா என்பது பற்றியுமான தகவல்களை இங்கே பார்ப்போம்.

1. சூரியன், பால்வெளிமண்டலத்தில் உள்ள கறுப்புப் பள்ளத்தினாலோ அல்லது கருந்துளையினாலோ ஈர்க்கப்படலாம் இதனால் பூமிக்கு ஆபத்து வரலாம் என்பது முதலாவது.

இது, இப்போதைக்கு சாத்தியமில்லை என்றும் விஞ்ஞானிகளே தெரிவிக்கின் றனர். ஏனெனில், பால்வெளி மண்டலத்திலுள்ள கறுப்புப் பள்ளம் சூரியனுக்கு மிகத்தொலைவில் தான் உள்ளது. சூரியன் இப்போதைக்கு கரும்பள்ளத்துக்கு அண்மையில் செல்லும் வாய்ப்பு இல்லை.

2.பூமியின் வட, தென் துருவங்களுக்கு ஊடாகச் செல்லும் அச்சு (போல் ஷிஃப்ற்) இடம் மாறி பூமியின் காலநிலையில் மாற்றங்கள் ஏற்படலாம்; இதனால் அழிவு ஏற்படலாம் என்பது இரண்டாவது.

இதுகூட தற்போதைக்கு நிலவும் என நம்பக்கூடிய எந்த அறிகுறிகளும் ஆய்வுகளில் தென்பட்டதாகச் சொல்லப்பட வில்லை. திடுதிப்பென்று ஏதாவது ஏற்படுமா அதுவும் சொல்ல முடியாது.

3.விண்ணில் சுற்றித் திரியும் மிகப் பெரிய விண்கற்களில் ஏதாவது ஒன்று தாக்கி பூமியில் அழிவுகள் ஏற்படலாம் என்பது மூன்றாவது.

இது எப்போதுமே இருந்து கொண்டிருக்கிற ஆபத்துதான். ஆயினும் இதுவரை காலத்தில் இப்படியான சிறியவகையிலான ஆபத்துக்கள் பூமிக்கு நிகழ்ந்திருப்பதாகவும் அச்சமயம் தான் டைனசோர் என்ற ஆதி விலங்கினம் அழிந்தது என்றும் நம்பப்படுகிறதே தவிர,பூமிக்கு முழுமையான ஒரு அழிவை அவை ஏற்படுத்தியதாக நம்பப் படவில்லை. பெரியபெரிய விண்கற்கள் ஒன்றல்ல ஆயிரக்கணக்கில், இன்றல்ல மிகப்பழைய காலத்திலிருந்து பூமிக்கு சமீபமாக விண்வெளியில் சுற்றித்திரிவதாகவும் எந்தக்கல்லும் பூமியை நோக்கி நகர்வதாகக் இதுவரை கண்டுபிடிக்கப்படவில்லை எனவும் விஞ்ஞானிகள் தெரிவிக்கின்றனர்.

4. பிளானெட் எக்ஸ் அல்லது நிபிரு என்று சொல்லப்படும் கோள் தாக்குவதால் பூமி அழியலாம் என்பது நாலாவதாகும்.

20.12.2012 அன்று பூமியிலிருந்து 3.5 மில்லியன் கிலோமீற்றர் தூரத்தில் இருக்கப்போகும் இக்கோள் பூமியைவந்து தாக்குமா என்பது சொல்லமுடியாததுதான். இருப்பினும் நாசா விண்வெளி ஆராய்ச்சி நிலையம் அப்படி ஒரு கோள்பற்றிய விடயங்களை மறுத்து வருகிறதுடன் அவ்வாறான பயம் தேவையற்றது என்றவகையிலும் தகவல்களை வெளியிடுகிறது.

5. சூரியனில் ஏற்படும் அதியுயர் மிகை வெப்ப பாய்ச்சலால் உருவாகும் மின்காந்த கதிர்களின் தாக்கத்தால் பூமி அழிவைச் சந்திக்கலாம் என்பது ஐந்தாவது.

இத்தகைய மின்காந்தக் கதிர்களின் தாக்கம் பொதுவாக அறிவியல் உலகத்தால் எதிர்பார்க்கப்படுகிறது என்றுதான் நம்ப இடமுண்டு. ஆயினும் அது பூமியை முற்று முழுதாக அழிவுக்குள்ளாக்கும் என்று கருத இடமில்லை. இன்றைய நவீன உலகின் இலத்திரனியல் சாதனங்களை அது செயற் படவிடாது முடக்கலாம். இதனால் இந்த இலத்திரனியல் உலகம் ஸ்தம்பித்துவிட வாய்ப்பிருக்கிறது என்ற வகையிலேயே பெரிதும் எதிர்பார்க்கப்படுகிறது.

இருப்பினும் எதுகருதியோ உலகின் அதிக்க சக்திகள், பல மர்மமான நடவடிக்கைகளில் ஈடுபட்டுவருகின்றன. அதுபற்றியும் மிகச்சுருக்கமாக இங்கு நோக்குவோம்.

ஜெஸ்லி வெண்டூரா என்ற அமெரிக்கர் ஒருவர் சில முக்கியமான தகவல்களை வெளிக் கொணர்ந்திருக்கிறார். இவர் ஒரு மல்யுத்த வீரர். சினிமா நடிகரும் கூட. அத்துடன் இவர் அமெரிக்காவின் மின்ஸொட்டா என்ற மாநிலத்தின் கவர்னராகவும் இருந்திருக்கிறார்.

அமெரிக்காவிலுள்ள கொலராடோ மாநிலத்தில் அமைந்த டென்வர் விமான நிலையத்தில் நிலத்திற்குக் கீழாக, சில வேலைகள் நடைபெறுவதாகக் கூறப்படுகிறது.

அதாவது, சாதாரணமாகப்ப பார்த்தால் பயணிகள் சுறுசுறுப்பாக பயணத்தில் ஈடுபடும் விமான நிலையம்தான் இது. ஆனால், அந்தப் பயணிகள் எவரும்க்கும் தெரியாமல் அங்கே அமைதியாக ஒரு விடயம் நடந்து கொண்டிருக்கிறது. பின்னர் எப்படியோ, இப்படி ஒன்று நடப்பது மெதுமெதுவாகக் கசியத் தொடங்கியதும்தான் மீடியாக்களுக்கும் மக்களுக்கும் தெரியவந்தன.



டென்வர் விமானநிலையம்

ஐக்கிய அமெரிக்கப் பெருநிலப்பரப்பில் நட்டநடுவே அமைந்திருந்தது இந்த டென்வர் விமான நிலையும். விமான நிலையத்திற்குக் கீழே மிக ஆழத்தில் பலர் தங்கியிருக்கக் கூடிய கட்டடங்கள் அமெரிக்க அரசினாலேயே அமைக்கப்படுகின்றன. அப்படி அமைக்கப் படும் சுரங்கக் கட்டடத்தின் நீள அகலம் 8 சதுர கிலோமீற்றருக்கும் அதிகம். இவ்வளவுமிரமாண்டமான நிலக்கீழ் கட்டடங்கள் மிக ஆழத்தில் அதுவும் ஒரு விமான நிலையத்திற்கும் கீழே கடட்டப்படுவதன் காரணம் என்ன?




டென்வரில் கல்வெட்டு


இந்த நிலக்கீழ்க் கட்டடங்கள் எந்தவொரு அழிவுகழினாலும் பாதிக்கப்படமுடியாதவாறு மிகமிகப் பலம்வாய்ந்த முறையில் நவீனமாக அமைக்கப்பட்டிருந்தன. இந்தக்க கட்டடங்கள் அமைக்கப்படுவதுபற்றி எந்தத் தகவலும் வெளியே தெரியாமல் மிக இரகசியமாகப் பாதுகாக்கப்பட்டும் வருகிறது. பாதுகாப்பென்றால் எப்படிப்பட்ட பாதுகாப்பு என்று நினைக்கிறீர்கள்? அமெரிக்க இராணுவத்தின் அதியுயர் பாதுகாப்பு இதற்கு வழங்கப்பட்டிருக்கிறது. இந்தக்கட்டடம் அமைப்பவர்களிடம் இதுபற்றிக் கேட்டால், கிடைக்கும் பதில் மௌனம் மட்டும்தான்.

மிகுந்த சிரமங்களுக்கு மத்தியில் இதை ஆராய்ந்து பார்த்தால் இந்தக்கட்டடங்கள் * உலக அழிவு நேரின், பலர் பாதுகாப்பாக வாழும்படி அமைக்கப்படுகிறது எனத் தெரியவருகிறது. ஒரு நட்சத்திர விடுதியின் வசதிகளுடன் கூடிய பல அறைகளுடன் இது அமைக்கப்படுகிறது. இதை யார் அமைக்கிறார்கள்? எதற்கு அமைக்கிறார்கள் என்ற எந்தக் கேள்விக்கும் அங்கு யாரும் பதில் சொல்லத் தயாரில்லை. எல்லாமே மர்மங்களாக இருக்கின்றன. கட்டங் கட்டப்படும் இடத்தில் நியூ வேல்ட் எயர் போட் கொம்மிஸன் என்னும் ஸ்தாபனத்தால் கட்டடம் கட்டப்படுகின்றது என்று எழுதப் பட்ட கல்வெட்டு இருக்கின்றது. ஆனால், இந்த ஸ்தாபனம் பற்றி ஆராய்ந்தால், அப்படி ஒரு ஸ்தாபனம் அமெரிக்காவில் சட்டரீதியாக எங்குமே பதிவு செய்யப்படவில்லை. அந்தக் கல்வெட்டிலுள்ள சின்னமும் நியூ வேல்ட் ஓடர் எனும் பெயரும் எமக்கு, முன்னரே பரிச்சயமானாதால் பல உண்மைகளை அவை சொல்லாமல் சொல்கின்றன.

அமெரிக்காவைப் பொறுத்தவரை இந்த விமானநிலையம், ஒன்றும் மிக முக்கியமான விமான நிலையமோ அல்லது கொலராடோ ஒரு முக்கிய மாநிலமோ கிடையாது. ஆனால், இந்த விமான நிலையத்திற்கு மிக அருகில் சமீபமாக பலர் வீடுகளை வாங்கத் தொடங்கியிருக்கின்றனர். அவர்கள் யார்யார் என்றால், உலகின் மிகப் பெரிய கோடீஸ்வரர்கள்.

**2012 என்ற திரைப் படத்தில்**

சொல்லிவைத்தது போல எல்லாப் பணக்



டென்வர் விமானநிலையத்தின் நிலக்கீழ் சுரங்கங்கள்


காரர்களும் ஏன் டென்வர் விமான நிலையத்திற்கருகே வீடுகள் வாங்குகிறார்கள்? ஏன் விமான நிலையத்திற்குக்கீழே நிலக்கீழ் சுரங்கங்கள் அமைக்கப்படுகின்றன. உலகம் அழியும் நிலை தோன்றினால், அதிலிருந்து காப்பாற்றப்பட ஒருசிலர் மட்டுமே தேர்வு செய்யப் பட்டு பாதுகாக்கப்படுவர்களா? அந்த ஒரு சிலரில் நானே,ா நீங்களோ இல்லாமல் அதிகாரத்திலுள்ளவர்களும் உலகக் கோடீஸ்வரர்களும் மட்டும்தான் காப்பாற் றப்படுவார்களா? இந்தக்கேள்விகளின் அடிப்படையிலேயே சமீபத்தில் வெளிவந்த 2012 என்ற ஆங்கிலத் திரைப்படம் எடுக்கப்பட்டிருந்தது. அந்தப்படத்தை ஒரு ஆக்ஷன் திரில்லர் என்னும் வகையிலேயே நாம் பார்த்தோம் ஆனால், ஆதிக்க சக்திகளின் சூட்சிகள் பற்றி விரிவாக படத்தில் சுட்டிக்காட்டப்பட்டிருப்பதை கவனிக்கத் தவறிவிட்டோம்.

டென்வர் விமான நிலையச் சுவர்களில் விசித்திரமாக மிகப்பிரமாண்டமாக சித்திரங்கள் வரையப்பட்டிருக்கின்றன. அந்தச் சித்திரங்கள் அனைத்தும் சொல்வது வேறெதைப் பற்றியுமல்ல. உலக அழிவைப்பற்றித்தான். அந்தச் சித்திரங்களிடையே மாயன் இனத்துச் சிறுமி ஒருத்தி மாயன்களின் சுவரோவியத்தின் பகுதியொன்றை தன் கைகளில் ஏந்தியபடி இருப்பதும் காணப்படுகின்றது.

> **"2012 டிசெம்பர் 22 இல் உலகம் அழியுமா என என்னைத் தனிப் பட்ட முறையில் நீங்கள் கேட்பீர்களானால், நான் 2012, 23 ஆம் திகதி உங்களுடன் தேநீர் அருந்தத் தயாராக இருக்கிறேன் என்று தான் சொல்வேன்"**
>
> *-ராஜ்சிவா*



இந்த டெர்வின் விமான நிலையத்தின் நிலத்திற்குக் கீழே அமைக்கப்பட்ட சுரங்க நகரைப்போல அமெரிக்காவில் மட்டும் மொத்தமாக 18 இடங்களில் நிலக்கீழ் சுரங்கங்கள் இராணுவப்பாதுகாப்புகளுடன் இரகசியமாக அமைக்கப்பட்டு வருகின்றன. அத்துடன் உலகெங்கும் பல இடங்களிலும் மிக இரகசியமாக பல கட்டடங்கள் இப்படி அமைக்கப்பட்டுவருகின்றன. குறிப்பாக ஆபிரிக்காவில் மிகப்பெரிய நிலக்கீழ்நகரம் அமைக்கப்பட்டுவருகிறது.



வெளியே எதுவுமே தெரியாத அளவுக்கு அமைதியாகக் காணப்படும் இவை உள்ளே மிகப்பிரமாண்டமானவை.

நேர்வேநாட்டில் வடதுருவத்தில் ஸ்வால் பாட் என்னும் தீவு உள்ளது. அது மலைகளும் காடுகளும் பனிப்படிவுமாகவே காட்சியளிக்கும் இடம். இதுவும் டென்வர் போல முக்கிய இடமாக இப்போது இருக்கிறது. ஏன் தெரியுமா?

உலகிலுள்ள அனைதுவிதமான மரங்கள், செடிகள், கொடிகள் ஆகியவற்றின் விதைகளும் கிழங்குகளும் தண்டுகளும் கோடிகக்ணக்கில் டன் டன்னாக அங்கு பாதுகாப்பாக சேர்த்து வைக்கப்படுகிறது. 9 மில்லியன் டொலர் செலவில் உருவாக்கப் பட்டு மலைகளைக் குடைந்து நிலத்தடிச்சுரங்கமாக கட்டப்பட்ட கட்டடத்தில் இந்த விதைகள் பாதுகாக்கப்படுகின்றன. உலகஅழிவு நேரிட்டாலும் இவற்றிற்கு எந்தப்பாதிப்பும் வரமுடியாத அமைப்பில் கட்டடங்கள் கட்டப்பட்டிருக்கின்றன.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்விப் பொதுத் தராதர சாதாரணதரப் பரீட்சை

## 2012 (டிசெம்பர்) மாதிரி வினாத்தாள் — மேல்மாகாணம்

# சித்திரக்கலை

## பகுதி I

- **எல்லா வினாக்களுக்கும் இத்தாளிலேயே விடை தருக.**
- **பின்வரும் நிழல் படத்தை பயன்படுத்தி இல.01 முதல் 05 வரை உள்ள வினாக்களுக்கு சரியான விடையை கீறிட்ட இடத்தில் எழுதுக.**



ஓவியக் கலை தொடர்பாக பண்டைய கலைஞர்களிடம் இருந்த திறமைகளை வெளிக் காட்டும் இந் நிழல் படத்தில் தென்படும் ஓவியம் 1. ........................ காலத்திற்கு உரித்தான 2. .................. னுள் காணப்படும் 3. ............... எனப்படும் சித்திரமாகும். புத்தர் சிலையுள்ள கட்டத்தினுள் 4. .................... கட்டடக்கலை கலைநுட்பம் உள்ளதாக நம்பப்படுகிறது. 5. ............... சாந்தின் மேல் சித்திரம் வரைந்துள்ளதாக கருதப்படும். இது இலங்கை சித்திர கலையின் அடையாளத்தை காட்டும் முக்கிய இடமாகும்.

- **வினா இலக்கம் 06 முதல் 10 வரையான வினாக்களுக்கு விடை தருக.**

6. கண்டிய சித்திரம் வரைந்த கலைஞர் யார்?

7. அரச குடும்பமும் நித்திரையில் உள்ள பெண்கள் போன்ற சிறப்பான பூங்கா மூர்த்திகளை நிர்மாணித்த பிரித்தானிய கலைஞர் யார்?

8. இந்துநதி நாகரிகத்தில் கிடைக்கப்பெற்ற நடனதாரகை எனப்படும் சிறிய சிலைகளை நிர்மாணித்துள்ள ஊடகம் எது?

9. தென்னிந்திய கட்டட கலைக்கு உறவு கூறும் கம்பல காலத்திற்கு உரித்தான கடலாதெனிய விகாரையை நிர்மாணித்த கலைஞர் யார்?

10. கௌதமபுத்தர் இறப்பை தோற்கடித்து புத்தரான சந்தர்ப்பத்தை வெளிக்காட்டுவதற்காக புராண கலைஞர் புத்த மூர்த்திகளுக்கு இட்ட முத்திரை எது?

- **வினா இலக்கம் 11 முதல் 15 வரை வழங்கப்பட்டுள்ள விடைகளில் மிகவும் சரியான விடையின் கீழ் கோடிடுக.**

11. இலங்கையின் மிகப்பிரசித்தமான விகாரையின் ஓவியத்திற்கு ஒத்த ஓவியம் இந்தியாவின் அஜந்தாவின் இலக்கம் 01. குகையினுள் காணப்படுகின்றது. அந்த ஓவியமாவது

1. கௌதம புத்தரின் முதல் சமய உபதேசம் உள்ள சித்திரம்
2. பத்மபாணி புத்தர் உருவம்
3. நடனதாரகைகளின் நடன சித்திரம்
4. புத்தராகுதல்

12. "அப்புகாமி" எனப்படும் பத்திரிகை கேலிச்சித்திரம் நிர்மாணித்த எழுபது, எண்பது தசாப்தத்தில் இலங்கையின் பிரசித்தி பெற்ற கேலிச்சித்திர கலைஞராவது

1. டபிள்யூ. விஜேசோம அவர்கள் 2. கெமிலஸ் பெரேரா அவர்கள்
3. ஒப்ரி கோலட் அவர்கள் 4. யூனுஸ் அவர்கள்

13. பொலனறுவையின் சிறந்த கட்டட கலையின் தூண்களுக்காக பயன்படுத்தப்பட்டுள்ளது முறையான தாமரை தண்டு அமைப்பிலேயாகும். அந்த கட்டடக் கலையானது

1. பொத்குள் விகாரை 2. நிஸ்ஸங்கலதா மண்டபம்
3. லங்காதிலக விகாரை 4. இலக்க 02 சிவ தேவாலயம்

14. "எத்தீனா தேவதை" எனப்படும் மிக பிரசித்தி பெற்ற கிரேக்க சிற்பத்தை நிர்மாணித்த கலைஞர்

1. ஸ்கொப்ஸ் 2. ப்ருக்சிடெலஸ்
3. மயிரன் 4. பீடியஸ்

15. அனுராதபுர காலத்திற்கு உரித்தான சீகிரி ஓவியம் வரைந்த சாந்து தொடர்பான பற்பல கருத்துக்கள் இருந்தாலும் அதிகமான ஆய்வாளர்களின் கருத்தாவது

1. பெரஸ்கோ புவனோ முறையில் வரைந்த சித்திரமாகும்.
2. டெம்பரா முறையில் வரைந்த சித்திரமாகும்.
3. கியுரொஸ் கியுரோ முறையில் வரைந்த சித்திரமாகும்.
4. பெரஸ்கோ சிகோ முறையில் வரைந்த சித்திரமாகும்.


- **வினா இலக்கம் 16 இலிருந்து 20 வரை தரப்பட்டுள்ள படங்களுக்கு மிகவும் பொருத்தமாக படங்கள் A, B, C, D, E, F, G, H, I, J என்ற படங்களில் இருந்து தெரிவு செய்து குறித்த குறியீட்டை கீறிட்ட இடத்தின் மீது எழுதுக.**

16.  (................)  A  B

17.  (................)  C 

18.  (................)  E  F

19.  (................)  G  H

20.  (................)  I  J

- **வினா இலக்கம் 21 முதல் 25 வரை தரப்பட்டுள்ள சொற்களுக்கு பொருத்தமான வாக்கியம் எழுதுக.**

21. மினராத்....................................
22. சதுரக் கோட்டம்.......................
23. ஆகாய பார்வை உலகம்.......................
24. கோலம் வடிவமைப்பு..............................
25. சன்னிகாட்சி சித்திரம்...............................

- **வினா இலக்கம் 26 முதல் 30 வரை தரப்பட்டுள்ள வினாக்களுக்கு விடை அளிப்பதற்கு K,L,M,N,O என்ற படங்களை பயன்படுத்தவும்.**



K L M N O

26. K எழுத்தில் காட்டுவது காஞ்சி தோரண செதுக்கல் சிற்பங்களில் வரும் விசேட செதுக்கல் சிற்பமாகும். அதை குறிப்பிடுக.

27. மிசர கலையில் இடம்பெறும் சித்திரங்களில் முக்கியமான சித்திரம் L எழுத்தில் காட்டப்பட்டுகின்றது. அது என்ன பெயரில் அழைக்கப்படுகின்றது?

28. வெஸ்ஸந்தர கதையின் பகுதியை காட்டும் M சித்திரமானது கண்டிய காலத்திற்கு உரிய மிக பிரசித்த லேன் விகாரையாகும். அந்த விகாரை எது?

29. பாராளுமன்றம் கூடும்போது கௌரவமாக எடுத்துச் செல்லும் விசேட பொருள் செங்கோல் N சித்திரத்தில் காட்டப்படுகின்றது. அதை நிர்மாணித்த கலைஞர் யார்?

30. தற்போது கொழும்பு கலாபவனத்தில் வைக்கப்பட்டுள்ள O எழுத்தில் காணப்படும் சித்திரம் முதலிந்து A, C, G, S அமரசேகர சித்தராவின் நிர்மாணமாகும். அதை குறிப்பிடும் பெயர் என்ன?

- **வினா இலக்கம் 31 முதல் 35 வரை உள்ள வினாக்களுக்கு சரியான விடையை கீறிட்ட இடத்தில் எழுதுக.**

31. குபல்ஹால, ஹெசல பெரஹரா போன்ற மிகப்பிரசித்தி பெற்ற சித்திரம் வரைந்த ................ அவர்கள் கொழும்பு காலத்தில் இருந்த சிறந்த சித்திர கலைஞராகும்.


32. கண்ணாடியில் தனது உருவத்தை பார்க்கும் பெண்மணியின் உருவம் உள்ள கிரேக்க சிலையானது ......... பரம்பரை காலத்தில் நிர்மாணிக்கப்பட்ட சிறந்த படைப்பாக கருதப்படுகின்றது.

33. இந்தியாவைப் போல் இலங்கையிலும் புராதன பித்தளை சிற்பக்கலையில் நிர்மாணிக்கப்பட்ட ................ சிற்பத்தில் உலக வாழ்க்கையும் அழிவையும் புலப்படுத்துவதாக கருதப்படுகின்றது.

34. பொலனறுவை கல் விகாரையில் உள்ள விசேட புத்தர் சிலையான நிற்கும் சிலையின் முத்திரையாவது ....................

35. கதிர்காம கடவுளுக்காக நிர்மாணிக்கப்பட்டதாக நம்பப்படும் அம்பெக்க தேவாலயத்தில் மக்களின் வாழ்க்கை போல் தாய்மையையும் அன்பையும் வெளிக்காட்டப்படும் செதுக்கல் சிற்பமாக ................... குறிப்பிடலாம்.

- **வினா இலக்கம் 36 முதல் 40 வரையான வினாக்களுக்கு விடையளிப்பதற்காக பின்வரும் உருவப்படத்தை பயன்படுத்துக. இந்த சிறந்த புத்தர் சிலை தொடர்பான காலம், நுட்பமுறை, ஆசன முறை, முத்திரை என்பன கருத்தில் கொண்டு 5 வாக்கியங்களில் கணிப்பிடுக.**



36. ............................................................
37. ............................................................
38. ............................................................
39. ............................................................
40. ............................................................

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பகுதி II

**கவனிக்க வேண்டியவை**

- **நீங்கள் வரைய வேண்டியது ஒரு சித்திரமாகும்.**
- **உங்கள் சுட்டெண்ணையும் குறிப்பிட்ட வினாவின் இலக்கத்தையும் விடைத்தாளில் பிற்பகுதியில் தெளிவாக எழுதவும்.**
- **விடைத்தாள் (சித்திரம்) மேற்பார்வையாளருக்கு ஒப்படைக்கும்போது உலர்ந்திருக்க வேண்டும். ஈரமான சித்திரம் ஒன்றாக ஒட்டப்படுவதனால் உங்களுக்கு பாதகமாகும்.**
- **நீர் வர்ணம், போஸ்டர் வர்ணம், பெஸ்டல் உட்பட கையில் ஒட்டுப்படாத எந்தவொரு ஊடகமும் நிறம் தீட்டுவதற்கு பயன்படுத்தலாம் (போல்ட் பேனை பாவிப்பது சிறந்ததல்ல)**

**“அ” அல்லது “ஆ” அல்லது “இ” பகுதி மூன்றில் ஒன்றை மாத்திரம் தெரிவு செய்யவும்.**

### “அ” பகுதி - சித்திரம்

பின்வரும் தலைப்புக்களில் ஒன்றை மாத்திரம் தெரிவு செய்து வர்ண சித்திரம் வரையவும் நீர் தெரிவு செய்த தலைப்பிற்கு பொருத்தமான முறையில் வரைவதற்கு சுதந்திரம் உண்டு.

1. சமய தலத்தில், சமய நிகழ்வில் பங்குபற்றும் பக்தர்கள்
2. வனத்தில் மான்கூட்டின் பின் வேகமாக பாய்ந்து வரும் சிறுத்தை
3. கடற் பயணத்தின் இறுதிக்கட்டத்தில் கரை சேரும் மீன் படகும் சனக்கூட்டமும்

### “ஆ” பகுதி - அலங்காரம் வரைதல்

**பின்வரும் தலைப்புகளில் ஒன்றை மாத்திரம் தெரிவு செய்து வண்ண அலங்காரம் வடிவமைக்கவும்.**

4. இயற்கையாக காணப்படும் மலர் வகையை தெரிவு செய்து அதற்கான பற்பல வடிவங்களை ஆக்கபூர்வமாக பாவித்து மேசை புடைவையை வரைந்து வர்ணம் தீட்டுக.
5. பழைமை வாய்ந்த அலங்கார வடிவ சித்திர முறைமையை பாவித்து பத்திக் சாரத்திற்கு பொருத்தமான வடிவமைப்பை வரைந்து நிறம் தீட்டுக.
6. அடி 1 x 1 அளவிலான சமய தளத்திற்கு பொருத்தமான பீங்கான் (டயில்) உசிதமான அலங்காரம் வரைந்து நிறம் தீட்டுக.

### “இ” பகுதி - க்ரபிக்

7. சந்தைக்கு புதிதாக அறிமுகம் செய்யும் களப்பு பழப்பாகு வகை போத்தலுக்கு பொருத்தமான லேபல் வரைந்து வர்ணம் தீட்டுக. (விரும்பும் வர்ணம் பாவிக்கலாம். லேபலின் அமைப்பும் எழுத்து தொடர்பாக முக்கிய கவனம் செலுத்தவேண்டும்)

‘‘நாட்டின் அபிவிருத்தியின் முன்னோடி இளைஞர்களே’’ என்ற தலைப்பை பூரணப்படுத்தும் வண்ணம் சமூக நோக்கிற்கு பயன்படுத்த மக்களை வழிப்படுத்தும் முறையில் வண்ண போஸ்டர் சித்திரம் (விளம்பர சித்திரம்) வரைந்து நிறம் தீட்டுக.

9. வரலாற்று பிரசித்தி பெற்ற ஹெல வீரர்கள் என்ற புத்தகத்திற்கு பொருத்தமான அட்டை வரைந்து வர்ணம் தீட்டுக.









கொக்குவில் பொற்பதி அறிவாலயம் நடத்திய சரஸ்வதி முன்பள்ளி, பொற்பதி இந்து அறநெறிப் பாடசாலையின் கலை விழா நிகழ்வு அண்மையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் விருந்தினர்கள் அழைத்து வரப்படுவதையும் வடமாகாண கல்வி அபிவிருத்திக் குழுத்தலைவர் இரா. செல்வவடிவேல் இவ்வாண்டு புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவனொருவருக்கு பதக்கம் அணிவிப்பதையும் அகில இலங்கை சமாதான நீதவானாக பதவிப் பிரமாணம் செய்து கொண்ட பொற்பதி இந்து அறநெறிப் பாடசாலையின் தலைவர் ச. ஜெகநாதசர்மாவிற்கு சங்கானை பிரதேச செயலர் அ. சோதிநாதன் பொன்னாடை போர்த்தி கௌரவிப்பதையும் சிறார்களின் கலை நிகழ்வையும் படங்களில் காணலாம்.



யா / மயிலிட்டி வடக்கு கலைமகள் மகா வித்தியாலயத்திற்கு கனடா வாழ் மயிலிட்டி மக்கள் ஒன்றிய அமைப்பும் கனடா வாழ் பாடசாலையின் பழைய மாணவர்களும் இணைந்து அண்மையில் போட்டோ கொப்பி இயந்திரமொன்றை அன்பளிப்புச் செய்தனர். இதனைப் படத்தில் காணலாம்.



யா / மயிலணி சைவ மகா வித்தியாலயத்தில் வலி. தெற்கு பிரதேச சபையினரால் நடத்தப் பட்ட சிறுவர் துஷ்பிரயோகம் தொடர்பான விழிப்புணர்வு தெரு நாடகத்தின் ஒரு காட்சியைப் படத்தில் காணலாம்.

## நிகழ்வின் நிழல்கள்









வடக்கு மாகாண கல்வி அமைச்சின் கீழ் இயங்கும் ஆரம்ப பிள்ளைப் பருவ பிரிவின் ஏற்பாட்டில் வடமாகாண முன்பள்ளி சிறார்களின் கலாசார விழா மற்றும் கண்காட்சியின் இறுதிநாள் நிகழ்வு நேற்று முன்தினம் யாழ். இந்து மகளிர் கல்லூரியில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் விருந்தினர்கள் அழைத்துவரப்படுவதையும் சிறார்களின் கலை நிகழ்வையும் நிகழ்வில் கலந்து கொண்டவர் களையும் படங்களில் காணலாம்.

(படங்கள்: - எஸ். ஆர். கரன், என். குமார்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நவம்பர் 27 ஆம் திகதி அனுஷ்டிக்கப்பட்ட மாவீரர் தினம் வடக்கில் நடக்கும் இராணுவ ஆட்சிக்கு விடுக்கப்பட்ட சிவில் சவாலாகும்.

புதுக்கடை நீதிமன்றத்துக்கு அருகில் அழைத்துவரப்பட்ட அரசாங்கத்திற்குச் சார்பான கோஷகார்களின் கைகளில் அருமையான வாசகங்கள் எழுதப்பட்ட பாதாகைகள் இருந்தன. அது, நாட்டை பிளவுபடுத்தும் நீதிமன்றம் எமக்கு வேண்டாம் என்ற வாசகமாகும். இந்த ஆர்ப்பாட்டத்தில் ஜனாதிபதி ராஜபக்ஷவின் நம்பிக்கையில்லாப் பிரேரணைக்கு ஆதரவாகவும், பிரதம நீதியரசருக்கு எதிராகவும் என்பதால் இந்த வாசகத்தின் மூலம் பிரதம நீதியரசர் நாட்டை பிளவுபடுத்த நடவடிக்கை எடுப்பதாகவே அர்த்தம் கொள்ள வேண்டும். இந்த வாசகங்கள் அடங்கிய பல பாதாதைகள் நீதிமன்றத்திற்கு அருகில் காட்சிக்கு வைக்கப்பட்டிருந்ததாக ஊடகங்கள்

# போர்க்காலத்தைப் போன்று அரசு இன்றும் செயற்படுகிறது





செய்திகளை வெளியிட்டிருந்தன.

சட்டத்தின் ஆட்சி இருக்கும் யுகத்தில் இந்த செயற்பாடு நீதிமன்ற அவமதிப்பு என்றே கருதப்படும். எனினும் இப்போது இருப்பது, முச்சக்கர வண்டி ஓட்டுநர்கள் கூட நீதிமன்றத்தின் மீது குற்றம் சுமத்தும் யுகமாகும். ராஜபக்ச கோஷ படையணியில் முன்னணியில் இருப்பது இந்த சிறு தரப்பினரான முச்சக்கர வண்டி சாரதிகளும் ஆரப்பாட்டங்களுக்கு அழைத்து செல்லக் கூடியவர்களும் மாத்திரமே என்பதைக் காண முடிகிறது.

பிரமத நீதியரசருக்கு எதிராக புனையப்பட்டுள்ள நம்பிக்கையில்லா குற்றச்சாட்டுக்கள் தற்போது நாட்டை பிளவுபடுத்தி உள்ளதுடன் கடந்த வாரம் முழுவதும் இந்த இரண்டு முகாம்களும் மிகவும் தெளிவாக தமது நிலைப்பாடுகளை எடுத்து வருகின்றன. நம்பிக்கையில்லா குற்றச்சாட்டு அநீதியானது எனவும் அதனை விட குற்றச்சாட்டுகளை விசாரிக்கும் செயற்பாடுகள் எவ்வித நியாயதர்மத்திற்கும் ஏற்புடையதாக இல்லை என ஒரு தரப்பு கூறுகிறது. இந்த தரப்பில் மல்வத்து அஸ்கிரிய உள்ளிட்ட பௌத்த பிக்குகள், நீதிபதிகள் சட்டத்தரணிகள் தொழிற்சங்கங்கள் கலைஞர்கள் தேசிய மற்றும் சர்வதேச மனித உரிமை அமைப்புகள் உள்ளன.

அடுத்த தரப்பு அதாவது, ராஜபக்ச தரப்பில் முச்சக்கர வண்டி சாரதிகள், நடமாடும் ஆர்ப்பாட்ட கோஷக்காரர்கள், அரச சார்பான ஊடகங்கள் என்பன உள்ளன. வாடகை முச்சக்கர வண்டி சாரதிகளின் அறிவிப்பின் பிரகாரம் பிரதம நீதியரசரை சுற்றி அரச சார்பற்ற நிறுவனங்களின் காகங்கள் இருக் கின்றன.




அவர் வெட்கமற்ற மோசடியாளர் நாடமாடும் ஆர்ப்பாட்ட கோஷக்காரர்களின்படி அவர் நாட்டை பிரிக்க உந்து சக்தியை கொடுப்பவர். அந்த இடத்தில் தான் அவர் நாட்டுக்கு துரோகி. வீரவன்சவின் இணையத் தளத்திற்கு அமைய பிரதம நீதியரசரின் பின் னால் இந்திய புலனாய்வு பிரிவு செயற்படு கிறது.

எனினும் அஸ்கிரி மல்வத்து நாயக்க தேரர்கள் உள்ளிட்ட நீதிபதிகள் சட்டத்தர ணிகள் கலைஞர்கள் போன்ற அனைவரும் நாட்டைப் பிரிக்கும் நீதிமன்றத்தை பாதுகாக்கும் செயற்பாடுகளை முன்னெடுக்கின்றனர். இதன் மூலம் நாட்டை பிரிக்கும் மறைமுக உதவியாளர்களாக மாறியுள்ளனர். இதை நம்ப முடியாது- எனினும் ஆட்சியாளர்களி னால் ஏற்பாடு செய்யப்படும் நடமாடும் ஆர்ப்பாட்ட கோஷக்காரர்கள் இதனை நம்புமாறு எமக்கு கூறுகின்றனர்.

இது போருக்குப் பின்னர் இலங்கை அரசாங்கத்திற்கு சேலைன் ஏற்றும் கோஷமாகும். அரசியல் ரீதியாக செல்ல வழியில்லையெனத் தெரியும் அனைத்து சந்தர்ப்பங்களிலும் ஆட்சியாளர்களுக்கு உதவிக்கு வருவது தோற்கடிக்கப்பட்ட விடுதலைப் புலிகள் அமைப்பும் நாட்டைப் பிரிக்கும் ஆபத்து ஆகியனவே. 100 நாட்கள் வரை நடைபெற்ற பல்கலைக்கழக விரிவுரையாளர்களின் போராட்டத்துக்கு மக்கள் ஆதரவு கிடைப்பதை தடுக்க இந்த சேலைன் கோஷமே கண்டெடுக்கப்பட்டது. அப்படியானால் விரிவுரையாளர்களின் போராட்டம் நாட்டைப் பிளவுபடுத்தும் பயங்கரவாதத்தின் ஒரு பகுதியாகும். ஆட்சியாளர்களுக்கு எதிராக கையை உயர்த்தும் நபருக்கோ நிறுவனத்திற்கோ எதிராக வீசி எறியப்படும் ஆயுதம் இதுதான்.

போர் நடைபெற்ற காலத்தில் ஊடக சுதந்திரத்திற்காக போராடிய எம்மை போன்றவர்களை கண்டிப்பதற்காக இந்த *சேலைன்* கோஷமே பயன்படுத்தப்பட்டது. அப்போது தமக்கு எதிராக இப்படியான குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்படமாட்டாது என நினைத்த பலர் இன்று இந்த முத்திரைக்குள் சிக்கியுள்ளனர். இவ்வாறு முத்திரை குத்தலுக்குள்ளாகும் அனை வரும் அனுபவம் கொள்ளும் மற்றுமொரு உண்மை உள்ளது. அதுதான், தாம் நிரபராதி என்பதை உறுதிப்படுத்தும் வாய்ப்பு தற் போது ஊடகங்களில் இல்லை என்பது. விடுதலைப் புலிகளுடன் போரிட்ட அரசாங்கம் போருக்கு மேலதிகமாக இலங்கை ஊடகங்களுக்கு எதிராக மேற்கொண்ட போரின் உண்மையான நோக்கம் முழு சமூகத்தையும் தனது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வருவதுதான் என்பது கடந்து செல்லும் ஒவ்வொரு நாட்களும் உறுதிப்படுத்தி வருகின்றன. சுதந்திரம் மற்றும் விரிவான ஊடக கலாச்சாரம் இருக்கு மாயின் அது தற்போதைய ஒருதலைப்பட்ச மான ஆட்சியாளர்கள் தமது அடக்குமுறை நிர்வாகத்தை முன்னெடுத்துச் செல்வதில் பெரும் தடையாக மாற வாய்ப்பிருந்திருக்கும்.

தெற்கில் எழும் அனைத்து நியாயமான எதிர்ப்புகளையும், தேசத்துரோக முத்திரை குத்தி, அவற்றை தனிமைப்படுத்துவதை தனது தந்திரோபாயமாக மாற்றிக் கொண்டுள்ள மகிந்த ராஜபக்ச ஆட்சியாளர்கள் தற்போது வடக்கில் இந்த குற்றச்சாட்டை பயன்படுத்தி தமிழர்கள் உயிரிழந்த தமது உறவுகளை நினைவுகூற இருக்கும் சந்தர்ப் பத்தைக்கூட இல்லாமல் செய்து வருகின்றனர். போர் முடிந்து மூன்று வருடங்களுக்கு மேல் கடந்துள்ள போதிலும் தமிழர்கள் போரில் உயிரிழந்த தமது பிள்ளைகள் பெற் றோர் உறவினர்கள் அயல்வீட்டினர் ஆகி யோரை நினைவுகூற தடை விதிக்கப் பட்டுள்ளது.

அரசாங்கம் நியமித்த கற்றுக் கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு, போரில் உயிரிழந்த மக்களை நினைவுகூற விசேடதினம் ஒன்று அவசியம் என பரிந்துரை செய்த போதிலும் அரசாங்கம் அதனை ஏற்றுக் கொள்ளவில்லை. இதற்கு பதிலாக அரசாங்கம் தமிழ் மக்களின் பிள்ளைகள் துயிலும்- விடுதலைப்புலிகள் மாவீரர்கள் துயிலும் இல்லங்களை உடைத்து தரை மட்டமாக்கி அதில் இராணுவ முகாம்களை நிர்மாணித்து இந்த நினைவு தினத் தினங்களுக்காக அவர்கள் தெரிவு செய்துள்ள மே 19 ஆம் திகதியாகட்டும் நவம்பர் 27 ஆம் திகதியாகட்டும் இலங்கை அரச படையினர் குறைந்தது ஆலயங்களில் கூட நினைவு தினத்தை அனுஷ்டிக்க இது வரை இடமளிக்கவில்லை. தெற்கில் இப்படியான வன்முறை அரசியல் அமைப்பை வழிநடத்திய ஜே.வி.பி.யின் தலைவர் ரோஹண விஜேவீர அரச படையினரால் கொலை செய்யப்பட்ட தினமான நவம்பர் 13 ஆம் திகதி கார்த்திகை வீரர்கள் தினம் என தெற்கில் மிகப்பெரியளவில் அனுஷ்டிக்கப்படும் நினைவு கூறல் அனுஷ்டிக்கப்படும் சந்தர்ப்பத்திலேயே வடக்கில் இப்படியான தடையேற்படுத்தப்படுகிறது.

**இனம் என்ற வகையில் அடக்கு முறைகளுக்கு உள்ளாகும் எந்த சமூகமும் தமது இதயத்தில் விழும் அனைத்து அடிகளையும் மனத்திற்குள் ஆழமாக பதித்து வைத்துக் கொள்ளும். என்றோ ஒரு நாள் அது வெடித்து வெளிக்கிளம்பும் என்பது உலக வரலாறாகும்.** இனப் போரில் ஒரு தரப்பு தோற்றுப்போனபோதிலும் பிரச்சினை என்பது முடிவடையாது. இதன் காரணமாகவே இதற்கு தீர்வு, நல்லிணக்கம் என்பதை உலகம் ஏற்றுக் கொண்டுள்ளது. மகிந்த ராஜபக்ச அரசாங்கம் போரின் இறுதியில் இருந்து இது வரை தமிழ் மக்களை போர் பலத்தில் அச்சுறுத்தி வருகின்றதே தவிர சமூகங்களுக்கு இடையில் சமத்துவத்தை ஏற்படுத்த நடவடிக்கை எடுக்கவில்லை என்பது கவலைக்குரிய விடயமாகும்.

சில வெளிநாட்டு ஊடகங்கள் யாழ்ப்பாணத்தின் கிளர்ச்சி என பெயரிட்டிருந்த யாழ்ப்பாண பல்கலைக்கழக மாணவர்களினால் கடந்த நவம்பர் 27 ஆம் திகதி இராணுவ கட்டளைகளை மீறி பெரிய விளக்கொன்றை ஏற்றி அனுஷ்டித்த மாவீரர் தினத்தை நாம் இந்த சூழலுக்குள்ளேதான் புரிந்து கொள்ள வேண்டும். இது வடக்கில் நடக்கும் இராணுவ ஆட்சிக்கு விடுவிக்கப்பட்ட சிவில் சவாலாகும் என்பது தெளிவானது. 2009 ஆம் ஆண்டு போருக்குப்பின்னர் யாழ்ப்பாணத்தில் ஏற்பட்ட மிகப்பெரிய மக்கள் செயற்பாடு இது வென ஆய்வாளர்கள் தெரிவிக்கின்றனர். இவ்வாறு எதிர்ப்பு தெரிவிக்க வேண்டும் என்ற மனக் கிளம்பல் யாழ்ப்பாண மக்களின் மனங்களில் இருக்கின்றதா என்பதை புரிந்து கொள்வது கடினமானது.

**இதற்கு பதிலளிக்கும் வகையில் இராணுவத்தினரை யாழ்ப்பாண பல்கலைக் கழகத்திற்குள் அனுப்பி போரில் செயற்படுவது போன்று அரசாங்கம் செயற்பட்டது. பெண்கள் விடுதிகளை சோதனையிட ஆண் படையினர் அனுப்பி வைக்கப்பட்டிருந்தனர்.** பல்கலைக்கழக மாணவர்களின் அமைதியான நினைவுக் கூறல் மற்றும் பேரணியின் மீது மாணவர்களுக்கு காயங்களை ஏற்படுத்தி, காவற்றுறை மற்றும் இராணுவத்தினரின் அடக்குமுறை தாக்குதல் நடத்தப்பட்டது. இதன்போது பல்கலைக்கழக மாணவ தலைவர்கள் கைது செய்யப்பட்டு பாதுகாப்பு அமைச் சின் மூன்றுமாத தடுப்பு காவல் உத்தரவின் பேரில் தடுத்து வைக் கப்பட்டுள்ளனர். இவ்வாறான அடக்குமுறை செயற்பாடுகள் மூலம் அடக்கப்பட்ட சமூகத்தின் மனங்களில் ஏற்பட்டுள்ள காயங்களை குணப்படுத்துவது இலகுவானதல்ல.

பாரிய மனித உயிரிழப்புகள் மூலம் பெற்றுக் கொள்ளப்பட்ட போரின் முடிவை தமிழ் மக்கள் மனதை வென்றெடுப்பது நோக்கி விரிவுபடுத்த மகிந்த ராஜபக்ச அரசாங்கம் தவறியுள்ளது. தமிழ் அரசியல் மாத்திர மின்றி சிவில் சமூகமும் கொழும்பு அரசாங்கத்தின் மீது நம்பிக்கையையிழக்கும் திசைநோக்கி தள்ளப்பட்டு வருகின்றன. தாம் பானையில் இருந்து அடுப்பில் விழுந்துவிட்டதாக தமிழ் மக்கள் எண்ணுகின்றனர். வீதிகளையும் கட்டடங்களையும் நிர்மாணிப்பதன் மூலம் பாதிப்புக்குள்ளாக்கப்பட்டும் இனத்தை வெற்றி கொள்ள முடியாது. தற்போது சுயநிர்ணய உரிமைகளுக்காக போராடி வரும் வட அயர்லாந்து, ஸ்கொட்லாந்து கெட்டலோனியா மற்றும் கியூபெக் ஆகியன அபிவிருத்தியடைந்த தேசங்களாகும். எனினும் இந்த அபிவிருத்தியினால் அந்த மக்களின் தேசிய அபிலாசைகள் இல்லாமல் போகவில்லை என்பதை நாம் நினைவில் வைத்துக் கொள்ள வேண்டும்.

**சிங்களவர்களுக்கு தமது இனம் எவ்வளவு பெறுமதியானதோ தமிழர்களுக்கும் அவ்வாறே பெறுமதியானது. பிரிவினைவாதம் அல்லது விடுதலைப் புலி முத்திரையைக் குத்தி அந்த தேசியத்தை இல்லாமல் செய்துவிட முடியாது. கடந்த 27 ஆம் திகதி ஏற்பட்ட யாழ்ப்பாண கிளர்ச்சி மீண்டும் உறுதிப்படுத்தும் உண்மை அதுவே.**

தெறகில் எழும் எதிர்ப்புகளுக்கு போர் வெற்றி மற்றும் பிரிவினைவாத முத்திரையை குத்துவது ஓரளவுக்கு எடுபடக் கூடும். ஆனால் வடக்கில் அந்த முத்திரை அந்தளவு எடுபடாது. அது வலுச்சேர்க்கும் ஊசி மருந்தாகக் கூடும் என்பதையும் புரிந்து கொள்ள வேண்டும். எது எவ்வாறாயினும் அனைத்துக்கும் கால நிர்ணயம் உள்ளது. போர் வெற்றி போர்வையில்- மனித மற்றும் ஜனநாயக உரிமைகளை முடக்கும்நாள் முடிவுக்கு வரும் என்பதை மகிந்தராஜபக்ச ஆட்சியாளர்கள் புரிந்து கொண்டால் இலங்கையின் எதிர்காலம் இதனை விட சிறந்ததாக அமைவது நிச்சயம்.

குளோபல் தமிழ் நெற்,சுனந்த தேசப்பிரிய

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# ஜனநாயக உரிமைகளை பெறுவதற்கு அணி திரளுங்கள்

## முன்னணி சோசலிச கட்சி அழைப்பு

(கொழும்பு)

ஜனநாயக உரிமைகளை வென்றெடுக்க அணி திரள வேண்டுமென முன்னணி சோசலிசக் கட்சி அறிவித்துள்ளது.

ஜனநாயக உரிமைகளை வென்றெடுக்க மக்கள் அணி திரள வேண்டியது அவசியமானது என முன்னணி சோசலிசக் கட்சி ஊடக அறிக்கை ஒன்றின் மூலம் மக்களிடம் கோரிக்கை விடுத்துள்ளது.

பிரதம நீதியரசர் மட்டுமன்றி முழுச் சமூகமுமே இன்று நெருக்கடிகளை எதிர்நோக்கி வருகின்றது. இந்த சர்வதிகாரப் போக்கிலான ஆட்சி முறைமையை மாற்றியமைக்க வேண்டியது அவசியமானது.

தமது கொள்கைகளுக்கு இணங்காதவர்களை அரசாங்கம் அடக்குமுறைக்கு உட்படுத்தி வருகின்றது. தொழிலாளர்கள், மாணவர்கள், விவசாயிகள், மீனவர்கள் என போராட்டங்களில் ஈடுபட்ட அனைத்து தரப்பினரையும் அரசாங்கம் கட்டுப்படுத்தியது.

ஊடகவியலாளர்களின் உரிமைகளும் கேள்விக்குள்ளாக்கப்பட்டுள்ளது. அரசாங்கம் மக்களின் ஜனநாயக உரிமைகளை முடக்குவதற்கு முயற்சி செய்து வருகின்றது. (அ-2)

# நாட்டின் பல பகுதிகளிலும் வானில் மர்மப்பொருள்

## விசேட விசாரணை என்கிறது பாதுகாப்பு அமைச்சு

(கொழும்பு)

நாட்டின் பல பகுதிகளிலும் வானில் மர்மப் பொருட்களைப் பார்வையிடுவதாக மக்கள் தெரிவித்துள்ளனர்.

அதிக வெளிச்சத்துடன் இவ்வாறான பொருட்களை காலை மற்றும் மாலை வேளைகளில் கண்டதாக பலர் தெரிவித்துள்ளனர்.

சிலாபம், பண்டாரவளை, பதுளை, அநுராதபுரம், நொச்சியாகம உள்ளிட்ட நாட்டின் பல பகுதிகளில் இவ்வாறான மர்மப் பொருட்கள் தெரிவதாக அவர்கள் கூறுகின்றனர்.

இதேவேளை, நாட்டின் பல பகுதிகளிலும் தென்படும் மர்மப் பொருட்கள் தொடர்பில் விசேட விசாரணைகள் நடத்தப்படவுள்ளதாக பாதுகாப்பு அமைச்சு அறிவித்துள்ளது.

சில மாதங்களாகவே இவ்வாறான மர்ம வான் பொருட்களை மக்கள் பார்வையிட்டுள்ளனர்.

நொச்சியாகம பிரதேசத்தில் மிகப் பிரகாசமான பொருளொன்று வானிலிருந்து மரமொன்றில் இறங்கியதனைப் பார்த்ததாக பாடசாலை மாணவியொருவர் தெரிவித்துள்ளார்.

மன்னாரில் நேற்று முன்தினம் வானில் மர்மப் பொருள் ஒன்று தென்பட்டதாக இராணுவ அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். அன்றைய தினம் அதிகாலை மன்னாரில் அதிக வெளிச்சத்துடன் கூடிய பொருளொன்று மெதுவாக தரைக்கு வந்திறங்கியதாகக் குறிப்பிட்டுள்ளனர்.

விமானமொன்று தீப்பற்றி எரிவதனைப் போன்று இந்த வெளிச்சம் காட்சியளித்ததாகவும் தெரிவித்தனர். (அ-2)

# மூன்றில் இரண்டு பெரும்பான்மையை அரசு பணம் கொடுத்தே வாங்கியது

## ரவி. எம்.பி.தெரிவிப்பு

(கொழும்பு)

அரசாங்கம் மூன்றில் இரண்டு பெரும்பான்மை பலத்தினை பணம் கொடுத்து பெற்றுக் கொண்டது என ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ரவி கருணாநாயக்க தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நடைபெற்ற நிகழ்வு ஒன்றில் கலந்து கொண்டு உரையாற்றிய போது அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

மக்கள் ஆணையின் மூலம் இந்த அரசாங்கத்திற்கு மூன்றில் இரண்டு பலம் கிடைக்கவில்லை. ஐக்கிய தேசியக் கட்சிக்கு மக்கள் அளித்த வாக்குகளைப் பயன்படுத்தி மூன்றில் இரண்டு பெரும்பான்மை பலம் உருவாக்கப்பட்டுள்ளது.

நாடாளுமன்றம் உயர்வானது என குறிப்பிடப்பட்ட போதிலும் மக்களின் அபிலாசைகள் பூர்த்தி செய்யப்படவில்லை. அரசாங்கத்தின் அச்சுறுத்தல்களுக்கு அஞ்சி சில நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஆளும் கட்சியில் இணைந்து கொண்டனர் என அவர் தெரிவித்துள்ளார். (அ-2)

# 13 ஆவது திருத்த ஆதரவாளர்களுக்கு எதிர்ப்பு தெரிவித்தார் அமைச்சர் பசில்

13 ஆவது திருத்தச்சட்டத்தை ஒழிக்காது அதனை வலுப்படுத்தக் கோரும் மகஜரில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி உறுப்பினர்களிடம் கையெழுத்து பெறும் நடவடிக்கைக்கு அமைச்சர் பசில் ராஜபக்ஷ எதிர்ப்பு தெரிவித்துள்ளார்.

ஆளும் கட்சியில் அங்கம் வகிக்கும் 13 ஆவது திருத்தச் சட்டத்தினை ஆதரிக்கும் குழுவினர் அதற்கான மகஜரொன்றினை ஜனாதிபதியிடம் கையளிப்பதற்கு நடவடிக்கை எடுத்துள்ளனர்.

இதற்கான கையெழுத்துப் பெறும் நடவடிக்கை கடந்த 8 ஆம் திகதி பாராளுமன்றத்தில் இடம்பெற்றது.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரசின் செயலாளர் ஹசன் அலி, முஸ்லிம் காங்கிரஸ் எம்.பி. அஸ்லம் ஆகியோர் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியைச் சேர்ந்த அமைச்சர்களிடம் கையெழுத்துப் பெறும் முயற்சியில் ஈடுபட்டிருந்தபோது அதனையறிந்த அமைச்சர் பசில் ராஜபக்ஷ 13 ஆவது திருத்தச் சட்டம் தொடர்பில் ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி தீர்மானம் எதனையும் எடுக்கவில்லை.

இந்நிலையில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியைச் சேர்ந்த உறுப்பினர்களிடம் கையெழுத்து பெறுவது முறையற்ற செயற்பாடாகும் என்று அமைச்சர் தெரிவித்துள்ளார். (அ-2)




★1282-வேல்சின் கடைசி பழங்குடி இளவரசர் கடைசி லெவெலின் கொல்லப்பட்டான்.

★1789-ஐக்கிய அமெரிக்காவின் மிகப் பழைமையான பொதுப் பல்கலைக் கழகம் வட கரொலைனா பல்கலைக்கழகம் (சாப்பல் ஹில்) அமைக்கப்பட்டது.

★1792- பிரெஞ்சுப் புரட்சி: பிரான்சின் 16 ஆம் லூயி மன்னன் நாட்டுத் துரோகக் குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டு விசாரணைக்குட்படுத்தப் பட்டான்.

★1816-இந்தியானா ஐக்கிய அமெரிக்காவின் 19 ஆவது மாநிலமானது.

★1907-நியூசிலாந்தின் நாடாளுமன்றக் கட்டடம் தீயில் எரிந்து சாம்பலானது.

★1917- பிரித்தானியப் படைகள் ஓட்டோமான் பேரரசிடம் இருந்து ஜெருசலேமை மீட்டன.

★1927-சீனாவின் குவாங்சூ நகரை கம்யூனிஸ்ட்டுக்கள் கைப்பற்றி அதனை குவாங்சூ சோவியத் என மாற்றியிருப்பதாக அறிவித்தனர்.

★1931-அவுஸ்திரேலியா, கனடா, அயர்லாந்து, நியூசிலாந்து, தென்னாபிரிக்கா ஆகியவற்றுக்கு தமது முழுமையான அரசியலமைப்புக்களைப் பேணும் சட்டமூலம் வெஸ்ட்மினிஸ்டர் சட்டம் 1931 பிரித்தானிய நாடாளுமன்றத்தில் கொண்டு வரப்பட்டது.

★1936- ஐக்கிய இராச்சியத்தின் மன்னன் எட்டாம் எட்வேர்ட் முடி துறந்தான்.

★1937- எஸ்தோனியாத் தலைவர் ஜான் ஆன்வெல்ட் ஸ்டாலின் ஆட்சியாளர்களால் கைது செய்யப்பட்டுக் கொலை செய்யப்பட்டார்.

★1941-இரண்டாம் உலகப் போர்: ஜேர்மனியும் இத்தாலியும் ஐக்கிய அமெரிக்கா மீது போரை அறிவித்தன.

★1946- ஐக்கிய நாடுகளின் சிறுவர் நிதியம் (யுனிசெவ்) நிறுவனம் அமைக்கப்பட்டது.

★1958- அப்பர் வோல்ட்டா பிரான்சிடம் இருந்து விடுதலையை அறிவித்தது.

★1964-நியூயோர்க் நகரில் ஐ.நா. பொதுச்சபைக்கூட்டத்தில் சேகுவேரா உரையாற்றினார். இவர் உரையாற்றிக் கொண்டிருந்தபோது ஐ.நா. கட்டடத்தின் மீது குண்டுத் தாக்குதல் இடம்பெற்றது.

★1972-அப்பல்லோ 17 சந்திரனில் இறங்கியது.

★1981- எல் சல்வடோரில் இராணுவத்தினர் நாட்டின் உள்நாட்டுப் போரின் ஒரு கட்டமாக கிட்டத்தட்ட 900 பொதுமக்களை கொன்றனர்.

★1993-மலேசியாவின் தலைநகர் கோலாலம்பூரில் உயர்மாடிக் கட்டடம் ஒன்று வீழ்ந்ததில் 48 பேர் உயிரிழந்தனர்.

★1994- ரஷ்யாவின் ஜனாதிபதி போரிஸ் யெல்ட்சின் தமது படைகளை செச்சினியாவுக்கு அனுப்பினார்.

★1998- தாய்லாந்தைச் சேர்ந்த விமானம் வீழ்ந்ததில் 101 பேர் உயிரிழந்தனர்.

### பிறப்புக்கள்

★1843- ராபர்ட் கோக், ஜேர்மனிய அறிவியலாளரும் மருத்துவரும் (இ.1910)

★1882-மாக்ஸ் போர்ன், ஜேர்மனிய இயற்பியலாளர் மற்றும் நோபல் விருதாளர் (இ.1970)

★1882-சுப்பிரமணிய பாரதி, கவிஞர் (இ.1921)

★1918-அலெக்சாண்டர் சோல்செனிட்சின், நோபல் பரிசு பெற்ற ரஷ்ய எழுத்தாளர் (இ.2008)

★1931-ஓஷோ, இந்திய ஆன்மீகத் தலைவர் (இ.1990)

★1935- பிரணாப் முகர்ஜி, இந்தியாவின் ஜனாதிபதி

★1954- பிரசந்தா, நேபாளப் பிரதமர்

★1958- ரகுவரன், நடிகர் (இ.2008)

★1969- விஸ்வநாதன் ஆனந்த், இந்திய சதுரங்க ஆட்டக்காரர்

★1980-ஆர்யா, தமிழ்த் திரைப்பட நடிகர்

### இறப்புக்கள்

★1937- ஜான் ஆன்வெல்ட், எஸ்தோனியாவின் தலைவர் (பி.1884)

★2004- எம்.எஸ்.சுப்புலட்சுமி, கர்நாடக இசைக் கலைஞர் (பி.1916)

### பிரணாப் முகர்ஜி



பிரணாப் குமார் முகர்ஜி (சுருக்கமாக பிரணாப் முகர்ஜி) தற்போதைய இந்திய ஜனாதிபதி ஆவார்.

மேற்கு வங்காளத்தைச் சேர்ந்த மூத்த காங்கிரசு அரசியல்வாதியான பிரணாப் ஜனாதிபதியாக தெரிவாவதற்கு முன்னர் நிதி அமைச்சராக பதவி வகித்தார். முன்னதாக கொல்கத்தா பல்கலைக்கழகத்திலிருந்து சட்டப் பட்டத்தை பெற்றுள்ளார்.

1969 ஆம் ஆண்டு இந்திரா காந்தியால் இந்திய மாநிலங்களவை உறுப்பினராக தேர்ந்தெடுக்கப்பட்ட இவர் 1975, 1981, 1993, 1999 ஆகிய ஆண்டுகளிலும் மாநிலங்களவைக்கு தேர்ந்தெடுக்கப்பட்டார்.

இந்திரா காந்தி அமைச்சரவையில் 1982 தொடக்கம் 1984 ஆம் ஆண்டு வரை நிதியமைச்சராக பணியாற்றினார். இந்திரா காந்தியின் மறைவுக்குப்பின் 1986 தொடக்கம் 1989 வரை காங்கிரஸ் கட்சியிலிருந்து விலகி ராஜ்டிரிய சமாஜ்வாடி காங்கிரஸ் கட்சியை தொடங்கி நடத்தினார். 2004-06 இல் பாதுகாப்புத் துறை அமைச்சராகவும் 1995-96, 2006-09 ஆகிய ஆண்டுகளில் வெளியுறவுத்துறை அமைச்சராகவும் இருந்தார்.

2012 ஆம் ஆண்டு ஜுலை மாதம் நடந்த இந்தியக் குடியரசுத் தலைவர் தேர்தலில் பதியப்பட்ட 10 29 750 வாக்குகளில் 69.3% வாக்குகள் பெற்று வெற்றி பெற்றார். இவ்வாண்டு ஜுலை 25 ஆம் திகதி அன்று இந்தியக் குடியரசின் பதினான்காவது குடியரசுத் தலைவராக (பதின்மூன்றாவது நபராக) பொறுப்பேற்றார்.

#### தனிவாழ்வு

இவர் மேற்கு வங்காளம் மாநிலம் பிர்பும் மாவட்டத்தில் உள்ள மிரதி எனும் கிராமத்தில் பிறந்தார். தந்தையார் பெயர் கமதா கின்கர் முகர்ஜி, தாயார் பெயர் இராஜலட்சுமி. இவரின் தந்தை 1952-64 வரை மேற்கு வங்காளம் மாநில சட்ட மேலவை உறுப்பினராக இருந்தார். இவர் 1957 ஆம் ஆண்டு ஜுலை 13 ஆம் திகதி சுவ்ரா என்பவரை மணந்தார். இவர்களுக்கு அபிஜித், இந்திரஜித் என்ற மகன்களும் சர்மிஷ்தா என்ற மகளும் உள்ளனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# சமூக சிந்தனை கொண்ட வள்ளுவன் சமூக மேம்பாட்டுக்கழகம்

(நேற்றைய தொடர்ச்சி)....

இங்கு 160 மாணவர்கள் கல்வி கற்று பயன்பெறுகின்றார்கள். இம்மாலை நேர வகுப்புக்களுக்காக 33 ஆசிரியர்களை நியமித்து அவர்களுக்குரிய கொடுப்பனவுகளையும் இக்கழகம் வழங்கி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. க.பொ.த. உயர்தரத்தில் கற்கும் மாணவர்களுக்கு அவர்களின் குடும்ப வருமானத்தைக் கருத்தில் கொண்டு அவர்களுடைய கல்வித் தேவைகளைப் பூர்த்தி செய்து வருகின்றது.

அறமொன் றேதரு மெய்யின்ப
மென்றநல்லறிஞர் தம்மை யனுதினம்
போற்றுவேன்

என்றான் மகாகவி பாரதி. அவன்



வாக்கை உயர்வாகக் கொண்டு மனதில் நிலை நிறுத்திச் செயற்பட்டு வரும் இக் கழகத்தினர் கல்விக்காக மட்டும் தங்கள் சேவைகளைச் செய்யவில்லை. அதையும் தாண்டி குடும்பங்களின் வறுமை குறைக்கும் ஒடதமாயும்செயற்பட்டுவருகின்றமைஏற்றிப்போற்றுதற்குரியது. போரால் பாதிக்கப்பட்டு கணவனை இழந்து அன்றாட வாழ்க்கை யினை அவலத் தோடுகழிக்கும்குடும்பங்களு க்குச்சுய தொழில் உதவிகளை வழங்கி வருகின்றனர்.

வரணி இடைக்குறிச்சிப் பகுதியில் தெரிவு செய்யப்பட்ட ஒரு குடும்பத்திற்கும் ஊரெழு திலீபன் வீதியில் ஒரு குடும்பத்திற்கும் கரவெட்டியில் ஒரு குடும்பத்திற்கும் கற்கோவளம் பகுதியில் ஒரு குடும்பத்திற்கும் கோழி வளர்ப்பை மேற்கொள்வதற்காக 30,000 ரூபா வீதம் வழங்கியுள்ளனர். இவ் உதவி அக் குடும்பங்களின் வாழ்வாதாரத் தேவைக்குப் பேருதவியாக அமைந்திருக்கின்றது.

இவை எல்லாம் வெறும் வார்த்தைகள் அல்ல அன்றைய நிகழ்விலே நான் கண்ணாரக் கண்டவை. வறிய மாணவர்களின் கல்விச்செலவைமுழுமையாகஏற்றுக்கொண்ட அக்கழகத்தினர் இவ்வாறான பல்வேறு பிரச்சினைகளால் கல்வியிலே இடர்படும் மாணவர்களைத் தம்மோடு தொடர்பு கொள்ளுமாறும் அவர்களுக்குரிய உதவிகளைச் செய்வதாகவும் கூறினார். சில கொடுப்பனவுகளை அன்றைய நிகழ்வில் வைத்து வழங்கியதையும் காணக்கூடியதாக இருந்தது.

தற்போது இந்நிறுவனம் பதிவு செய்யப்பட்ட நிறுவனமாகவும் உள்ளது. கோப்பாய் பிரதேச செயலர் பிரிவில் இந்நிறுவனம் பதிவு செய்யப்பட்டுள்ளது. யாழ். மாவட்டம் முழுமை யும் தன்னுடைய சேவையை வியாபிக்கும் நோக்கில் பல இளைஞர், யுவதிகளை தன் னுள் இணைத்துக் கொண்டுள்ளது.

வள்ளுவன் மேம்பாட்டுக்கழக அங்கத்தவர்களில் பல கலைஞர்களும் இருப்பதை அன்றைய நிகழ்விலே நாம் அறிந்து கொண்டோம். இக்கழக உறுப்பினரும் ஆசிரியருமான இ.தனஞ்சயனின் புல்லாங்குழல் இசை அனைவரது செவிக்கும் விருந்தாய் அமைந்தது. இராமநாதன் அக்கடமி மாணவிகளான இக்கழக மாணவிகள் இரு வரது பாடலும் செவிக்குணவிட மறக்கவில்லை. முதியோர் மனமகிழ்வு நிகழ்விலே அவர்க ளின் பெருமை போற்றும் முதியோரைப் பேணுவோம் எனும் நாடகம் யா/கோண்டாவில் மத்திய கிராம முன்னேற்றச் சங்க மாலை நேர வகுப்பு மாணவர்களால் அரங்கேற்றப்பட்டது. சிறுவர்களாக இருந்தாலும் சிறப்பாக நாடகத்தை நடித்துப் பார்வையாளரின் பாராட்டை பெற்றுக் கொண்டனர். இன்னொரு சிறப்பான நிகழ்வாக பேராசிரியர் சண்முகலிங்கத்தின் மகளின் ஆங்கில, தமிழ் கவிதைகள் இடம்பெற்றன. தரம் 3 இல் கற்கும் அந்த சிறுமியின் கவிதை மிகச் சிறப்பாக அமைந்திருந்தது.

தொடர்ந்து முதியோர்களை கௌரவித்து அவர்களுக்கு பரிசுப் பொதிகளாக ஆடைகள் வழங்கப்பட்டன.

இந்நிறுவனத்திற்கு வழிகாட்டல் வழங்கி வரும் கு.வாசுவின் இந்நிகழ்விற்கான வாழ்த்துச் செய்தி வெளிநாட்டிலிருந்து இணையம் மூலம் ஒலிபரப்பு செய்யப்பட்டது. இந்நிகழ்விற்கு வந்த அனைவரும் அதைக் கண்டும் கேட்டும் அந்த இளைஞனை வியந்து வாழ்த்தி நின்றனர்.

அன்றைய நிகழ்விலே பிரதம விருந்தினர் தமது உரையில் வள்ளுவன் மேம்பாட்டுக் கழகத்தினரின் செயற்பாடுகளையும் நிகழ்ச்சி ஒழுங்கமைப்பையும் பாராட்டிப் பேசினார். அம்மா அம்மா மந்திரம் என்ற அவரின் பாடலைப் பாடி சிறுவர்களையும் பாடவைத்தார். தாய், தந்தையரைப் பேணவேண்டிய தன் அவசியத்தையும் கூறி அழகாக தன் உரையை ஆற்றி முடித்தார்.

ஒவ்வொரு பெற்றோரும் தம் பிள்ளைகளுக்காக எத்தனையோ அர்ப்பணிப்புக்களைச் செய்கிறார்கள். நான் கற்க விழித்திருக்கும் போது தன் தூக்கத்தையும் தொலைத்தவள் தான் என் அன்னை. கற்றவர் சபையில் நான் நிற்க உற்ற துணை நின்றவர் தான் என் தந்தை. இவ் வாறே ஒவ்வொரு பெற்றோரும் தம் பிள்ளைகளுக்காக எத்தனையோ தியாகங்களைச் செய்கி றார்கள் என்று கௌரவ விருந்தினர் திருமதி உதயலதா நவதீசன் தன் உரையில் கூறிய



போது முதியோர் மட் டுமல்ல சிறுவர்களும் அக்கறை யோடு செவி மடு த்ததை கண்டு கொண் டேன். முதிய வரை பேணுத லின் முக்கியத் துவம் பற்றி கௌரவ விருந்தினர்களான திருமதி கடம்ப மலர் விமலராஜா, திருமதி ஜெயலக்சுமி உதய குமார் ஆகியோரும் சிறப்பான உரையை ஆற்றியிருந்தனர். சிறப்பு விருந்தினர் சுபா யினி மதியழகன் நிறுவனத்திற்கு வேண்டிய உதவிகளைச் செய்வதாகக் கூறினார்.

மதியவேளை அனைவருக்கும் சுவையான மதிய உணவு வழங்கப்பட்டது. அன்பான பரிமாறல், அருமையான உணவு எவற்றையும் மறக்க முடியவில்லை. ஈற்றில் சி.ஆனந்தராஜா முதியோருக்கான நல்லதொரு செய்தியை வழங்கினார். அது முதியவர்களுக்கான பகல் நேர விடுதி. அது முதியவர்கள் பகல் பொழுதில் மகிழ்ச்சியாக வந்தமர்ந்து கதைத்துக் கழித்து தம் பொழுதை மகிழ் பொழுதாய் கழிப்பதற்கான விடுதி. அத்தகைய விடுதி ஒன்றினையும் அமைக்கவிருப்பதைக் கூறி முதியோரை மகிழவைத்தார். வள்ளுவன் மேம்பாட்டு கழகச் செயலாளரின் நன்றியுரையுடன் அன்றைய நிகழ்ச்சிகள் இனிதே நிறைவுற்றன. மண்டபத்திலிருந்து மக்கள் நீங்கிச் சென்றனர். நானும் தான் ஆனாலும் அந் தக் கழகத்தின் சேவைகள் பற்றிய சிந்தனைகள் என்னை விட்டு நீங்கிச் செல்லவில்லை. அதன் வெளிப்பாடுதான் இந்தக் கட்டுரை.

மண்ணில் நல்லவண்ணம் வாழலாம்
வைகலும்
எண்ணில் நல்ல கதிக்கு
யாதுமோர் குறைவிலை

மண்ணில் நல்ல வண்ணம் வாழலாம் நல்ல வண்ணம் வாழத்தான் வேண்டும். வாழ்வதற்கு என்ன தேவை? மாடமாளிகைகளா? கூடகோபுரங்களா? வங்கியின் மூலதனமா? அல்ல! பின்னாட என்ன தேவை? இதயத்தில் நல்ல வண்ணம் தேவை! நான் வாழ்ந்தால் போதாது! நாம் வாழவேண்டும் என்ற எண்ணம் வேண்டும். பிறர் துன்பம் கண்ட போதும் வருந்தி உதவவேண்டும். அவர் தம் நலனைக் கருத் தில் கொள்ள வேண்டும். கொஞ்சம் என்றா லும் உதவ வேண்டும். பிறருக்கு உதவும் கொள்கை வேண்டும். இத்தன்மைகளை வள்ளுவன் மேம்பாட்டுக் கழகத்திடம் நான் கண்டு

**தில்லையம்பதியான்**

கொண்டேன்.

வள்ளுவனும் அறத்துப்பால் வாழ்
வைச் சொல்லும்
வடித்து வைத்த பொருட்பாலோ ஆட்சி
சொல்லும்
உள்ளூறும் மூன்றாம்பால் அன்பைச்
சொல்லும்
உலகமெல்லாம் முப்பாலில் அடங்கிச்
செல்லும்

இத்தகையவள்ளுவபெருந்தகையின்பெயரைத் தன்னகத்தே தாங்கி அறப்பணி ஆற்றும் வள்ளுவன் மேம்பாட்டுக் கழகத்தின் சேவைக்கு வாழ்த்துச் சொல்லி மகிழ்வதில் நான் உளமாரப் பெருமைப்படுகிறேன். இந்த சேவையை ஆற்றி வருகின்ற இந்தக் கழகத்தின் உறுப்பினர்களுக்கு நிச்சயமாக ஆண்ட வனின் அருளும் ஆசியும் கிடைக்குமென்பதில் அணுவளவும் ஐயமில்லை.

*வாழ்க வளர்க அவர்கள் பணி* (முற்றும்)

# மீள்குடியமர்த்தப்பட்ட போதும் உதவிகள் இதுவரை கிடைக்கவில்லை

## பாலமோட்டை, குஞ்சுக்குளம் மக்கள் அவலம்

(மல்லாவி)

வவுனியா மாவட்ட பாலமோட்டை, குஞ்சுக்குளம் ஆகிய கிராமங்களைச் சேர்ந்த மக்கள் தாம் மீள்குடியேற்றம் செய்யப்பட்டதில் இருந்து இதுவரை தமக்கான அடிப்படை வசதிகள் ஏற்படுத்தி தரப்படவில்லை என சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு மகஜர் ஒன்றை அனுப்பி வைத்துள்ளனர்.

அம்மகஜரில் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு, வன்னி மாவட்ட இறுதிப் போர் இடம் பெற்ற காலப்பகுதிகளில் மிக மோசமாக பாதிக்கப்பட்ட தங்கள் கிராமத்தின் வீடுகள், வீதி என்பன இதுவரை அமைத்து தரப்படவில்லை.

பாலமோட்டை, குஞ்சுக்குளத்தினுடைய பிரதான வீதியானது ஆமை வேகத்தில் அதனுடைய திருத்தப்பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறன. மின்கம்பங்கள் நடப்பட்டு மின் இணைப்பு வேலைகள் பூர்த்தியாகிய நிலையில் மின்சாரம் வழங்கப்படாமையால் இப்பகுதியிலுள்ள மூன்று பாடசாலைகளின் மாணவர்கள் உட்பட பொதுமக்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

அத்துடன் தொழில் வாய்ப்பை இழந்தவர்களுக்கு வாழ்வாதார உதவிகள் வழங்கப்படவில்லை. எனவே, உரிய தரப்பினர் இவ் விடயத்தில் கவனம் எடுத்து ஆவன செய்ய வேண்டுமென அம்மகஜரில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-3-[illegible])

# செல்வாநகர் வீதி புனரமைக்கப்படுமா?

## மக்கள் காத்திருப்பு

(சிவநகர்)

கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள செல்வாநகர் பிரதான வீதி கருங்கல் குறுணிகள் போடப்பட்ட நிலையில் பல மாதகாலமாக புனரமைக்கப்படாமல் இருப்பதால் இப்பகுதி மக்களும் மாணவர்களும் பல விபத்துக்களை சந்திக்க வேண்டியுள்ளது.

கடந்த உள்ளூராட்சி மன்ற தேர்தல் காலத்தில் பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷவின் ஆலோசனைக்கு இணங்க இவ் வீதியை புனரமைப்பதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

இதனால் இங்கு கற்கள் பரவப்பட்ட போதிலும் பல மாதங்கள் கடந்த நிலையில் எந்த விதமான செயற்பாடுகளும் மேற்கொள்ளப்படவில்லை. அண்மையில் இவ் வீதியில் சறுக்கி விழுந்த மாணவி ஒருவர் கால் முறிந்த நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இதேபோன்று பல விபத்துக்கள் அடிக்கடி ஏற்படுகின்றன. எனவே, உரிய தரப்பினர் இதனைக் கருத்திற் கொண்டு இவ்வீதியை விரைவில் புனரமைப்பு செய்து தருமாறு மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (அ-3-254)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யோகாவும் இல்லறப் பெண்களும்

யோகாசனம் என்பது காட்டில் உள்ள யோகிகளும் முனிவர்களும் மட்டுமே கடைப்பிடிக்க வேண்டிய ஒரு தவ ஒழுக்கம் என்று எண்ணியிருந்த காலம் மலை ஏறிவிட்டது என்றே கூற வேண்டும்.

ஆரோக்கியத்தை விரும்பும் யாவரும் பயின்று பயனடைய வேண்டிய அற்புதக் கலை யோகாசனம் என்று உணரும் நிலை இன்று வந்துவிட்டது. யோகாசனம் விஞ்ஞான ரீதியாகவும் ஆதாரபூர்வமாக நிரூபிக்கப்பட்ட ஒன்றாக இந்தியாவில் மட்டுமல்லாமல் உலகம் முழுவதும் பயிலப்பட்டு வருவது அதன் அடையாளம் ஆகும்.

மேலும் யோகாசனம் ஆனது ஆண், பெண், முதியவர், குழந்தை என்ற பாகுபாடின்றி யாவரும் பயிலக்கூடிய ஆரோக்கிய மார்க்கமாகும்.

இல்லறத்தில் இருக்கும் பெண்கள் யோகாசனம் பயிலலாமா என்ற கேள்வி எழுகிறது. யோகாசனத்தின் முழுப் பயனையும் பெற வேண்டிய நிலையில் இருப்பவர்கள் அவர்களே என்பதைப் புரிய வைக்க வேண்டும்.

உடல் ரீதியாகவும் மன ரீதியாகவும் பல்வேறு பாதிப்புக்களுக்கு ஆண்களைக் காட்டிலும் அவர்களே அதிகமாக ஆளாகிறார்கள். எனவே, அவர்கள்தான் யோக கலையை பயில்வதில் முன் நிற்க



வேண்டும்.

பெண்கள் உடற்கூற்றிலும் அமைப்பிலும் வித்தியாசமானவர்கள். பெண் என்பவள் பெண் தன்மை உடையவள்.

தங்களின் உடல் எடையை குறைப்பதற்கும் உடம்பை கட்டுக்கோப்புக்கு கொண்டு வருவதற்கும் இன்றைய பெண்கள் பல உடல் பயிற்சிகள் செய்து வருகின்றனர்.

இவ்வித உடற்பயிற்சி மணிக்கணக்காகச் செய்யும் போது உடலில் அசதியும் சோர்வும் ஏற்படுகிறது. உடலில் தேவைப்படாத தசைகள், கொழுப்புகள் கரைந்து போய் புறத்தோற்றம் மாறுதல் அடைவது உண்மைதான்.

பெண்களுக்கு பெண்மையும் நளினமும் மிளிரச் செய்வது பிராணாயாமம். யோகாசனம், தியானம் ஆகியுவை ஆகும். பிராணாயாமத்தினால் கண்கள் பளிங்கு போல் ஒளிபெற்று முகம் தேஜஸுடன் விளங்கும். இவ்வித மூச்சுப் பயிற்சியினால் ஆரோக்கியமும் புத்திக்கூர்மையும் மனதில் சாந்தமும் ஏற்படும்.

உடற்பயிற்சியை மணிக்கணக்கில் செய்ய வேண்டும். ஆனால், யோகாப் பயிற்சியினை பதினைந்து நிமிடங்கள் செய்தால் கூட பலன் கிட்டும். உடற்பயிற்சிக்கு வயது வரம்புண்டு. ஆனால், யோகாப் பயிற்சிக்கு வயது வரம்பு இல்லை.

உணவு மாற்றங்களாலும் உடலில் ஏற்படும் நோய்த்தாக்கம் காரணமாகவும் சிலருக்கு குறிப்பிட்ட வயது ஆகியும் பருவமடையாத நிலை ஏற்படலாம்.

காலங்கடந்தும் பூப்படையாத பெண்கள் முறையான உணவு மூலம், யோகப் பயிற்சி மூலம் பருவமடையலாம்.

மாதவிலக்கு காலத்தில் சுறுசுறுப்பற்ற தன்மை, அடி வயிற்று வலி, பசியாமை, வாந்தி எடுப்பு போன்ற குறைபாடுகளை யோகப் பயிற்சியினால் குணப்படுத்தலாம். மாதவிலக்கான 7 ஆம் நாளில் இருந்து யோகப்பயிற்சி செய்தால் இக் குறைபாடுகள் நீங்கும்.

சாதாரணமாக பருவமடைந்த பெண்கள் தினமும் குறிப்பிட்ட ஆசனங்கள் செய்து வந்தால் கருவை ஏற்கும் திறனும் நரம்புப் பலமும் உடலில் ஏற்படும் மாற்றங்களை ஏற்கக்கூடிய மனத்திறனும் கிட்டும்.

முறையான யோகாசனங்களை பெண்கள் பயின்று வந்தால் சுகப் பிரசவம் மட்டுமன்றி கருச்சிதைவு ஏற்படுவதை தடுக்க முடியும். குழந்தை வேண்டாம் என்பவர்கள் சில யோகாசனங்களை பயின்று இல்லற வாழ்க்கையை சிறப்புற அமைக்கலாம்.



கர்ப்பிணிப் பெண்கள் உரிய பயிற்சியாளர் முன்னிலையில் அவரது ஆலோசனைப்படிதான் யோகாசனங்களை செய்ய வேண்டும்.

சுவாசத்தை முறையாக உள் இழுத்துப் பழகினால் கர்ப்ப காலத்திலும் சரி பிரசவ காலத்திலும் உடல் உபாதையின்றி, வலியின்றி பிரசவமடைய முடியும். நாடி சுத்தியை நாளும் பழகி வந்தால் நாடிகளும் இரத்தமும் சுத்தம் அடைந்து பிரசவம் எளிதாகும். மேலும் மனம் ஒருமுகப்படுத்தப்பட்டு இரத்த நாளங்களில் பாதைகள் தூய்மைப்படுகின்றன.

பெண்களை அதிகமாக தாக்குகின்ற மார்பக புற்றுநோயை முறையான சுவாசப் பயிற்சி, எளிய ஆசனப்பயிற்சி மூலம் நிவர்த்தி செய்யலாம்.

சாதாரணமாக நோயின் தாக்கத்திற்கு ஏற்ப தாய்மார்கள் பாதிக்கப்படுகிறார்கள். இது அவர்களின் குடும்ப வாழ்க்கை நெறி, உணவு மற்றும் ஜீரணக் கோளாறுகள், குடும்பத்தில் ஏற்படும் மனக்கசப்பு, வெறுப்பு போன்றவற்றால் ஏற்படுகிறது. இதனை தக்க யோகாசன மார்க்கமாக நீக்க முடியும்.

பெண்களுக்கு ஏற்படும் இடுப்பு வலி, முதுகு வலி போன்றவை எலும்பிலுள்ள திரவம் குறைவதால் உண்டாகிறது. இதனை விபரிதகரணி, சர்வாங்காசனம், பவனமூக்தாசனம் போன்ற ஆசனங்கள் மூலம் குணப்படுத்தலாம்.

தனுராசனம் ஆனது பெண்களுக்கு நல்ல ஆரோக்கியத்தையும் வலிமையையும் சேர்க்க வல்லதாகும். மாதவிடாய், வயிற்றுக் கோளாறுகளை இந்த ஆசனம் நீக்கும்.


அட்ரீனல் நாளத்தை நன்கு இயக்கி உடல் முழுவதும் சுறுசுறுப்படைய செய்யும். கணையம், சிறுநீரகம், பெண்களுடைய சூலகம் ஆகியவற்றை சுறுசுறுப்படைய செய்து அதனால் பலம் பெற்று இளமை உண்டாகும்.

சிம்மாசனம் பெண்களுக்கு மிருதுவான முகத் தசைகள் பெறவும் இனிமை

**ஆசிரியர் ஜெகாதா**

யான குரலினைப் பெறவும் உதவுகிறது.

சிரசாசனம் பாலினச் சுரப்பிகளையும் தைரொயிட்டு சுரப்பியையும் வலுப்படுத்துகிறது. பச்சிமோத்தாசனம் பெண்களுக்கு மாதவிலக்கின்போது ஏற்படும் வலி நீக்க சிறந்த ஆசனம்.



ஹலாசனம் பெண்களுக்கு இளமையை தரும் ஆசனம் ஆகும். அழகாகத்தோற்ற மளிக்க பாதஹஸ்தாசனம் பெண்களுக்கு உதவுகிறது.

சுகப்பிரசவம் ஏற்பட பெண்களுக்கு புஜங்காசனம் பயன்படுகிறது.

நிகுஞ்ஜாசனம் பெண்களுக்கு குழந்தைப் பேற்றுக்கு முன்பும் பின்பும் பயன் தரவல்ல அருமையான ஆசனம் ஆகும். பிரசவத்திற்கு பின்னால் இந்த ஆசனத்தை செய்தால் கருப்பையானது குழந்தை பேற்றிக்கு முன்னிருந்த நிலைக்கு வந்து விடும்.

# சவேந்திர சில்வாவை ஏற்றுக்கொள்ள வேண்டாம்!

## தென்னாபிரிக்க அமைப்புக்கள் போர்க்கொடி

இலங்கையின் பிரதித் தூதுவராக மேஜர் ஜெனரல் சவேந்திர சில்வாவை ஏற்றுக் கொள்வதற்கு எதிர்ப்புத் தெரிவித்து தென்னாபிரிக்க ஜனாதிபதி ஜேக்கப் சூமாவுக்கு தென்னாபிரிக்க வழக்கு [illegible] கடிதம் ஒன்றை அனுப்பி வைத்துள்ளது.

ஐ.நா. நிபுணர் குழுவின் அறிக்கை மற்றும் சனல் 4 தொலைக்காட்சியில் வெளியான காணொளி ஆகியவற்றில் கூறப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்களை உள்ளடக்கிய ஒரு அறிக்கையை தென்னாபிரிக்க வழக்கு மையத்தின் பணிப்பாளர் நிகோல் பிரைட்ஸ் தென்னாபிரிக்க ஜனாதிபதிக்கு அனுப்பியுள்ளார்.

தற்போது ஐ.நாவுக்கான பிரதித் தூதுவராக உள்ள மேஜர் ஜெனரல் சவேந்திர சில்வா, தென்னாபிரிக்காவுக்கான பிரதித் தூதுவராக நியமிக்கப்படுவதற்கு எதிரான பரப்புரைகளில் மனித உரிமைகள் பவுண்டேசன், குவாடெங் தமிழ் கூட்டமைப்பு, தென்னாபிரிக்க தமிழ் கூட்டமைப்பு உள்ளிட்ட பல்வேறு அமைப்புக்களும் மேற்கொண்டு வருவதாக கொழும்பு ஆங்கில நாளிதழ் ஒன்று குறிப்பிட்டுள்ளது.

பிரித்தானியாவைத் தளமாகக் கொண்ட உலகத் தமிழர் பேரவைக்கும் இந்தப் பரப்புரைகள் மற்றும் தென்னாபிரிக்க வழக்கு மையத்தின் எதிர்ப்புக்கும் நெருக்கமான தொடர்புகள் உள்ளதாகவும் அந்த நாளிதழ் குற்றம் சாட்டியுள்ளது. இந்த விவகாரம் தொடர்பாகப் பேசுவதற்கு தென்னாபிரிக்க அதிபர் பணியகத்துடன் அல்லது அனைத்துலக உறவுகள் மற்றும் ஒத்துழைப்புக்கான திணைக்களத்துடன் கூட்டம் ஒன்றுக்கு ஏற்பாடு செய்யும் முயற்சியிலும் தென்னாபிரிக்க வழக்கு மையம் ஈடுபட்டுள்ளதாகவும் கூறப்படுகின்றது. (அ-2)

# தமிழர்களின் அபிலாசைகளுக்கு பொருத்தமான தீர்வே அவசியம்

## இந்தியாவின் வெளிவிவகார கொள்கை வகுப்பு நிபுணர் அரவிந்த் குப்தா

(கொழும்பு)

இலங்கையில் மாகாணங்களுக்கு கூடுதல் அதிகாரப்பகிர்வும் தமிழர்களின் அபிலாசைகளுக்கு இணக்கமான தீர்வும் பிராந்தியத்தின் நீண்டகால உறுதித் தன்மைக்கு மிகவும் முக்கியமானவை.

இவ்வாறு இந்தியாவின் வெளிவிவகாரக் கொள்கை வகுப்பு நிபுணர் கலாநிதி அரவிந்த் குப்தா தெரிவித்துள்ளார்.

கொழும்பில் லக்ஸ்மன் கதிர்காமர் நிலையத்தில் இந்திய வெளிவிவகாரக் கொள்கையின் போக்குகள் என்ற தலைப்பில் உரையாற்றிய அரவிந்த் குப்தாவிடம் 13 ஆவது திருத்தச் சட்டம் தொடர்பான இந்தியாவின் பார்வை குறித்துக் கேள்வி எழுப்பப்பட்ட போதே அவர் இவ்வாறு பதிலளித்துள்ளார்.

புதுடில்லியில் பாதுகாப்புக் கற்கைகள் மற்றும் ஆய்வு நிறுவனத்தின் பணிப்பாளர் நாயகமாக பணியாற்றும் அவர் தமிழர் பிரதேசங்களுக்கு கூடுதல் தன்னாட்சி உரிமை வழங்குவது குறித்த இந்தியாவின் கருத்துக் குறித்து எழுப்பப்பட்ட கேள்விக்கு பதிலளிக்கையில்,

குறிப்பிட்ட விடயங்களுக்குள் மூழ்காமல் ஒத்துழைப்புத் தொடர வேண்டும் என்றுதான் இப்போது சொல்கிறேன். இலங்கையில் மட்டுமன்றி இந்தியாவிலும் உள்ள பொதுமக்களின் உணர்வுகளை நாம் மனதில் கொள்ள வேண்டும்.

முடிவுகளை எடுக்கும்போது அனைத்துத் தரப்பினரையும் பங்காளர்களாக இணைக்க வேண்டும். வெளிநாட்டுக் கொள்கைகளை வகுக்கும்போது பொதுமக்கள் மற்றும் ஊடகங்களின் கருத்துக்களை நிராகரிக்க முடியாது என்றும் அவர் மேலும் கூறியுள்ளார். (அ-2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# UNIVERSITY OF JAFFNA
## BID NOTICE

*The Chairman, University Procurement Committee, University of Jaffna will receive sealed Bids from the qualified contractors for the following services.*

| Service Details | Refundable deposit (Rs.) | Non-refundable deposit (Rs.) | Minimum ICTAD Grade |
|---|---|---|---|
| Providing Facilities Management Services for Allied Health Science Unit, University of Jaffna. | 10,000.00 | 500.00 | C9 (any field) or any organizations currently providing complete Facilities Management Services for any similar building |
| Providing Facilities Management Services for various Locations, University of Jaffna. | 10,000.00 | 500.00 | C9 (any field) or any organizations currently providing complete Facilities Management Services for any similar building |

Bids form may be obtained from the Deputy Registrar / Capital Works & Planning Unit, University of Jaffna upon producing valid registration book or related document and receipt for the cash payment for the above fee at the Shroff's Counter, University of Jaffna until 21.12.2012.

Perfected Bids should be sealed and marked with the job and the name of the service on the top left hand corner of the envelop and sent by registered post to reach the Registrar, University of Jaffna P.Box 57, Thirunelvely, Jaffna or deposited in the tender box kept at Registrar's Office, University of Jaffna.

Bids will be accepted till 2.00 p.m on 04.01.2013 and open immediately thereafter.

Bidders or their accredited representatives could be present at the time of opening of Bids.

Bid forms may be inspected by the Bidders free of charge at the Capital Works & Planning Unit of this University during office hours, if necessary.

P.O Box 57,
Thirunelvely,
Jaffna.
07.12.2012

*Registrar*
*University of Jaffna*

C-1748

# மாணவர்களை விடுவிக்காவிட்டால் வடக்கு கிழக்கு எங்கும் போராட்டம்
## சுரேஸ் எம்.பி. எச்சரிக்கை

**யாழ்.பல்கலைக்கழக மாணவர்களை விடுதலை செய்யாதுவிடின் வடக்கு கிழக்கு எங்கும் போராட்டம் பரவும். இவ்வாறு தமிழ்தேசிய கூட்டமைப் பின் யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சுரேஷ் பிரேமச்சந்திரன் தெரிவித்துள்ளார்.**

யாழ்.பல்கலைக்கழக மாணவர்களின் விடுதலையை வலியுறுத்தி கிளிநொச்சி மாவட்ட செயலகத்துக்கு முன்பாக நேற்றையதினம் தமிழ்த்தேசியக்கூட்டமைப்பு, தமிழ்த்தேசிய மக்கள் முன்னணி உள்ளிட்ட தமிழ் அரசியல் கட்சிகள் ஒன்றிணைந்து மேற்கொண்ட கண்டன ஆர்ப்பாட்டத்தின் போது உரையாற்றிய போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது,

கடந்த 27ஆம் திகதிக்குப் பின்னர் புலனாய் வுத்துறையினரால் யாழ். பல்கலைக்கழக மாணவர்கள், இளைஞர்கள் என 45 பேருக்கு மேற்பட்டோர் கைது செய்யப்பட்டுள்ளனர். இவ்வாறு கைது செய்யப்பட்டோர் பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் காலவரையின்றி தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

எமது தொடர்ச்சியான போராட்டத்தின் விளைவாக 6 பல்கலைக்கழக மாணவர்கள் விடுதலை செய்யப்பட்டுள்ளதுடன் 7 மாணவர் கள் தொடர்ந்தும் தடுத்து வைக்கப்பட்டுள் ளனர்.

யுத்தம் முடி வடைந்த பின்னரும் அரசு ஜனநாயக விரோத செயற்பாடுகளை மேற் கொண்டு வருகின் றது. தனது இரா ணுவத்தை பயன் படுத்தி வன்முறை களை கட்டவிழ்த்து விட்டுள்ள அரசு தமி ழர் பகுதிகளில் பதற்ற மான சூழ்நிலைகளை உருவாக்கி வருகின் றது.

யுத்தம் நிறை வடைந்த பின்னர் இராணுவத்துக்கு இனி என்ன வேலை இருக்கிறது. இங்கிருந்து இராணுவத் தினர் வெளியேற்றப்பட்டு தமிழ்மக்களுக்கு அமைதியானதும் சுதந்திரமானதுமான ஜன நாயக சூழல் உருவாக்கப்படவேண்டும் . தமிழ்மக்களுடைய சுதந்திரமான நடவடிக்கை களுக்கு வழியேற்படுத்தவேண்டும்.

இதற்காகவே ஒன்றிணைந்து நாம் போராட் டங்களை நடத்தி வருகின்றோம். கைது செய்யப்பட்ட எமது மாணவர்களையும் இளை ஞர்களையும் விடுதலை செய்ய வலியுறுத்தி இன்று (நேற்று) கிளிநொச்சியில் போராட்டத்தை நடத்துகின்றோம்.

எதிர்வரும் 14ஆம் திகதி வெள்ளிக்கிழமை வவுனியாவிலும் அதனைத் தொடர்ந்து திரு கோணமலை யிலும் சம்பூர் பிரதேசத்திலும் போராட்டத்தை நடத்த தீர்மானித்துள்ளதுடன் வடக்கு கிழக்கு எங்கும் இப்போராட்டம் பரவும் என்று இதன்போது குறிப்பிட்டார். (அ-2)


# Spot Admission For UK



- Free Career Guidance
- Part Time Jop Assistance
- Lower Tuition Fee
- With or Without IELTS
- Minimum O/L
- Course Fee After Visa

Reserve Your Place now
IELTS Class Available

**Other Countries:**
Canada, France, USA, Cyprus, Poland, Newzealand, Russia & Switzerland

*Read International Now Open Soon*

Tel: 0772702628 - Mahesh, 0774848888 Aswin

*Note: Full Fee After Visa*

விசா கிடைத்த பின்னரே கட்டணம் அறவிடப்படும்.

(136)


# வலிகாமம் தெற்கு பிரதேச சபை, சுன்னாகம்.
## 2013 ஆம் ஆண்டுக்கான மீள் கேள்வி அறிவித்தல்

வலிகாமம் தெற்கு பிரதேச சபையின் எல்லைக்குட்பட்ட மரக்கறிச் சந்தைகள், மீன் சந்தை, கருவாட்டுக் கடைகள் மீன் வெட்டுமிடம் என்பவற்றை 01.01.2013 தொடக்கம் 31.12.2013 ஆம் திகதி வரை குத்தகைக்கு வழங்குவதற்கான மீள் கேள்விகள் கோரப்படுகின்றன.


| தொ. இல | விபரம் | மீளளிக்கப் படாத கேள்விப் பத்திரப் பணம் | கேள்வி வைப்பு | ஏற்றுக்கொள்ளக் கூடிய ஆகக் குறைந்த கேள்வித் தொகை (வற் வரி தவிர) | மாத வாடகை (வற் வரி தவிர) |
|---|---|---|---|---|---|
| | **சுன்னாகம் உப அலுவலகம்** | | | | |
| 1 | சுன்னாகம் மத்திய மரக்கறிச் சந்தை (வாகனத் தரிப்பிடம் உட்பட) | 2000.00 | 30000.00 | 5670000.00 | |
| 2 | சுன்னாகம் சந்தை மீன் வெட்டுமிடம் | 750.00 | 7500.00 | 89100.00 | |
| 3 | சுன்னாகம் மீன் சந்தை | 1000.00 | 10000.00 | 810000.00 | |
| 4 | சுன்னாகம் மாட்டிறைச்சிக் கடை இல 1 | 1000.00 | 10000.00 | 1513000.00 | 250.00 |
| 5 | சுன்னாகம் ஆட்டிறைச்சிக்கடை இல 2 | 1000.00 | 10000.00 | 226000.00 | 250.00 |
| 6 | சுன்னாகம் கருவாட்டுக்கடை இல 3 | 750.00 | 7500.00 | 36000.00 | 250.00 |
| 7 | கோழி உரித்தல் | 750.00 | 7500.00 | 81500.00 | 250.00 |
| | **உடுவில் உப அலுவலகம்** | | | | |
| 1 | மருதனார்மடம் சந்தை (வாகன தரிப்பிடம் உட்பட) | 2000.00 | 30000.00 | 11794500.00 | |
| 2 | இணுவில் சந்தை ஆட்டிறைச்சிக்கடை (கொத்தியாலடி கொல்களத்தில் ஆடுகள் வெட்டப்படுதல் வேண்டும்) | 500.00 | 5000.00 | 67500.00 | 250.00 |
| 3 | மல்வம் சந்தை | 500.00 | 5000.00 | 39600.00 | |
| 4 | மல்வம் மாட்டிறைச்சிக்கடை (கொத்தியாலடி கொல் களத்தில் மாடுகள் வெட்டப்படுதல் வேண்டும்) | 1000.00 | 10000.00 | 225000.00 | |
| 5 | மருதனார்மடம் சந்தை பொது மலசல கூடம் | 750.00 | 7500.00 | 40000.00 | |

1. கேள்விப்பத்திரம் வழங்கும் காலம் - 11.12.2012 - 19.12.2012 பி.ப 2.00 மணி வரை
2. கேள்விப்பத்திரம் ஏற்றுக் கொள்ளும் இறுதித்திகதி - 20.12.2012 நண்பகல் 12.00 மணி வரை
3. கேள்விப்பத்திரம் திறக்கப்படும் திகதி - 20.12.2012 பி.ப 2.00 மணிக்கு
4. கேள்வி சம்பந்தமான மேலதிக விபரங்களை 13.11.2012 ஆம் திகதிய உதயன், தினக்குரல், வலம்புரி பத்திரிகையிலும் எமது தலைமை அலுவலகத்தில் அலுவலக நேரத்திலும் பெற்றுக்கொள்ளலாம்.

**தி. பிரகாஷ்**
தவிசாளர்,
வலி.தெற்கு பிரதேச சபை,
சுன்னாகம்.

C-1747

# 45 ஆம் நாள் நினைவுநாள்



**மலர்வு:**
**17.03.1995**

**உதிர்வு:**
**29.10.2012**

## செல்வன் முஸ்தபா கலாகரன்

உயர்தர வகுப்பு உயிரியல் பிரிவு மாணவன்
(பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி)



கதிரவன் மறையும் வேளை
சடுதியில் உன்னுயிரை பறித்தனனோ...?
நாட்கள் பல சென்றாலும் - என்
அன்பு மகனே மாறாதையா உன் நினைவுகள்

29.10.2012 இல் அகாலமரணமடைந்த எங்கள் அன்புச் செல்வத்தின் பிரிவுச் செய்தி கேட்டு எமக்கு பல்வேறு வழிகளிலும் உதவி புரிந்த அனைவருக்கும் மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்வதுடன் நாளை புதன்கிழமை 12 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புள்ளங்களை அன்புடன் அழைக்கின்றோம்.

குடும்பத்தினர்

வட்டப்பாதி ஒழுங்கை, தம்பசிட்டி வீதி, பருத்தித்துறை. (சி-1744)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தருமத்தின் வாழ்வை சூது கௌவும்.
தருமம் மறுபடியும் வெல்லும்.

– பாரதியார்

வலம்புரி
T.P. 021 567 1530
Web: www.valampurii.com
e-mail: editor@valampurii.com

## தன்னைத் தோற்றபின் என்னைத் தோற்றாரா? என்னைத் தோற்றபின் தன்னைத் தோற்றாரா?

ச தனி ச ... சி செய்ய துரியோதனன் தருமரை சூதுக்கு அ...க்கிறான். எதுவும் செய்ய முடியாத தருமர் சூதாட இணங்குகிறார்.

சூது ஆடுவதுதானே சூதாட்டம். எனவே சூது வாது இல்லாத தருமரால் சூது ஆடி வெல்ல முடியவில்லை.

பொருட் செல்வம் எல்லாவற்றையும் சூதாட்டத்தில் இழந்த தருமர், தன் ...ம்பியரை சூதாட்டப் பந்தயத்தில் வைத்து தோ...ப் போகிறார்.

ஈற்றில் தன்னைப் பந்தயம் கட்டி தன்னையும் இழந்துபோகிறார். எதுவும் இல்லையென்ற நிலையில் திரௌபதியை ஞாபகப்படுத்துகின்றான் துரியோதனன்.

தன் மனைவி திரௌபதியை சூதாட்டத்தில் நிறுத்த அதுவும் தோல்வியாயிற்று.

சூதாட்டத்தில் வென்றுவிட்ட துரியோதனன் திரௌபதியை சபைக்கு அழைத்துவர உத்தர விடுகிறான்.

திரௌபதியை சபைக்கு அழைத்துவருகின்றார்கள்.

சூதாட்டத்தில் தோற்கடிக்கப்பட்ட பஞ்சபாண்டவர்கள் கரம் கட்டி வாய்பொத்தி நிற்கிறார்கள். பீஷ்மர், துரோணர் உள்ளிட்டோர் துரியோதனனுக்கு அறத்தை எடுத்துக்கூற முடியாதவர்களாய் துச்சாத...னுக்குப் பயந்து இருந்தனர்.

சபைக்கு வந்த திரௌபதி ஒரு சட்டச் சிக்கலை முன்வைக்கிறாள்.

ஐயா! சூதாட்டத்தில் தரும பிரான் தன்னைத் தோற்றபின் என்னைத் தோற்றாரா? அல்லது என்னைத் தோற்றபின் தன்னைத் தோற்றாரா? என்று அவை நடுங்கக் கேட்கிறாள்.

அவையோரே! கற்றறிந்த பெரியோரே! சூதில் தோற்றுப்போன தருமர், தான் தோற்றபின்பு என்னைச் சூதாட்டத்தில் முன்னிறுத்தும் அதிகாரத்தை கொண்டவரல்ல.

ஆகவே நான் தோற்கடிக்கப்பட்டவள் அல்ல என்று வாதிடுகின்றாள்.

நியாயமான – சட்டநுட்பம் உள்ள ஒரு விடயத்தை திரௌபதி சுட்டிக்காட்டுகின்ற இவ்விடம் மகாபாரதத்திற்கு பெருமை சேர்த்தது மட்டுமல்ல; அதுதான் குருசேத்திரத்தில் போரை நடத்தியதும்; கீதோ உபதேசத்தை இந்த உலகிற்குத் தந்ததுமான நிகழ்வாகும்.

எனவே இதனைச் சுட்டிக்காட்டுவதன் மூலம் இரண்டு விடங்களை எங்கள் நாட்டுக்கு எடுத்துரைக்க விரும்புகின்றோம்.

அதில் ஒன்று: பாராளுமன்ற விசாரணைக் குழு, பிரதம நீதியரசர் ஷிராணி பண்டாரநாயக்கவை குற்றவாளியாக இனங்கண்டால்,

அவர் ஏற்கெனவே வழங்கிய தீர்ப்புகள், பதவி ஏற்பின் பொருட்டு சத்தியப்பிரமாணம் செய்து வைத்த பதவிகள் அத்தனையும் இரத்தாக வேண்டுமல்லவா?

இரண்டாவது: இந்த நாட்டின் பிரதம நீதியரசராக இருக்கக்கூடிய ஒரு பெண் சபைக்கு அழைக்கப்பட்டிருக்கிறார்.

கௌரவர்கள் திரௌபதியை சபைக்கு அழைத்தபடியால்தான் குருசேத்திர விபரீதம் நடந்தது.

இங்கு ஷிராணி சபைக்கு அழைக்கப்பட்டு இருக்கிறார். என்ன நடக்குமோ! எது நடக்குமோ! பொறுத்திருந்து பார்ப்போம்.

# அறிக்கை சமர்ப்பிப்பில் அரசு உலக சாதனை

## ரணில் கிண்டல்

பிரதம நீதியரசர் ஷிராணி பண்டாரநாயக்கமீதான அரசியல் குற்றப்பிரேரணை தொடர்பாக பாராளுமன்ற தெரிவுக்குழு தனது அறிக்கையை விரைவாக சமர்ப்பித்துள்ளமை உலக சாதனை என எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

முதல் நாள் இரவு தயாரிக்கபட்ட அறிக்கை மறுநாள் காலையில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு மேலும் பேசிய ரணில், குறுகிய காலத்தில் பாரிய அறிக்கை ஒன்றை சமர்ப்பித்ததன் மூலமாக உலக சாதனை ஒன்று நிறைவேற்றப்பட்டுள்ளது.

பிரதம நீதியரசர் மீதான குற்றப் பிரேரணை குறித்த விடயத்தில் இலங்கை பொதுநலவாய நாடுகளின் விதிமுறைகளுக்கு ஏற்ப நடந்து கொள்ளவில்லை.

இதன்காரணமாக பொதுநலவாய அங்கத்துவத்தை இழப்பதற்கான சாத்தியங்கள் ...ளன.

பொதுநலவாய நாடுகளின் விதிமுறைகளை இலங்கை மதித்து நடக்க வேண்டும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (எ-11)

# சபை அமர்வுகள் பிற்போடப்பட்டன

(நல்லூர்)

கோப்பாய் பிரதேச மத்தியஸ்த சபையின் அமர்வுகள் கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரியில் க.பொ.த சாதாரண தரப் பரீட்சைகள் ஆரம்பமாக இருப்பதால் எதிர்வரும் 16ஆம் திகதி நடைபெற மாட்டாது என சபைத் தவிசாளர் இ.மயில்வாகனம் தெரிவித்துள்ளார்.

அன்றைய பிணக்குகள் யாவும் எதிர்வரும் 23ஆம்திகதி ஞாயிற்றுக்கிழமை கலந்துரையாடலுக்கு எடுத்துக் கொள்ளப்படும் என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (அ-3-134)

# துமிந்தவை கைது செய்யாவிட்டால் கொலன்னாவ போர்க்களமாகும்

## ஹிருணிகா எச்சரிக்கை

ஜனாதிபதியின் ஆலோசகரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான பாரத லக்ஸ்மன் பிரேமச்சந்திர கொலை வழக்கின் சந்தேக நபரான நாடாளுமன்ற உறுப்பினர் துமிந்த சில்வா கைது செய்யப்படாவிடின், மீண்டுமொரு போர் இடம்பெறும் என ஹிருணிகா தெரிவித்துள்ளார்.

துப்பாக்கி சூட்டில் படுகாயமடைந்த நாடாளுமன்ற உறுப்பினர் துமிந்த சில்வா தற்போது சிங்கப்பூரில் உள்ள வைத்தியசாலை ஒன்றில் சிகிச்சை பெற்று வருகின்றார்.

இந்நிலையில், துமிந்த சில்வா நாடு திரும்பும் போது அவரை விமான நிலையில் வைத்து கைதுசெய்ய வேண்டும்.

அவ்வாறு கைது செய்யப்படாவிடின் கொலன்னாவைப் பகுதி போர்க்களமாக மாறும் எனவும் அவர் எச்சரிக்கை விடுத்துள்ளார். (அ-2)

# குலுக்கல் முறையில் வெற்றியாளர் தெரிவு

(சாவகச்சேரி)

சாவகச்சேரி சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையினால் எயிட்ஸ் விழிப்புணர்வு வினாவிடைப் போட்டி சர்வதேச எயிட்ஸ் தினத்தையொட்டி திறந்த போட்டியாக நடத்தப்பட்டது.

அதில் சரியான விடையை எழுதியவர்களில் குலுக்கல் மூலம் வெற்றியாளர்களைத் தீர்மானிக்கும் நிகழ்வு நேற்றைய தினம் பி.ப. 4 மணிக்கு சுகாதார பரிசோதகர்கள், குடும்பநல சேவை உத்தியோகத்தர்கள், ஊடகவியலாளர்கள் முன்னிலையில் நடத்தப்பட்டது. இதில் முதலாம் பரிசு தரணிகா இராசநாயகம் (கோப்பாய் மத்தி), 2-ம் பரிசு யோகேந்திரம் சுதர்சினி (துவசிகுளம் கொடிகாமம்) 3-ம் பரிசு கந்தசாமி கீதாஞ்சலி (வீரசிங்கம் வீதி புத்தூர் சந்தி) பெற்றுள்ளனர்.

இவர்களுக்கான பரிசில்கள் வழங்கும் நிகழ்வு நாளை புதன்கிழமை காலை 10 மணிக்கு சாவகச்சேரி சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையின் மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது. (அ-3-29)

# பாலர் பராமரிப்பு நிலைய கலை விழா 16 ஆம் திகதி

சாவகச்சேரி நகர் புவேந்தன் பாலர் பகல் பராமரிப்பு நிலைய வருடாந்த கலை விழா எதிர்வரும் 16-ம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணிக்கு நிலையத் தலைவர் வை. இராசரத்தினம் தலைமையில் சாவகச்சேரி சிவன் கோவில் வீதியில் அமைந்துள்ள தென்மராட்சி கலைமன்ற கலாசார மண்டபத்தில் நடைபெறவுள்ளது. இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். பல்கலைக்கழக புவியியல் துறைப் பேராசிரியர் கா. குகபாலன் கலந்து சிறப்பிக்கவுள்ளார்.

சிறப்பு விருந்தினர்களாக தென்மராட்சி பிரதேச செயலக உதவிப் பிரதேச செயலாளர் செல்வி.ரஞ்சனா நவரத்தினம், யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனை பிராந்திய பல் வைத்தியர் டாக்டர் சு.பாலகுமார், தென்மராட்சி வலயக் கல்வி அலுவலக உதவிக் கல்விப் பணிப்பாளர் க.சின்னத்துரை, ஓய்வு நிலை மாவட்ட நீதிபதி மு.திருநாவுக்கரசு, யாழ். சிறுவர் நீதிமன்ற நிலையப் பொறுப்பு நன்நடத்தை அதிகாரி சி.சிவகரன், தென்மராட்சி வலயக் கல்வி அலுவலக முன்பள்ளி உதவிக் கல்விப் பணிப்பாளர் சு.பாக்கியராசா, சர்வதேச லயன்ஸ் பிரதி மாவட்ட[illegible] யலாளர் டாக்டர் லயன் சு.சி. அ[illegible] ந்தன், தென்மராட்சி பிர[illegible] சிறுவர் நன்நடத்தை உத்தி[illegible] ப.ஐங்கரன், சாவகச்சேரி நகர்கிரா[illegible] அலுவலர் வி. சிவசரணநாதன் ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளனர். இந்நிகழ்வில் ஆசியுரையை வேதாகம சிவசுரபி பண்டிதர் சிவஸ்ரீ கு. ஜெகதீஸ்வரக்குருக்கள், வண.ஏ.கே. செல்வநாயகம் ஆகியோர் வழங்கவுள்ளனர். (அ-3-29)

# பொதுநலவாய மாநாட்டில் கனேடிய அரசு பங்குகொள்ளுமா?

## கருத்துக்கணிப்பில் ஈடுபடுகிறது கனேடிய மனித உரிமை மையம்

(கொழும்பு)

இலங்கையில் அடுத்த வருடம் நடைபெறவிருக்கும் பொது நலவாய நாடுகளின் மாநாட்டில் கலந்து கொண்டு நேரடியாக இலங்கையைக் கண்டிப்பதா அல்லது முற்றாகவே மாநாட்டிற்குச் செல்லாமல் விடுவதா என்று கனேடியப் பிரதமர் ஆலோசனை நடத்தி வருகிறார்.

இந்நிலையில் சுயாதீனமான ஒரு கருத்துக் கணிப்பை, கனடா மிரர் இணையம் தமிழர் விவகாரத்தில் கனடாவில் மாற்றங்கள் ஏற்படுவதற்காக செயலாற்றி வரும் அமைப்பான கனேடிய மனிதவுரிமை மையத்துடன் இணைந்து நடத்துகின்றது.

விஞ்ஞான தரவு பூர்வமான கணிப்பிற்காக இணையத்தின் துணையுடன் நடத்தப்படும் இக் கருத்துக்கணிப்பின் முடிபுகள் கனேடியப் பிரதமர் மற்றும் அமைச்சரவையின் கவனத்திற்கு கனடாவில் ஆளும் கட்சியுடன் ஆரோக்கியமான உறவைப் பேணும் கனேடிய மனிதவுரிமை அமைப்பினால் சமர்ப்பிக்கப்படும்.

ஈழத்தமிழினம் ஒரு இக்கட்டான இராணுவ அடக்குமுறைக்கு உட்பட்டிருக்கும் தற்போதைய நிலையில் எந்த முடிபு நன்மை பயக்கும் என்பதை தீர்மானிக்க இந்தக் கருத்துக் கணிப்பு உறுதுணையாக இருக்கும் என்ற நம்பிக்கையுடன் இக்கணிப்பை பாரபட்சமற்ற முறையில் நடத்துகின்றது என தெரிவிக்கப்படுகிறது. (அ-2)

# சுவாமி விவேகானந்தரின் சிந்தனைத்துளிகள்

## மதத்தின் இரகசியம்



நீங்கள் இறைவனை உணர்ந்தால் உங்கள் முகம் மாறிவிடும். உங்கள் குரல் மாறிவிடும். உங்கள் தோற்றமே மாறிவிடும். நீங்கள் மனித குலத்திற்கு வரப்பிரசாதமாக இருப்பீர்கள்.

உடலையும் புலன்களையும் வழிநடத்தும்போது மனம் என்ற கடிவாளத்தை உறுதியாகப் பிடித்துக் கொள்ளுங்கள்.

சிறு சிறு ஆசைகளை அனுபவித்துத் தீர்க்க வேண்டும். பெரிய ஆசைகள் அனைத்தையும் விவேகத்தால் ஆராய்ந்து விட்டுவிடவேண்டும்.

இல்லறத்தில் வாழ்ந்தபடியே காமத்தையும் பணத்தாசையையும் துறந்தவர்கள் பாக்கியசாலிகள்.

மதத்தின் இரகசியம் கொள்கைகளில் இல்லை. செயன்முறையில்தான் உள்ளது. நல்லவனாக இருப்பது, நன்மை செய்வதுதான் மதத்தின் முழுப்பரிமாணம்.

ஒருவன் தன்னை வெறுக்க ஆரம்பித்துவிட்டால் அவன் கீழ்நிலைக்குச் செல்வதற்கான கதவு திறந்து விட்டது என்று பொருள்.

எந்தவேலையாக இருந்தாலும் அதனைத் தன் விருப்பத்திற்கு ஏற்றதாக மாற்றுபவனே அறிவாளி. எந்த வேலையும் அற்பமானதல்ல.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



சர்வதேச மனித உரிமை தினத்தை முன்னிட்டு காணாமல் போனோரைத் தேடியறியும் குழுவும் ஏனைய அரசியல் கட்சிகளும் சிவில் அமைப்புக்களும் இணைந்து நேற்று காலை 11 மணி க்கு கிளிநொச்சி பிரதேச செயலகத்திற்கு முன்பாக கவனயீர்ப்பு போராட்டத்தை முன்னெடுத்தனர். இப்போராட்டத்தில் காணாமல் போனோரின் உண்மையை வெளியிடு! அரசியல் கைதிகளை உடன் விடுதலை செய்! தமிழ் மக்களின் நிலங்களை அபகரிக்காதே! வடக்கில் சிவில் நிர்வாகத்தை உடன் ஏற்படுத்து போன்ற கருத்துக்கள் வலியுறுத்தப்பட்டன. (படங்கள்:- எஸ்.ஆர்.கரன்)

# துரோகத்தனமான நோக்கங்களை அடைய மாணவர்களை தூண்டவேண்டாம்

## சரத் வீரசேகர எம்.பி. கோரிக்கை

இராணுவ ரீதியாகத் தோற்கடிக்கப்பட்ட விடுதலைப் புலிகளின் சார்பு கட்சியான தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் அரசாங்கம் பேச்சு நடத்தக் கூடாது என்று ஆளும் கட்சி நாடாளுமன்ற உறுப்பினரான றியர் அட்மிரல் சரத் வீரசேகர தெரிவித்துள்ளார்.

இலங்கைக் கடற்படை அதிகாரியாகவும் குடிமக்கள் பாதுகாப்புப் படையின் தளபதியாகவும் இருந்த றியர் அட்மிரல் சரத் வீரசேகர கடந்த 8 ஆம் திகதி நாடாளுமன்றத்தில் உரையாற்றிய போதே இவ்வாறு கூறியுள்ளார்.

அவர் மேலும் கூறுகையில்,

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் இரா. சம்பந்தனும் ஐ.தே.க. நாடாளுமன்ற உறுப்பினர் ஏரன் விக்கிரமரத்தினவும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் அரசாங்கம் பேச்சுவார்த்தை நடத்த வேண்டும் என்று வாதிட்டனர்.

இந்தச் சூழ்நிலையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் பேச வேண்டும் என்று ஜனாதிபதியிடம் யாராவது கேட்பார்களேயானால் அது ஹிட்லர் அழிக்கப்பட்ட பின்னர் நாசிகளுடன் பேச வின்ஸ்டன் சேர்ச்சில் எதிர்பார்த்தது போலாகி விடும்.

வடக்கு, கிழக்கில் இலங்கை இராணுவம் தமிழர்களை அடிமைப்படுத்தி துன்புறுத்துவதாக இரா. சம்பந்தன் கூறினார். நான் இதுவரை கேட்ட மிகவும் துரோகத்தனமான கருத்து இது. உண்மையில் தமிழர்களை அடிமைப்படுத்தி துன்புறுத்தியது விடுதலைப் புலிகளா? அல்லது இலங்கை இராணுவமா? என்று இரா.சம்பந்தனிடம் கேட்கிறேன்.

விடுதலைப் புலிகளின் செயற்பாடுகளை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கண்டிக்கவில்லை. அமைதியாக இருந்தது. சட்டம், ஒழுங்கை இராணுவமும் பொலிஸாரும் தான் பேணுகின்றனர். பெருமளவு தமிழர்கள் பொலிஸில் இணைக்கப்படுவது குறித்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கவலை கொள்கிறது. இராணுவம் யாழ். பல்கலைக்கழகத்துக்குள் நுழையக் கூடாது என்று இரா. சம்பந்தன் கூறியுள்ளார்.

பல்கலைக்கழக மாணவர்களைத் தூண்டி விடாமல் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அடங்கியிருக்க வேண்டும். பிரபாகரன் நினைவாக தீபம் ஏற்றும்படி மாணவர்களை நிர்ப்பந்தித்தது தமிழ்த் தேசியக் கூட்டமைப்புதான்.

துரோகத்தனமான தமது நோக்கங்களை அடைவதற்கு அப்பாவி மாணவர்களைப் பயன்படுத்த வேண்டாம் என்று நான் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை எச்சரிக்கிறேன் என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (அ-2)

# மொழி பெயர்ப்பாளரை எம்.பி.ஒருவர் தாக்கினார்

(கொழும்பு)

தேசிய சுதந்திர முன்னணியின் பாராளுமன்ற உறுப்பினர் ஒருவர் பாராளுமன்ற மொழிப்பெயர்ப்பாளரை தாக்கியுள்ளார்.

தாக்குதலில் பாதிக்கப்பட்ட பாராளுமன்ற மொழிப்பெயர்ப்பாளரான ஆனந்த கருணாரத்ன வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

வீதி விஸ்தரிப்பு பணிக்காக பாராளுமன்ற உறுப்பினர்களின் காணியின் ஒரு பகுதியை வழங்குமாறு கோரப்பட்டுள்ளது.

இதன்போது மொழிப்பெயர்ப்பாளரது காணியை பெற்றுக் கொள்ளுமாறு பாராளுமன்ற உறுப்பினர் தெரிவித்துள்ளார்.

இதற்கு மறுப்பு தெரிவிக்கவே தாக்குதல் மேற்கொண்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. (அ-2)

# ஊர்காவற்றுறை பிரதேச சபையின் தே.வா.மாத போட்டி முடிவுகள்

(நேற்றைய தொடர்ச்சி).....

**கட்டுரைப்போட்டி (கீழ்ப்பிரிவு)**

டெ.தர்ஸ்சன் (நாரந்தனை றோ.க.மகா வித்தி),கு.சுபாஜினி (நாரந்தனை றோ.க.மகா வித்தி),வி.விஜிதரன் (தம்பாட்டி அ.த.க.பாடசாலை)

**கட்டுரைப்போட்டி (மேற்பிரிவு)**

யோ.துயித்திரா (கரம்பொன் சிறிய புஸ்ப மகளிர் மகா வித்தி),அ.வித்தியா (கரம்பொன் சிறிய புஸ்ப ம.ம.வித்தி), சே.செறின் அனிற்றா (கரம்பொன் சிறிய புஸ்ப ம.ம. வித்தி

**பொதுஅறிவுப்போட்டி**

கு.சுபாஜினி (நாரந்தனை றோ.க.ம. வித்தி), த.தனுசிகா நாரந்தனை றோ.க.ம. வித்தி, ம.யனோஜினி (நாரந்தனை றோ.க.ம. வித்தி

**அனலைதீவு பொதுநூலகம்**

**கதை சொல்லல்**

செ.விவேதினி (அனலைதீவு தெற்கு அ.த.க.பா),கோ.சர்மினி (அனலைதீவு வடலூர் அ.த. க.பா),ச.சாணுஜா (அனலைதீவு தெற்கு அ.த. க.பா).

**பேச்சுப்போட்டி**

செ.டிலோஜினி (அனலைதீவு தெற்கு அ.த. க. பா), கு.ரட்சிகா (அனலைதீவு தெற்கு அ.த. க. பா), ஆ.நிரோஜன் (அனலைதீவு வடலூர் அ.த.க.பா)

**சித்திரப்போட்டி**

(உ.துஸ்யந்தன் (அனலைதீவு சதாசிவம் மகா வித்தி),ர.நிதர்சன் (அனலைதீவு சதாசிவம் மகா வித்தி), உ.யட்சணன் (அனலைதீவு சதாசிவம் மகா வித்தி

**கட்டுரைப்போட்டி (கீழ்ப்பிரிவு)**

இ.நியுர்ஜன் (அனலைதீவு சதாசிவம் மகா வித்தி,கோ.விஜீபா (அனலைதீவு சதாசிவம் மகா வித்தி,ம.விஜயகுமார் (அனலைதீவு சதாசிவம் மகா வித்தி

**பொதுஅறிவுப்போட்டி**

ம.விஜயகுமார் (அங்கத்துவ இல. ஏ/249), இ.நிர்யுஜன் (அங்கத்துவ இல. ஏ/225), ச.சுவேதிகா (அங்கத்துவ இல. ஏ/252)

**எழுவைதீவு பொதுநூலகம்**

**கதைசொல்லல்**

கெ.ஜெனுசா (எழுவைதீவு முருகவேள் வித்தி, அ.கமிலஸ் (எழுவைதீவு றோ.க.த.க. பா), வ.சார்மிகா (எழுவைதீவு முருகவேள் வித்தி

**பேச்சுப்போட்டி**

கி.ஜெசில்டா (எழுவைதீவு றோ.க.த.பா), வி.மேரிடிஷாளினி (எழுவைதீவு றோ.க. த.க.பா), வி.மேரி தந்தலா (எழுவைதீவு றோ.க. த.க.பா)

**சித்திரப்போட்டி**

ம.கஜீபன் (எழுவைத்வு முருகவேள் வித்தி, ய.தனுசன் (எழுவைதீவு முருகவேள் வித்தி, ச.சௌமியா (எழுவைதீவு முருகவேள் வித்தி

**கட்டுரைப்போட்டி (கீழ்ப்பிரிவு)**

ம.கொண்சலா (எழுவைதீவு முருகவேள் வித்தி,ய.யனுசன் (எழுவைதீவு முருகவேள் வித்தி,அ.அன்ரனிஅரியதாஸ் (எழுவைதீவு முருகவேள் வித்தி

**பொதுஅறிவுப்போட்டி**

அ.மேரிஅஜந்தா (4 ஆம் வட்டாரம் எழுவைதீவு),கி.கன்ரன்பெர்ணண்டோ (4 ஆம் வட்டாரம் எழுவைத்வு),ம.ஸ்றெலா (4 ஆம் வட்டாரம் எழுவைதீவு). (முற்றும்)

# இலங்கை குறித்து சுயாதீன மதிப்பீடு செய்ய வேண்டும்

## ஆஸி. முன்னாள் பிரதமர் தெரிவிப்பு

(கொழும்பு)

இலங்கையின் நிலைமைகள் குறித்து சுயாதீன மதிப்பீடு செய்யப்பட வேண்டுமென முன்னாள் அவுஸ்திரேலிய பிரதமர் மெல்கம் பெரேசர் தெரிவித்துள்ளார்.

படகுமூலம் புகலிடம்கோரும் இலங்கைத் தமிழர்கள் நாடு கடத்தப்பட்டதன் பின்னர் துன்புறுத்தப்படுகின்றார்களா என்பது பற்றி விசாரணை நடத்தப்பட வேண்டுமென அவர் குறிப்பிட்டுள்ளார்.

விசாரணைகளின் மூலம் தமிழர்கள் துன்புறுத்தப்படுவது நிரூபிக்கப்பட்டால் படகுப் பயணிகளை நாடு கடத்தும் நடவடிக்கை நிறுத்தப்பட வேண்டும் என அவர் தெரிவித்துள்ளார்.

அவ்வாறான ஓர் சூழ்நிலையில் சர்வதேச சமூகம் நடவடிக்கை எடுக்க வேண்டியது அவசியமானது என அவர் கூறியுள்ளார். (அ-2)

# நலிவுற்ற மாணவர்களுக்கு 2 ஆயிரம் ரூபா நிதியுதவி

(மல்லாவி)

கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள எடிசன் தனியார் கல்வி நிலையத்தினால் வன்னி மாவட்டத்தில் இடம்பெற்ற போர் நடவடிக்கையின் போது தாய், தந்தை இருவரையும் இழந்த மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்காக தலா 2 ஆயிரம் ரூபா வீதம் நிதி உதவி வழங்கப்படுவதாக அந்நிறுவனத்தின் பணிப்பாளர் தெரிவித்துள்ளார்.

இதுவரை 300 இற்கும் மேற்பட்ட மாணவர்கள் இந்நிதியுதவியினை பெற்றிருக்கி ன்ற நிலையில் இதுவரை நிதியுதவியை பெறாத மாணவர்கள் கிளிநொச்சி வலயக்கல்வி அலுவலகத்திற்கு முன்பாக உள்ள எடிசன் தனியார் கல்வி நிலையத்தின் நிர்வாகத்தினருடன் தொடர்பு கொண்டு இவ் உதவியினைப் பெற்றுக் கொள்ளுமாறு அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார். (அ-3-15)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# பொறுப்பிலிருந்து விலக மாட்டேன்; தோல்வியிலிருந்து மீண்டெழுவோம்

## தோனி நம்பிக்கை



இந்திய அணி கடந்த 2000-ம் ஆண்டு சச்சின் தலைமையில் தென் ஆபிரிக்காவுக்கு எதிராக அடுத்தடுத்து 2-0 என்று சொந்த மண்ணில் தோல்வியடைந்த பின்பு தொடர்ச்சியாக தோல்வியடைந்ததில்லை.

தற்போது அணித் தலைவர் தோனி தலைமையிலான அணி தோல்வியடைந்துள்ளது.

தோனி அணித் தலைவராக இல்லையெனில் டெஸ்ட் போட்டிகளில் இவரது இடமே கேள்விக்குறியாக உள்ளது.

இந்நிலையில் தற்போதைய நிலைமை குறித்து அணித் தலைவர் தோனி கூறுகையில்,

இன்று நான் எளிதாக கூற முடியக்கூடிய ஒரு வார்த்தை என்னவெனில், நான் அணித் தலைவர் பொறுப்பிலிருந்து விலகுகிறேன் என்பதுதான். ஆனால் அது பொறுப்பிலிருந்து ஓடும் செயல். அதனை நான் ஒருபோதும் செய்யமாட்டேன்.

ஆனால் இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டு வாரியம்(பிசிசிஐ) இருக்கிறது.

தெரிவுக்குழுவினர் இருக்கிறார்கள். அவர்கள் முடிபெடுப்பார்கள்.

என்னைப் பொறுத்தவரையில் அணியை மீண்டும் ஒன்று திரட்டி அடுத்த டெஸ்ட் போட்டிக்கு அணியை தயார் செய்வதுதான் முக்கியம். இங்குதான் அனுபவம் முக்கிய பங்கு வகிக்கின்றது.

ஒரு அணித்தலைவராக எனக்கு இது சவால். எல்லோரும் நன்றாக விளையாடும்போது அணித் தலைமை சுலபம்தான். அப்போது தலைமையேகூடத் தேவையில்லை.

ஆனால் அணி மோசமாக இருக்கும்போது பொறுப்பு இன்னும் அதிகரிக்கிறது.

இங்கிலாந்து, அவுஸ்திரேலியா தொடர்கள் மிகவும் மோசம்தான். ஏனெனில் எங்களால் போட்டி போடமுடியவில்லை என்றும் ஆனால் தவறுகள் எங்கு என்று எங்களுக்கு தெரியும். அதனைச் சரி செய்வோம்.

இதேவேளை, மூன்றாவது டெஸ்ட் கிரிக்கெட் போட்டியில் தோல்வியடைந்ததற்கு துடுப்பாட்ட வீரர்களே காரணம்.

நாங்கள் இந்த மைதானத்தில் 450 ஓட்டங்களுக்கு மேல் சேர்த்திருக்க வேண்டும்.

இதனை துடுப்பாட்ட வீரர்கள் செய்யவில்லை. இரண்டாவது இன்னிங்சில் விக்கெட்டுகள் அடுத்தடுத்து வீழ்ந்தன.

இதனை எங்களால் கட்டுப்படுத்த முடியவில்லை என்றும் அடுத்த டெஸ்ட் போட்டியில் எழுச்சி பெறுவோம் எனவும் கூறியுள்ளார்.

# புதிய சாதனை படைத்தார் லயோனல் மெஸ்சி



ஆர்ஜென்டினா அணியின் முன்னணி கால்பந்து வீரரான லயோனல் மெஸ்சி, பார்சிலோனா கிளப் அணிக்காக விளையாடி வருகிறார்.

நேற்றுமுன்தினம் நடந்த ரியல்பெடிஸ் அணிக்கு எதிரான ஆட்டத்தில் மெஸ்சி இரண்டு கோல் அடித்தார். இதன்மூலம் அவர் புதிய சாதனை படைத்தார்.


2 கோல்களை அடித்ததன் மூலம் மெஸ்சி இந்த ஆண்டில் மொத்தம் 86 கோல்கள் அடித்துள்ளார்.

இதற்கு முன்பு ஜேர்மனி வீரர் ஜெரால்ட் முல்லர் 1972-ம் ஆண்டு 85 கோல்களை அடித்ததே சாதனையாக இருந்தது.

மெஸ்சி பார்சிலோனா அணிக்காக ஆடி 74 கோல்களையும் ஆஜர்டீனா அணிக்காக 12 கோல்களையும் இந்த ஆண்டு அடித்துள்ளார்.

இந்த ஆண்டுக்கான சிறந்த கால்பந்து விருதை நான்காவது முறையாகவும் வெல்வதற்கு உறுதி செய்துள்ளார்.

# இங்கிலாந்து பிறிமியர் லீக் கால்பந்து மான்செஸ்டர் யுனைட்டட் வெற்றி



இங்கிலாந்து பிறிமியர் லீக் கால்பந்து தொடரின் முக்கிய லீக் ஆட்டத்தில் மான்செஸ்டர் யுனைட்டட் அணி மான்செஸ்டர் சிற்றி அணியை வீழ்த்தியது.

நடப்பு சீசனில் மிக முக்கியமான ஆட்டமாக கருதப்படும் இந்தப் போட்டி மான்செஸ்டர் நகரில் உள்ள ஈஸ்ட்லேண்ட் மைதானத்தில் நடைபெற்றது.

சொந்த மைதானத்தில் விளையாடிய மான்செஸ்டர் சிற்றி அணி முதல் பாதியில் ஆதிக்கம் செலுத்தினாலும் மான்செஸ்டர் யுனைட்டட் அணி அதிரடியாக இரண்டு கோல்கள் அடித்து முன்னிலை பெற்றது.

அந்த அணியின் நட்சத்திர ஆட்டக்காரர் வேய்ன் ரூனி 16 மற்றும் 29ஆவது நிமிடங்களில் இரண்டு கோல்களை அடித்தார்.

இரண்டு கோல்கள் பின்தங்கிய நிலையில் பிற்பாதியில் மான்செஸ்டர் சிற்றி அணியின் யாயா டோர் மற்றும் சப்லடா ஆகியோர் பதில் கோல் அடித்தனர்.

ஆட்டம் 2-2 என்ற கோல் கணக்கில் சமனிலையில் இருந்தபோது, ஸ்டாப்பேஜ் நேரத்தில் 92ஆவது நிமிடத்தில் ராபின் வான்பார்சி அடித்த ப்ரீகிக் கோலால் மான்செஸ்டர் யுனைட்டட் அணி 3-2 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.

புள்ளிகள் பட்டியலில் மான்செஸ்டர் யுனைட்டட் அணி 39 புள்ளிகளுடன் முதலிடம் வகிக்கிறது. 2-வது இடத்தில் உள்ள மான் செஸ்டர் சிற்றி 33 புள்ளிகளை பெற்றுள்ளது.

# யுவராஜ், ஹர்பஜன் நீக்கம் சரியான அணுகுமுறையல்ல - கவாஸ்கர்



மும்பை டெஸ்டில் 10 விக்கெட் வித்தியாசத்தில் தோற்ற இந்திய அணி, கொல்கத்தா டெஸ்டிலும் 7 விக்கெட்டில் படுதோல்வி அடைந்தது.

தொடர்ந்து 2 டெஸ்டில் ஏற்பட்ட தோல்வியால் இந்திய அணி மீது கடும் அதிருப்தி கிளம்பியுள்ளது.

இதைத் தொடர்ந்து நாக்பூரில் நடைபெறும் 4வது டெஸ்டில் தெரிவுக்குழு அதிரடி மாற்றம் செய்தது. யுவராஜ் சிங், சகீர்கான், ஹர்பஜன் சிங் ஆகியோர் நீக்கப்பட்டனர்.

அவர்களுக்கு பதிலாக ரவீந்திர ஜடேஜா, அவன்னா, பியூஸ் சாவ்லா ஆகியோர் சேர்க்கப்பட்டனர்.

இந்நிலையில் யுவராஜ் சிங், ஹர்பஜன் சிங் பலிகடா ஆக்கப்பட்டதாக இந்திய அணியின் முன்னாள் அணித்தலைவரும், தொலைக்காட்சி வர்ணனையாளருமான கவாஸ்கர் கூறியுள்ளார்.

இது குறித்து அவர் கூறுகையில், என்னை பொறுத்தவரை சகீர்கான் நீக்கம் எதிர்பார்த்ததுதான். ஆனால் யுவராஜ் சிங், ஹர்பஜன் சிங் தான் பலிகடா ஆக்கப்பட்டு விட்டனர்.

மும்பை டெஸ்டில் ஹர்பஜன் சிங் 20 ஓவர்களுக்கு மேல்தான் வீசி 2 விக்கெட்டைப் பற்றினார். அந்த டெஸ்டில் தோற்றதற்கு ஒட்டுமொத்த வீரர்களும் சரியாக ஆடாததே காரணம். யுவராஜ் சிங்கும் 30 ஓட்டங்கள் வரை எடுத்தார்.

அவர்களை மட்டும் தெரிவுக்குழுவினர் நீக்கியது சரியல்ல. சிறப்பாக விளையாடாத மற்ற வீரர்களும் நீக்கத்துக்கு தகுதியானவர்களே.

சில வீரர்களின் அணுகுமுறை சரியில்லை. தெரிவுக்குழுத் தலைவர் சந்தீப் பட்டேல் வீரர்களின் அறையில் அமர்ந்து அவர்களிடம் பேசி அவர்களின் மோசமான ஆட்டம் பற்றி விளக்குவதே நல்லது.

இந்த மோசமான தோல்வி அவர்கள் மனதை பாதித்து இருக்க வேண்டும்.

ஆனால் சக வீரர்கள், கேலி கிண்டல் செய்வதும், கால்பந்து விளையாடுவதாக இருப்பது கவலை அளிக்கிறது. எதுவுமே நடக்காதது போல் அவர்களது செயல்பாடுகள் இருக்கின்றது. இது நல்ல அணுகுமுறை இல்லை.

அணிக்குத் தெரிவு பெற்ற பர்வீந்தர் அவன்னா முதல்தர போட்டியில் சிறப்பாக செயல்பட்டாரா ? என்று எனக்குத் தெரியாது. உள்ளூர் போட்டியில் சிறப்பாக செயல்பட்டால் பிரச்சினை இல்லை.

ஆனால் ஐபிஎல் போட்டியில் சிறப்பாக விளையாடுவதை வைத்து அணிக்குத் தெரிவு செய்யப்பட்டது அளவுகோலாக இருக்க முடியாது.

இந்த தோல்வியால் அணித் தலைவர் தோனி ஒருவரை மட்டும் குற்றம்சாட்ட முடியாது.

ஒரு அணி சிறப்பாக இருந்தால்தான் அணித் தலைவரால் செயல்பட முடியும் என்றும் அவருக்கு பதிலாக மாற்று தேவை இருப்பதாக நினைக்கவில்லை என்றும் கூறியுள்ளார்

# இந்திய அணியின் தோல்வி முன்னாள் வீரர்கள் விசனம்

இங்கிலாந்து அணிக்கெதிரான டெஸ்ட் தொடரில் 2-1 என்ற கணக்கில் இந்திய அணி பின்தங்கியுள்ளது.

3-வது தொடரிலும் இந்திய அணி தோல்வியடைந்தது குறித்து முன்னாள் வீரர்கள் கருத்துத் தெரிவித்துள்ளனர்.

முன்னாள் அணித் தலைவர் வெங்சர்க்கார் கூறுகையில்,

எப்படியும் வென்று விடலாம் என்ற மிதமிஞ்சிய நம்பிக்கையும், முக்கியத்துவம் வாய்ந்த இந்தத் தொடருக்கு சரியாக தயார் ஆகாததுமே இந்திய அணியின் தோல்விக்கு காரணம்.

அதே சமயம் இங்கிலாந்து அணி இந்த தொடருக்கு சிறந்த முறையில் தயாராகி இருந்தது என்றார்.

மறறொரு முன்னாள் அணித் தலைவர் அஜித் வடேகர் கூறுகையில்,

இங்கிலாந்து அணி டுபாய் மற்றும் இலங்கையில் விளையாடி விட்டு இந்த தொடருக்கு நன்றாக தயாராகி இங்கு வந்தார்கள்.

அதேசமயம் களத்தில் இந்திய வீரர்களின் உடல் அசைவுகள், அணுகுமுறைகளைப் பார்த்தபோது, மெத்தனமாக இருந்தது போல் தெரிந்தது.

இதேபோல் மான்டி பனேசரும், ஸ்வானும் நமது சுழற்பந்து வீச்சாளர்களை விட சிறப்பாக செயல்பட்டனர் என்றார்.

கங்குலி கூறுகையில், விக்கெட் காப்பாளராகவும் தோனி பணியாற்றுவதால் அவரது சுமையை குறைக்க அணித் தலைவர் பதவியை பிரிக்க வேண்டும்.

டெஸ்ட் மற்றும் ஒருநாள் போட்டிக்கு தனித்தனி அணித் தலைவர்களை நியமிக்க வேண்டும் என்றும் வலிறுத்தியிருக்கிறார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ்க் கூட்டமைப்புடன் அரசாங்கம் பேசக் கூடாது

## றியர் அட்மிரல் சரத் வீரசேகர தெரிவிப்பு

இராணுவ ரீதியாகத் தோற்கடிக்கப்பட்ட தமிழீழ விடுதலைப் புலிகளின் பதிலியான தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் அரசாங்கம் பேச்சு நடத்தக் கூடாது என்று, ஆளும் கட்சி நாடாளுமன்ற உறுப்பினரான றியர் அட்மிரல் சரத் வீரசேகர தெரிவித்துள்ளார். கடற்படை அதிகாரியாகவும், குடி மக்கள் பாதுகாப்புப் படையின் தளபதியாகவும் இருந்த றியர் அட்மிரல் சரத் வீரசேகர அண்மையில் நாடாளுமன்றத்தில் உரையாற்றும் போதே இவ்வாறு கூறியுள்ளார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சம்பந்தனும், ஐ.தே.க நாடாளுமன்ற உறுப்பினர் ஏரன் விக்கிரமரத்னவும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் அரசாங்கம் பேச வேண்டும் என்று வாதிட்டனர். இது நியாயமற்றது. அரசினால் முற்றாகத் தோற்கடிக்கப்பட்ட தமிழீழ விடுதலைப் புலிகளின் பதிலியாகவே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இருந்தது.

இந்தச் சூழ்நிலையில், தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் பேச வேண்டும் என்று ஜனாதிபதியிடம் யாராவது கேட்பார்களேயானால், அது, ஹிட்லர் அழிக்கப்பட்ட பின்னர் நாசிக்களுடன் பேச வின்ஸ்டன் சேர்ச்சில் எதிர்பார்த்தது போலாகி விடும்.வடக்குக் கிழக்கில், இராணுவம் தமிழர்களை அடிமைப்படுத்தி துன்புறுத்துவதாக இரா.சம்பந்தன் கூறினார். நான் இதுவரை கேட்ட மிகவும் துரோகத்தனமான கருத்து இது.

உண்மையில் தமிழர்களை அடிமைப்படுத்தி துன்புறுத்தியது விடுதலைப் புலிகளா? அல்லது இராணுவமா? என்று சம்பந்தனிடம் கேட்கிறேன். விடுதலைப் புலிகளின் செயற்பாடுகளை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கண்டிக்கவில்லை. அமைதியாகவிருந்தது. சட்டம், ஒழுங்கை இராணுவமும் காவல்துறையும் தான் பேணுகிறது. பெருமளவு தமிழர்கள் காவல்துறையில் இணைக்கப்படுவது குறித்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கவலை கொள்கிறது.

இராணுவம் யாழ்.பல்கலைக்கழகத்துக்குள் நுழையக்கூடாது என்று இரா.சம்பந்தன் கூறினார். பல்கலைக்கழக மாணவர்களை தூண்டிவிடாமல் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அடங்கியிருக்க வேண்டும். பிரபாகரன் நினைவாக தீபம் ஏற்றும்படி, மாணவர்களை நிர்ப்பந்தித்தது தமிழ்த் தேசியக் கூட்டமைப்புத்தான்.

துரோகத்தனமான தமது நோக்கங்களை அடைவதற்கு, அப்பாவி மாணவர்களை பயன்படுத்து வேண்டாம் என்று நான் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை எச்சரிக்கிறேன் என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (எ-11)

## நீதிபதி ஷிராணிக்...

நாட்டை மேன்மேலும் இராணுவக் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வரவே நீதித்துறையின் சுதந்திரத்தை அரசாங்கம் ஒடுக்க முயல்கிறது என இலங்கை கத்தோலிக்க மன்றத்தைச் சேர்ந்த அருட்தந்தை சத்தியவேல் தெரிவித்தார்.

ஊழல் மோசடியில் ஈடுபட்டவர்களுக்கு எதிராக அரசாங்கம் செயல்படுவதற்கு தடை போட வேண்டாம் என ஜனாதிபதி கூறுவது ஏற்புடையதல்ல, ஏனெனில் ஊழல் பேர்வழிகள் பலர் அரசாங்கத்திற்குள்தான் இருக்கின்றனர் என்று இலங்கை ஆசிரியர் சங்கத்தின் தலைவர் மகிந்த ஜெயசிங்க குறிப்பிட்டார்.

ஆர்ப்பாட்டம் நடத்த இடத்தில் பொலிஸ் பிரசன்னம் அதிகமாகக் காணப்பட்டிருந்தது. (எ-11)

## யாழில் 45 பேர்...

பயங்கரவாத குற்றத்தடுப்புப் பிரிவினரால் கைது செய்யப்பட்டவர்களில் சிலருக்கு கைது செய்யப்பட்டதனை உறுதிப்படுத்தும் ஆவணங்கள் அவர்களது உறவினர்களிடம் வழங்கப்படவில்லை. இதனால் யார் அவர்களை கைது செய்தனர் அல்லது கடத்திச் சென்றனர் என்பது தொடர்பில் அச்சம் ஏற்பட்டுள்ளது.

குடாநாட்டில் கடந்த சனிக்கிழமை இரவு வரைக்கும் 45 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் என ஊடகங்களில் வெளியான செய்திகள் உறுதிப்படுத்துகின்றன.

இருப்பினும் நேற்றுத் திங்கட்கிழமை மாலை வரை 20 பேர் தொடர்பான முறைப்பாடுகளே மனித உரிமைகள் ஆணைக்குழுவிற்கு கிடைக்கப் பெற்றுள்ளது. மிகுதி 25 பேர் தொடர்பில் எந்த்விதத் தகவல்களும் கிடைக்கப் பெறவில்லை.

மனித உரிமைகள் ஆணைக்குழுவிற்கு கடந்த வெள்ளிக்கிழமை வரை 17 முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றிருந்ததோடு சனிக்கிழமை ஒரு முறைப்பாடும் நேற்று இரண்டு முறைப்பாடும் கிடைக்கப் பெற்றுள்ளன.

சனிக்கிழமை சுன்னாகம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ஒருவரின் முறைப்பாடும் நேற்றுத் திங்கட்கிழமை கோப்பாய் மற்றும் சுன்னாகத்திலிருந்தும் இரு முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றுள்ளது.

இதேவேளை, அச்சுவேலிப் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட பகுதியிலிருந்து கடந்த சனிக்கிழமை இரவு 15 பேர் கைது செய்யப்பட்டதாக தகவல்கள் இணையத்தளங்களில் வெளியாகியிருந்தன. இருப்பினும் இந்தப் பகுதியைச் சேர்ந்த எவரும் முறைப்பாடு செய்யவில்லை என மனித உரிமைகள் ஆணைக்குழுவின் இணைப்பாளர் தெரிவித்தார்.

மேலும் பயங்கரவாத குற்றத்தடுப்புப் பிரிவினரால் மேற்கொள்ளப்பட்டுவரும் கைது நடவடிக்கைகள் முன்னாள் போராளிகளை மையப்படுத்தியதாகவுள்ளதோடு கைது செய்யப்பட்டவர்களில் பலர் முன்னாள் போராளிகள் எனவும் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

இதேவேளை அச்சுவேலிப் பகுதியில் கடந்த சனிக்கிழமை இரவு இடம்பெற்ற கைது நடவடிக்கையின் போது இரண்டு பெண்களும் உள்வாங்கப்பட்டிருந்தனர் எனவும் தெரிய வருகின்றது.

முன்னாள் போராளிகள் மற்றும் சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டு வரும் நிலையில் பயங்கரவாதத் குற்றத்தடுப்புப் பிரிவினரால் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டிருந்த யாழ்.பல்கலைக்கழக மாணவர்கள் 8 பேர் இதுவரை விடுவிக்கப்பட்டுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (எ-4,6)

## விடுதலையான மாண...

பி.புஸ்பரட்ணம், யாழ்.பல்கலைக் கழகத்தின் நலன்புரி சேவைகள் கிளையின் பதிவாளர் ஜெயக்குமார் ஆகியோர் இடம்பெற்றிருந்தனர்.

யாழ்.பொலிஸ் நிலையத்திற்கு பொலிஸாரின் பஸ்ஸின் மூலம் கொடுவரப்பட்ட மாணவர்கள் யாழ்.மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் எம்.சி.எம்.எம்.ஜெப்றி முன்னிலையில் வைத்து யாழ்.பல்கலைக்கழக துணை வேந்தரினால் பெற்றோர்களிடம் ஒப்படைக்கப்பட்டனர்.

இதன்போது யாழ்.பொலிஸ் நிலைய தலைமைப் பொலிஸ் பரிசோதகர் சமன் சிகேராவும் உடனிருந்தார். (எ-4)


மணல்
விற்பனைக்குண்டு
கட்டிட வேலைக்கும் பூச்சு வேலைக்கும் சிறந்த மணல் மண் இப்போது உங்கள் இடத்திற்கே கொண்டு வந்து தரப்படும்.
4 டிரக்டர் - 19,500/-
தொடர்புகளுக்கு
தீபன்
0722694462
(1106)


## விடுவிக்கப்படாத 4...

பயங்கரவாத குற்றத்தடுப்புப் பிரிவினரால் கைது செய்யப்பட்ட மற்றும் சரணடைந்த யாழ்.பல்கலைக்கழக மாணவர்கள் 11 பேர் வவுனியாவிலுள்ள பயங்கரவாத குற்றத்தடுப்புப் பிரிவில் வைத்து விசாரிக்கப்பட்டு வந்தனர். இந்நிலையில் 7 மாணவர்கள் நேற்று முன்தினம் இரவு விடுவிக்கப்பட்ட நிலையில் நேற்று யாழ்ப்பாணத்துக்கு அழைத்து வரப்பட்டனர்.

இம் மாணவர்களை அழைத்துவரச் சென்ற போதே ஏனைய 4 மாணவர்கள் வெலிகந்த தடுப்பு முகாமுக்கு மாற்றப்பட்ட விடயம் யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் உட்பட்ட குழுவினருக்கு தெரிய வந்துள்ளது. எனினும் விடுவிக்கப்பட்ட மாணவர்களை யாழ்ப்பாணத்திற்கு அழைத்து வரவேண்டும் என்பதற்காக யாழ்.பல்கலைக்கழக குழுவினர் வெலிகந்தைக்குச் செல்லாமல் யாழ்ப்பாணம் திரும்பியுள்ளனர்.

எனினும் வெலிகந்த முகாமிற்குள் தடுத்து வைக்கப்பட்டுள்ள மாணவர்களினை துணைவேந்தர் தலைமையிலான குழுவினர் இன்று பார்வையிடவுள்ளதாக தெரிய வருகின்றது.

முன்னாள் போராளிகள் தடுத்து வைக்கப்படும் இடமான வெலிகந்த முகாமிற்கு பல்கலைக்கழக மாணவர்கள் ஏன்? மாற்றப்பட்டார்கள் என காரணம் தெரியவில்லை. எனினும் இவர்கள் மேலதிக விசாரணைக்காகவே வெலிகந்த முகா மிற்கு மாற்றப்பட்டிருக்கலாம் என பல்கலைக்கழக விரிவுரையாளர் தரப்பு கூறுகின்றது.

யாழ்.பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத் தலைவரும் முகாமைத்துவப் பீட மாணவனுமான வி.பவானந்தன், யாழ்.பல்கலைக்கழக மாணவர் ஒன்றியச் செயலாளரும் கலைப்பீட மாணவனுமான ப.தர்ஷானந்த், கலைப்பீட மாணவர் ஒன்றியத் தலைவரான க.ஜனமேனன், விஞ்ஞான பீட மாணவனான ச.சொலமன் ஆகிய 4 மாணவர்களுமே இவ்வாறு வெலிகந்த முகாமிற்கு மாற்றப்பட்டுள்ளனர்.

இவ் 4 பேருக்கும் 3 மாத தடுப்புக் காவல் உத்தரவு பெறப்பட்டுள்ளதாக தெரிய வருகின்ற போதிலும் அதனை உறுதிப்படுத்த முடியவில்லை.

மேலும் இவ் நால்வரும் விடுவிக்கப்பட்ட பின்னர்தான் விரிவுரைக்குச் செல்வோம் எனவும் அதுவரை வகுப்புப் பகிஷ்கரிப்பு காலவரையற்ற ரீதியில் தொடரும் என மாணவர்கள் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (எ-4)


HATTON NATIONAL BANK LIMITED
HNB
Source: Annual Report 2009
இன்று 40ஆம் ஆண்டு நிறைவு
விழாவை கொண்டாடும்
ஹற்றன் நஷனல் வங்கி
க்கு எமது வாழ்த்துக்கள்.
கஜமுகன் ஹாட்வெயர்
147,149, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.
தொ.பே. : 021 222 2833

ALLIANCE FRANCAISE DE JAFFNA
யாழ்.பிரெஞ்சு நட்புறவுக் கழகம்
The Only Official Centre for French Language in Jaffna
பிரெஞ்சு மொழியை பிரெஞ்சு முறையில் கற்றுக்கொள்ளுங்கள்
Alliance Francaise de Paris ஆலும் இலங்கையிலுள்ள French Embassy ஆலும் அங்கீகரிக்கப்பட்ட யாழ்ப்பாணத்திலுள்ள ஒரே ஒரு பிரெஞ்சு மொழிக் கல்வி நிறுவனம் Alliance Francaise De Jaffna மட்டுமே. சர்வதேச தரம் வாய்ந்த Alliance Francaise De Jaffna இல் France மற்றும் பிரெஞ் பேசப்படும் நாடுகளுக்கு செல்வோர் மாணவர்கள் மற்றும் மொழி ஆர்வமுள்ளோர் யாவரும் கற்றுக் கொள்கிறார்கள்.
வகுப்புகள்: சனி, ஞாயிறுகளில்
புதிய பிரிவுகள் மிக விரைவில் ஆரம்பமாகின்றன. உடன் பதிவுகளை மேற்கொள்ளவும்.
(1137)
6 Koolichari - Nallur Road Jaffna. Phone : 021 222 8093
E-mail: alliancejaffna@yahoo.com


## புகைவண்டியில் மோதுண்டு 17 வயது இளைஞன் பலி

(கொழும்பு)

திருகோணமலையிலிருந்து கொழும்பு-புறக்கோட்டை நோக்கி பயணித்த புகைவண்டியில் மோதுண்டு 17 வயதான இளைஞர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

வெல்லவ, பின்னகொல்ல பாலத்திற்கு அருகில் இவ் விபத்து இடம்பெற்றதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

குறித்த இளைஞன் துவிச்சக்கர வண்டியில் சென்றுகொண்டிருந்த போது நேற்று அதிகாலை 2.15 மணியளவில் விபத்துக்குள்ளாகியுள்ளார்.

இதன்போது படுகாயமடைந்தவர் வெல்லவ வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டதன் பின்னர் உயிரிழந்துள்ளார்.

17 வயது டைய அப்துல் ஷபார் மொகமட் என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். (எ-11)

## க.பொ.த.சா...

ஒரு இலட்சத்து 54ஆயிரத்து 667 பேர் தனிப்பட்ட ரீதியாகவும் தோற்றவுள்ளனர்.

இதேவேளை குறித்த பரீட்சைக்காக நாடு முழுவதிலும் 4 ஆயிரத்து 48 பரீட்சை நிலையங்கள் அமைக்கப்பட்டு முழுமையான பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளன.

பரீட்சை நிலையங்களாக செயற்படும் பாடசாலைகளில் பரீட்சை எழுதும் மாணவர்களைத் தவிர வேறு எவரும் செல்லக்கூடாது எனவும் பரீட்சைகள் ஆணையாளர் தெரிவித்துள்ள தோடு மாணவர்கள் சரியான நேரத்திற்குள் சமுகமளிக்க வேண்டும் எனக் கேட்டுக் கொண்டுள்ளார். (எ-11)

## மாநகர சபை...

தில் ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியான ஈ.பி.டி.பி. கட்சியிலிருந்து வந்த நிசாந்தன் பின்னர் அதிலிருந்து விலகி தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் இளைஞர் அணி தலைவராக செயற்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (எ-4,6,11)

## பாதுகாப்புச்...

அவருடனான சந்திப்பு எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமைக்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்த போதிலும்,

துணைவேந்தரின்வேண்டுகோளுக்கிணங்க, அத்தினத்திற்கு முன்னர் சந்திப்பை மேற்கொள்ள ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படுவதாக தெரிவிக்கப்பட்டது.

மாணவர்களை விடுதலை செய்து பல்கலைக்கழக செயற்பாடுகளை மீளத்தொடங்குவதற்கும் பதற்ற சூழ்நிலைகளை தணிப்பதற்காகவுமே இச்சந்திப்பு இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (எ)

## வடமாகாண...

திணையும் அறிவித்துள்ளது.

பிரதம நீதியரசருக்கு எதிராக 14 குற்றச் சாட்டுக்களினை நாடாளுமன்றத் தெரிவுக்குழுவினர் முன்வைத்திருந்தனர்.

இக் குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் கட்டம் கட்டமாக விசாரணைகள் இடம்பெற்று வந்த நிலையில் குறித்த விசாரணைகள் பக்கச்சார்பானதாக இடம்பெறுகின்றது எனக்கூறி தெரிவுக்குழுவில் இருந்த எதிர்க்கட்சி உறுப்பினர்கள் வெளிநடப்புச் செய்திருந்தனர்.

இதற்கு முன்னதாக குறித்த விசாரணைகளிற்கு தமக்கு கால அவகாசம் போதாது என பிரதம நீதியரசரும் குறித்த விசாரணையில் வெளிநடப்புச் செய்திருந்தார்.

இந்நிலையில் அவருக்கு எதிராக சமத்தப்பட்ட 14 குற்றச்சாட்டுகளில் 3 குற்றச்சாட்டுக்கள் நிருபிக்கப்பட்டுள்ளதாக நாடாளுமன்றத் தெரிவுக்குழுவினர் அறிவித்திருந்தனர்.

இவ்வாறு பிரதம நீதியரசருக்கு எதிராக செயற்பட்டு அவரின் நற்பெயருக்கு களங்கத்தினை இவ் நாடாளுமன்றத் தெரிவுக்குழு ஆரம்பத்திலிருந்து ஏற்படுத்தி வருகின்றது. இதற்கு எதிர்ப்புத் தெரிவித்தே நாம் மேற்படி பணிப்புறக்கணிப்பில் ஈடுபடத் தீர்மானித்துள்ளோம் என இலங்கைச் சட்டத்தரணிகள் சங்கத்தின் யாழ்.பிராந்திய உப தலைவரும் யாழ்.சட்டத்தரணிகள் சங்கத்தின் தலைவரும் ஜனாதிபதி சட்டத்தரணியுமான திருமதி சாந்தா அபிமன்னசிங்கம் தெரிவித்தார்.

மேலும் பிரதம நீதியரசர் ஷிராணி பண்டாரநாயக்கவிற்கு பதிலீடாக புதிய நீதியரசர் நியமிக்கப்பட்டால் அதனை ஏற்கப்போவதில்லை என இலங்கைச் சட்டத்தரணிகள் சங்கம் அறிவித்துள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கதாகும். (எ-4)

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 11.12.2012 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org